www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 27-01-1995

**நான்காவது சுற்றுப் பேச்சு**

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையிலான நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் முதல் ஏழலில் (வாரத்தில்) நடைபெறலாமென நம்பப்படுகின்றது. ஆனால் அதற்கான நாள் எதுவென்பதை இரு தரப்பினரும், இச் செய்தித்தாள் அச்சுக்குப் போகும் வரை வெளியிடவில்லை.

**சிறப்புச் செவ்வி**

மூன்றாம் சுற்றுப் பேச்சின் போது விடுதலைப் புலிகள் சார்பில் தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும், சிறீலங்கா அரசு சார்பில் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்தியும் வழங்கிய "சிறப்புச் செவ்வி" உள்ளே.

# வாக்குறுதிகளை அளிக்கின்றார்களே தவிர நிறைவேற்றுகின்றார்கள் இல்லை

**கேணல் கிட்டுவின் வீரவணக்கக் கூட்டத்தில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்**

"இன்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மூன்று சுற்றுப்பேச்சுக்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இந்தப் பேச்சுக்கள் எத்திசையில் போகின்றன. பேச்சுக்களினால் மக்களின் பிரச்சினை தீருமா? அரசு என்ன செய்யப்போகின்றது? பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்குமா? தமிழ் மக்களுக்கு நிம்மதியான, நிரந்தரமான ஒரு சமாதான சூழ்நிலை ஏற்படுமா? இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படுமா? எந்தவகையில் எத்திசையில் இந்தப் பேச்சுக்கள் போகின்றன என்று எமது மக்கள் இன்று கேட்கிறார்கள். ஆகவே இன்று எனது பேச்சில், பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாகவும் எமது நிலைப்பாடு சம்பந்தமாகவும் அரசின் நிலைப்பாடு சம்பந்தமாகவும் சில விடயங்களை உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன்.



## மக்களின் அன்றாட சிக்கல்களுக்கே முதலில் தீர்வு

**இதன் பின்பே இனச்சிக்கலுக்கு தீர்வு**

- ☆ இயல்பான நிலை - சமாதான நிலை - தோன்றவேண்டும்.
- ☆ பொருண்மியத் தடை நீக்கப்பட வேண்டும்.
- ☆ எமது மக்கள் சுதந்திரமாக பயணம் செய்யக்கூடிய பாதுகாப்பான பாதை திறக்கப்படவேண்டும்
- ☆ கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்
- ☆ அகதிகளாக இடம் பெயர்ந்திருக்கும் எமது மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

## திருமலையில் நோர்வே பிரதிநிதி தலைமையில் மோதல் தவிர்ப்பு மேற்பார்வை

திருகோணமலையில் நோர்வே நாட்டுப் பிரதிநிதி **ஆடன் கோம்** தலைமையில் மோதல் தவிர்ப்பு மேற்பார்வைக்குழு செயற்படத் தொடங்கியுள்ளது. இக்குழுவில் விடுதலைப் புலிகளின் சார்பில் **இரத்தினம்பிள்ளை கலியுகவரதன், சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்** ஆகியோரும் சிறீலங்கா அரசின் சார்பில் சிறீலங்காவின் **மேல்நீதிமன்ற நீதிபதி ஜே. ஆர். எம். பெரேரா**வும், **டாக்டர் எம். ஐ. எம். மூகினும்** கடமையாற்றுகின்றனர்.

செய்தியாளர்களுக்கு செவ்வியோ, புகைப்படமோ எடுக்க அனுமதிமறுத்த நோர்வே நாட்டுப் பிரதிநிதி "எனக்கு வழங்கப்பட்டுள்ள பணியின் பொறுப்பினை நான் நன்கு உணர்வேன்; நடுநிலை தவறாது பணியாற்றுவேன்" என்று மட்டும் கூறியுள்ளார்.

இதேவேளை இந்த மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுக்களில் ஏனைய பகுதிகளில் கடமையாற்றவென விடுதலைப் புலிகளினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் விபரம் வருமாறு:

1. யாழ்ப்பாண மாவட்டக் குழுவிற்கு கோண்டாவிலைச் சேர்ந்த **ஆசீர்வாதம் சவரிப்பிள்ளை**, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **சச்சிதானந்தன் முருகநேசன்.**
2. மன்னார் மாவட்டக் குழுவிற்கு உயிலங்குளத்தைச் சேர்ந்த **இராஜநாயகம் சாமுவேல்,** அடம்பனைச் சேர்ந்த **எஸ். உலகநாதன்.**
3. முல்லைத்தீவு மாவட்டக் குழுவிற்கு முள்ளியவளையைச் சேர்ந்த **வேலுப்பிள்ளை சிவனடியார், வேலுப்பிள்ளை பாலசிங்கம்**

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

## மீன்பிடி அனுமதிக்கு காலக்கெடு சிறீலங்கா, இணக்கப்பாட்டை மீறுகிறது

வடக்கு - கிழக்கு கடற்றொழிலாளர்கள், 'பகலில் மட்டுமே மீன்பிடிக்கலாம்' என சிறீலங்கா அரசு விதித்துள்ள காலக்கெடு, இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தையின்போது சிறீலங்காவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டை மீறுவதாக உள்ளதென விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பேச்சுவார்த்தையின்போது, நேரக்கட்டுப்பாடின்றி மீன்பிடிக்க அனுமதிப்பது என்றே இணக்கம் காணப்பட்டதாக விடுதலைப் புலிகள் எடுத்து விளக்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இக்குற்றச்சாட்டு குறித்து சிறீலங்கா அரசு பரிசீலிப்பதாகவும் விரைவில் சாதகமான பதில் ஒன்று அளிக்கப்படக்கூடும் எனவும் கொழும்பு வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. ■

## இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும்

☐ பொங்கல் அன்று சிறீலங்கா ஜனாதிபதி தமிழில் செய்தி

"இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தவேண்டும்; அழிந்துபோன சொத்துக்களைப் புனரமைக்கவேண்டும். வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை, மன உறுதி, ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும்" என, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தமிழில் விடுத்த பொங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந் நோக்கங்களுக்காகவே -முதன்மையாக, இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு தாம் ஆக்கிரமித்துள்ள வீடுகளைவிட்டு இராணுவத்தினரை வெளியேறும்படி கேட்டுவருகின்றனர் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

அத்துடன் மக்களுடைய நடமாடும் சுதந்திரத்துக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய போக்குவரத்துப் பாதையைத் திறக்கவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையின் அவசியம், மீளக் குடியமர்த்தலுடன் தொடர்பானது என்பதை சந்திரிகா அம்மையார் மறந்துபோகக்கூடாது என்பதும் முதன்மையானது.

நடைமுறையில், மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட வீடுகளில் இராணுவத்தினர் இருப்பதையும் அதற்கு வாடகை கொடுத்து, நிலைமையைச் சமாளிக்க சிறீலங்கா அரசு முயல்வதையும் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே சிறீலங்கா ஜனாதிபதி பொங்கலன்று விடுத்த செய்தியை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டுமென்பது பல அவதானிகளின் ஏகோபித்த கருத்தாக உள்ளது. ■

## "மோதல் தவிர்ப்பு" தொடர்கிறது

### அமுலாக்கல் சிக்கல் குறித்து இருதரப்பு இராணுவ அதிகாரிகளும் கலந்துரையாடல்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் -சிறீலங்கா அரசிற்கும் இடையே ஏற்பட்ட மோதல் தவிர்ப்பு உடன்பாடானது, பெரும்பாலும் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பினை மிகக் கவனமானமுறையில் பின்பற்றுவதாகவும் இதற்காக பொதுமக்களின் ஒத்துழைப்பையும் அவர்கள் கோரியுள்ளதாகவும் தெரிகிறது. இதேவேளை மோதல் தவிர்ப்பின்போது ஏற்பட்ட, ஏற்படக்கூடிய சிக்கல்கள் குறித்து விடுதலைப் புலிகளின் இராணுவ அதிகாரிகளும் சிறீலங்கா அரசின் இராணுவ அதிகாரிகளும் அடிக்கடி ஆலோசனைச் சந்திப்புக்களை நடத்திவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் மட்டக்களப்புக்குச் சென்று, அங்கு நிலைமைகளை நேரடியாக அவதானித்து வருகின்றார்.

'மோதல் தவிர்ப்பு' நடைமுறைக்கு வந்தபின்னர், மட்டக்களப்பு -வாழைச்சேனை வீதியில் அமைக்கப்பட்ட சிறீலங்கா இராணுவத்தின் புதிய இராணுவச் சோதனை முகாமை அகற்றவேண்டுமென திரு. கரிகாலன் இராணுவ அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார்.

இம்மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் ஏனைய நாடுகளின் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தங்களைப் போலல்லாது இராணுவமயப்படுத்தல் பற்றி சிறீலங்கா அரசு எதுவும் குறிப்பிடாததினால் குழப்பநிலை காணப்படுகின்றது. சிறீலங்கா இராணுவம் தன்னை உள்ளாந்தரமாக கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் தாராளமாக ஈடுபடக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. அதே வேளை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை ஸ்திரப்படுத்துவதற்கான

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாக்குதல் வேகத்திற்கு ஈடுகொடுத்து படைப்புகள் உருவாக முடியாதுள்ளது

## ஒலி, ஒளி நாடா வெளியீட்டு விழாவில் புதுவை

"நடப்பது எதுவாக இருந்தாலும் அது போராட்டமாக இருந்தாலும் சரி, பேச்சுவார்த்தையாக இருந்தாலும் சரி, எந்த நிகழ்வாக இருந்தாலும் சரி, அதற்குப்பின்னால் மக்களின் பங்கிருக்கும்; மக்களின் பங்களிப்புடனேயே இங்கு எல்லாம் நடைபெறுகின்றன." இவ்வாறு 'பிஞ்சுமனம்', 'எல்லைக்கற்கள்' வீடியோ ஒளிப்பட நாடாக்களினதும், 'கடற்கரும்புலிகள்', 'கடலின் மடியில்' ஒலிப்பதிவு நாடாக்களினதும் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு வெளியீட்டு நிகழ்த்திய தமிழீழ விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "திரைப்படத்துறையில் எங்களுக்கு வேர் கிடையாது; விழுதுகள் கிடையாது. இப்போது தான் நாங்கள் முளைவிடத் தொடங்கியுள்ளோம். ஆனால், அதுவே பாய்ச்சலாக உள்ளது.

எங்களுடைய போராட்டத்தின் வளர்ச்சிச்சூழலிலே அதன் வேகத்திற்கு ஈடு கொடுத்த நாங்கள் எங்கள் வேகத்தைக் கூட்டியுள்ளோம். அதன் வெளிப்பாடாகவே நாங்கள் இன்று நான்கு ஒளி, ஒலிப்பதிவு நாடாக்களையும் ஒன்றாக வெளியிட்டுள்ளோம்.

நாங்கள் இன்று இந்த நாடாக்களை வெளியிடத் தவறினால் நாளை வேறொரு ஒளிப்பதிவு நாடாவுக்கான வேலை தொடங்கிவிடும். ஏனென்றால், இந்த ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்களை நாங்கள் வெளியிடுவதற்கு முன்னர் ஒரு சம்பவத்தை இட்டு அவர்களுக்கு சமர்ப்பணம் செய்து அல்லது அவர்கள் நினைவுகளை நெஞ்சிலே நிறுத்தி நாங்கள் ஒரு ஒலிப்பதிவு நாடாவை தயாரித்துக் கொண்டிருக்கும் பொழுதே இன்னுமொரு சம்பவம் நடந்து விடுகிறது.

கடற்புலிகளின் தளபதி சூசை என்னிடம் அண்மையிலே கடற்கரும்புலியாகி வீரச்சாவெய்திய மேஜர் வித்தியைப் பற்றி இரண்டு பாடல்களைச் செய்யுங்கள் என்று கேட்டபோது, நான் இயலாது என்று சொன்னேன். ஏனென்றால், நீங்கள் இடிக்கும் வேகத்திற்கு நாங்கள் அடித்துக் கொடுக்க முடியாது என்று சொன்னேன்.

எங்களுடைய போராட்டத்தின் உச்சக்கட்ட வேகத்திற்கு எங்களால் ஈடுகொடுத்து செய்ய முடியாது என்பது ஒரு பெரிய உண்மை.

இரண்டு நாட்கள், ஐந்து நாட்கள், பத்து நாட்கள் இடைவெளியிலே அவர்கள் பெரிய வெற்றிகரத் தாக்குதல்களை செய்து முடிக்கிறார்கள் எங்களுடைய பிள்ளைகள். ஆனால், நாங்கள் ஐந்து நாட்களிலோ, பத்து நாட்களிலோ ஒரு ஒலிப்பதிவு நாடாவைத் தயாரித்து வெளியிட முடியாது. இதனாலேயே அப்படிச் சொன்னேன் என்றார்.

இந்த வெளியீட்டு விழா விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் இ.ம. அன்பரசன் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் தொடர்பகப் பொறுப்பாளர் க. பத்மநாதன் மங்கள விளக்கேற்றி வைத்தார். இரு நிமிட அமைதி வணக்கத்தை அடுத்து விழா தொடங்கியது.

'பிஞ்சுமனம்', 'எல்லைக்கற்கள்' என்ற இரண்டு வீடியோ திரைப்படங்களும், 'கடற்கரும்புலிகள்', 'கடலின் மடியில்' என்ற இரு பாடல் ஒலிப்பதிவு நாடாக்களுமே வெளியிடப்பட்டன. தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் இவற்றை வெளியிட்டுவைக்க, தமிழீழ நிதர்சனம் பொறுப்பாளர் தமிழன்பன் நாடாக்களைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்ச்செல்வன் அவர்களால் கலைஞர்கள் பாராட்டப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ■

# நாலரை ஆண்டுகளில் 266 மீனவர்கள் கடற்படையினரால் படுகொலை

■ 14 மீனவர்கள் கைது ■ 81 பேர் காணமற் போயுள்ளனர்

யாழ். மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு யூன் மாதத்திற்குப் பின்னர், ஏற்பட்ட படை (இராணுவம்) நடவடிக்கையையடுத்து, கடற்படையினரால் இதுவரை 266 அப்பாவி மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 14 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டும் 81 மீனவர்கள் காணாமல்போயுமுள்ளனர்.

யாழ். மாவட்டக் கடற்பகுதிகளில் சுயதொழிலை செய்துவந்த, அப்பாவி மீனவர்களுக்கு எதிராக, சிறீலங்கா அரசு கொண்டுவந்த கடல்வலயச் சட்டத்தையடுத்து, மேற்குறித்தோர் இறந்தும் கைது செய்யப்பட்டும் காணாமலும் உள்ளனர். சாதாரண கணிப்பீடு ஒன்றின்மூலம் இப்புள்ளி விபரங்கள் கிடைத்துள்ளன. மேலும் மீனவர்கள் பற்றிய விபரங்கள் ஆராயப்பட்டும் வருகின்றன. முந்நூறுக்கு மேற்பட்டோர் கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகி, சிறு சிறு காயங்களுக்கும் பெரும்பாதிப்புக்களுக்கும் இலக்காகியுள்ளனர். எனினும் அதுபற்றிய விபரங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

மீனவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்தும் தொழில் உபகரணங்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. பல கோடிக் கணக்கில் வள்ளங்கள், பொறிகள், படகுகள், பல தரப்பட்ட வலைகள் கடற்படையினரால் நாசமாக்கப்பட்டும் கடலில் வீசப்பட்டதினாலும் இச்சேதம் ஏற்பட்டுள்ளது.

வடமராட்சியிலேயே கூடுதலான மீனவர்கள் கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் 128 மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். வடமராட்சி கிழக்கில் 31 மீனவர்கள் காணாமல்போயுள்ளனர்.

மேலும் வலிகாமம் மேற்கு ஒன்றியம், காரைநகர் ஒன்றியம், தீவக ஒன்றியம், மண்டைதீவு கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு, குருநகர் கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு ஆகியவற்றில் மொத்தமாக 73 மீனவர்கள் கொல்லப்பட்டும், 31 மீனவர்கள் காணாமலும், 10 மீனவர்கள் கைது செய்யப்பட்டும் உள்ளனர். இதைத்தவிர வடமராட்சி கிழக்கில் 65 மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். குடும்பத் தலைவர்களும், இளைஞர்களுமே இவ்வாறு கொல்லப்பட்டும், காணாமற்போயும், கைது செய்யப்பட்டவர்களுமாவார்கள். யாழ். மாவட்டத்தில் வல்வெட்டித்துறை கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரிவில் மட்டும் 65 மீனவர்கள் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ■

# 70 வீத குழந்தைகள் பலி

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் செப்டெம்பர் வரை ஒன்பது மாத காலங்களில் பிராயத்திற்கு முதிராத எண்பத்தி ஏழு குழந்தைகள் பிறந்து இறந்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவு வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, மூச்சுக் குழாய் நோய் தொடர்பாக இக்காலப் பகுதிகளில் 29 குழந்தைகளும் மூச்சடைப்பு நோயினால் முப்பத்தியிரண்டு (32) குழந்தைகளும் இறந்துள்ளதாகச் சுட்டிக்காட்டும் அப்புள்ளி விபரம் செப்ரிசீமியா நோயினால் ஏழு குழந்தைகள் மரணம் அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மேற்படி நான்கு வகையான நோயினால் சுமார் எழுபதுசதவீதமான குழந்தைகள் இறந்ததாகவும் இருபத்தைந்து சதவீதமான குழந்தைகள் ஏனைய நோய்களினால் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# தமிழீழ முதனிலைத் தேர்வு சங்கானைக் கோட்டத்தில் அதிகபுள்ளி பெற்றோர்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் 1994 ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற, ஐந்தாம் ஆண்டு இறுதித் தேர்வான தமிழீழ முதனிலைத் தேர்வுக்கான பெறுபேறுகளின்படி, சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் வருமாறு:

சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலையைச் சேர்ந்த செல்வரத்தினம் அகிலன் 458 புள்ளிகளையும், பொன்னாலை வரதராசப்பெருமாள் வித்தியாசாலையைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் உமைபாலன் 438 புள்ளிகளையும், பண்ணாகம் மெய்கண்டான் மாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி சாந்தினி மயில்வாகனம் 437 புள்ளிகளையும் பெற்று 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களை பெற்றுக்கொண்டவர்கள் ஆவர். ■

# சமாதானப் பேச்சுக்களை இறுதிவரை...

**கேள்வி: நீண்டபேச்சுக்களை நடாத்தவேண்டுமெனக் கூறுகிறீர்கள். அடுத்தகட்டப் பேச்சுக்கள் தொடர்பாக என்ன முடிவு எடுக்கப்பட்டது.**

பதில்: அடுத்தகட்டப் பேச்சு நடத்தும் நாள் இதுவரையில் நிர்ணயிக்கப்படவில்லை. ஏனெனில் அது தொடர்பாக இருதரப்பினர் இடையே அடிப்படைப் பிரச்சினை குறித்துப் பேச்சு நடாத்தவேண்டியிருகிறது.

**கேள்வி: என்ன அந்த அடிப்படைப் பிரச்சினைகள்.**

பதில்: அவர்களுடைய வேண்டுகோளுக்கும் எமது வேண்டுகோளுக்கும் இடையில் சில பிரச்சினைகள் இருக்கின்றது. அதாவது பாதைப் பிரச்சினை தொடர்பாக சில வேறுபாடு இருக்கின்றது.

**கேள்வி: பாதைப் பிரச்சினை தொடர்பாக தெளிவுபடுத்த விரும்புகிறீர்களா?**

பதில்: நாங்களும் இருபாதைகளையும் திறக்கத்தயார்; அதாவது பூநகரி, ஆனையிறவு. ஆனால் பூநகரிப் பாதைத் திறப்பது தொடர்பாக மிகநீண்டப் பேச்சுக்கள் நடாத்தப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**கேள்வி: விடுதலைப் புலிகள் அமைப்பு பூநகரி இராணுவ முகாம் அகற்றப்படவேண்டுமென உறுதியாக இருக்கிறார்கள். இது தொடர்பாக இன்று பேசப்பட்டதா?**

பதில்: ஆம். இறுதி முடிவு தீர்மானிக்கப்படவில்லை.

**கேள்வி: அரசு என்ன மாதிரியான நிலையில் பூநகரி முகாமை அகற்ற இருக்கிறது?**

பதில்: நாங்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அகற்றுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

**கேள்வி: புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக என்னென்ன விடயங்கள் பேசப்பட்டன?**

பதில்: நாங்கள் முன்பு ஒரு திட்டத்தை முன்வைத்தோம். இன்று அவர்கள் எங்களுக்கோர் திட்டத்தை முன்வைத்தார்கள். அதாவது (எண்ணுரிமை) அடிப்படையில் திட்டங்களை செயற்படுத்துமாறு அவர்கள் திட்டங்களில் குறிப்பிட்டிருந்தது.

**கேள்வி: எந்த (எண்ணுரிமை)அடிப்படையில் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன?**

பதில்: அவர்கள் கூறுகிறார்கள். மின்சாரம் என்றாலும் அவசியமான பகுதிகளுக்கு முதல் வழங்குமாறும் நீர்ப்பாசனம், சீர்திருத்தம் போன்றவை அவசியத் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுமாறு கேட்டனர். அது மிகவும் சரியானது. இதை நாங்கள் அவர்களிடம் முன்னர் கேட்டிருந்தோம். இதேபோன்று மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் ஏற்படுத்துவது மூலம் ஆவணசெய்யப்பட்டால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க செயற்படுத்தப்படலாம்.

**கேள்வி: அரசு எதிர்பார்ப்பது போல் பெப்ரவரி முதல் வாரத்தில் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுமா?**

பதில்: இல்லை. அப்படித் தீர்மானிக்கப்படவில்லை. இது குறித்து அவர்கள் பூரண ஒத்துழைப்புத் தருகிறார்கள்.

**கேள்வி: மூன்றாம்கட்டப் பேச்சுவார்த்தையில் என்னென்ன ஆராயப்பட்டன?**

பதில்: இருதரப்பினரும் புனர்வாழ்வு, மோதல் தவிர்ப்பு பற்றிப் பேசி இணக்கம் கண்டனர். ஆனால் இன்னமும் தெளிவாகப் பேசப்படவேண்டிய முதன்மையான விடயங்கள் உள்ளன. இப்போதுகூட சில பகுதிகளில் எமது பாதுகாப்புப் படைகள் மீண்டும் உலாத்துகின்றன. இவை குறித்து விடுதலைப் புலிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இது தொடர்பாக நாம் பாதுபாப்பு அமைச்சுடன் பேசித் தான் முடிவுகள் எடுக்கவேண்டும். இன்றைய பேச்சுக்கள் வெற்றிகரமாக நடைபெற்றன. ■

# அன்று யூகோ....

குடியரசுகளிலும் பதற்றம் ஏற்படுகின்றது. ஏனென்றால் இன்று தனிநாடுகள் ஆகிவிட்ட இவற்றில் 30 மில்லியனுக்கு மேற்பட்ட ருஸ்ய இனத்தவர் சிறுபான்மையினராக சிதறிக் கிடக்கின்றனர். இவர்கள் நலனைப் பாதுகாக்க வேண்டியதும் தனது கடமை என அடிக்கடி யெல்ட்சின் கூறி, ருஸ்ய பெரும் தேசிய வாதத்தை உயிர்ப்பித்து வருகின்றார். இப்போது தென் கோக்கசஸ் பகுதி எல்லைகளை மூடி செச்சென்யாவுக்கு வெளி உதவிகள் கிடைக்காமல் தடுக்கும் முயற்சிகளிலும் ருஸ்ய இராணுவம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகின்றது. கிடைத்த செய்திகளின்படி அசர்பைஜான், ஜோர்ஜியா ஆகிய இரு நாடுகளுடனான தனது எல்லையை மூடிவிட்டதாக ருஸ்யா அறிவித்தது இந்நோக்கத்திலேயாகும்.

எனவேதான், எல்லாவகைகளிலும் செச்சென்ய படையெடுப்பு என்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது ஆகிவிட்டது. பல நூற்றாண்டு காலமாக புகைந்து உள்ளுக்குள் புரையோடிக் கிடந்த வரலாற்றுக் காரணிகள் இப்போது உயிர் பெற்று இயங்கத் தொடங்கிவிட்டன. இவற்றின் விளைவுகள் என்னாகும் என்பது இனி வரலாறு சொல்ல வேண்டிய செய்தியாகப் போகின்றது. ■

# ஈ.பி.டி. யினரின் தாக்குதலுக்கு நாள்தோறும் இலக்காகும் தீவக மக்கள்

தீவகப் பகுதிகளில் அப்பாவிப் பொதுமக்கள், காரணமின்றி ஈ. பி. டி. பியினரால் தாக்கப்படுவதாகத் தெரியவருகின்றது. சிறு குற்றந்தானும் புரியாதவர்களைக் கூட, விசாரணைக்கென்று அழைத்துச்செல்லும் ஈ. பி. டி. பியினர், அவர்களை மிருகத்தனமாகத் தாக்கிவிட்டு, இருட்டறையில் சில நாட்கள் அடைத்துவைத்து விடுகின்றனராம். சாதாரண நிலையில் ஈ. பி. டி. பி உறுப்பினர்கள் போகும்போது, தமக்கு அறிமுகமான ஒரு பொதுமகனைக் கட்டியணைத்து, உறவுகொண்டாடி, குசலம் விசாரித்துச் சென்றுவிட்டு, மதுவெறியில் திரும்பிவரும்போது, அதே பொதுமகனை நையப்புடைத்துவிட்டுச் செல்லும் சம்பவங்கள் அன்றாட நிகழ்வாகிவிட்டதாகவும், நயினாதீவு தவிர்ந்த ஏனைய இடங்களில் ஈ. பி. டி. பியினரின் 'அட்டகாசம்' அளவிற்கதிகமாகக் காணப்படுவதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. ■

# இராணுவ சிப்பாய் ஒருவர் ஆயுதங்களுடன் ஓட்டம்

## பொலநறுவையில் சம்பவம்

பொலநறுவைப் பகுதியில் இராணுவப் பாதுகாப்புப் பிரிவு ஒன்றில் கடமைபுரியும், இராணுவத்தைச்சேர்ந்த ஒருவர், ரீ-56 ரகத் துப்பாக்கிகளில் இரண்டு உட்பட, மேலும் பல ஆயுதங்களை அபகரித்துக்கொண்டு தப்பியோடி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஜயந்திபுரப் பகுதியில் குடியிருக்கும் இவர், 120 இற்கும் அதிகமான ரவைகள் மற்றும் மகசின்கள், கைக்குண்டுகள், தொலைநோக்குக் கண்ணாடிகள் என்பவற்றுடன் தப்பியோடியிருப்பதாகவும் காவல் திணைக்களம் அவரைக் கைது செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகின்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாதையை விடு

**கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், யோசப் வாஸ்** அடிகளை முக்திப்பேறு உடையவராக பிரகடனப்படுத்துவதற்கான தனது திருயாத்திரையின் போது இலங்கைத்தீவின் மண்ணை முத்தமிட்டார்.

**'மண்ணை முத்தமிடுவது'** என்பது 'மண்' அங்கு வாழும் மக்களின் குறியீடாகத் திகழ்கிறது என்பதையே வெளிப்படுத்துகிறது. அந்த மண்ணை மாற்றார், ஆக்கிரமித்தால் அதில் வாழும் மக்கள் விடுதலை பெறுவதற்கு அம்மக்கள் மண்மீட்புப் போரில் ஈடுபடவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகி விடுகின்றனர். இவ்வகையில் தமிழீழ மக்கள் 'இந்த மண் எங்களின் சொந்த மண்' என்பதை நிலைநாட்ட நடாத்தும் வாழ்க்கைப் போராட்டமே தமிழீழ மண்மீட்புப்போர். இந்தப் போரினை தமிழீழ மக்கள் தமது **தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்** தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினூடாக பெருந்தியாகங்களுடன் உறுதியுடன் நடத்தி வருகின்றனர். எனவே மண்ணின் பெருமையை முத்தமிட்டு, உலகுக்கு உணர்த்தும் **திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர்,** தமிழீழ மக்களின் மண்மீட்புப் போரின் நியாயத்தையும் நீதியான அமைதியின்பால் தமிழீழ மக்களுக்கு உள்ள உண்மையான தேடுதலையும் புரிந்து உலகுக்கு உரைக்கவேண்டிய கடமையை இலங்கைத்தீவிலிருந்து சுமந்து செல்கிறார் என நாம் நம்புகிறோம். **திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர்** சமாதானத்தை விரும்புகின்றவர். என்ற வகையில் தமிழீழ மக்களின் அமைதி வாழ்வுக்கான பாதையை விடும்படி சிறீலங்காவிடம் வலியுறுத்த வேண்டுமென்பது தமிழ் மக்களின் உளவிருப்பு.

இது ஒருபுறமிருக்க, தமிழ்க் கத்தோலிக்கர்கள் ஏழாயிரம் பேருக்குமேல் யாழ். குடாநாட்டில் இருந்து கொழும்பு சென்று திருத்தந்தையை தரிசிக்க ஆயத்தமாகியபோதிலும், சிறீலங்கா அரசு பாதுகாப்பான பாதையாகிய பூநகரிப் பாதையைத் திறக்க மறுத்தமையினால், ஒரு சில ஆயிரம் கத்தோலிக்கர்களே திருத்தந்தையின் விழாவில் கலந்து கொள்ள முடிந்தமை வேதனைக்குரிய விடயம். இராணுவ வாதிகளின் உபதேசங்களுக்கு தலைசாய்த்து மக்களின் அடிப்படை உரிமையான மதச்சுதந்திரத்தையே சிறீலங்காவின் புதிய அரசு குழிதோண்டிப் புதைத்துள்ளது.

மேலும் தமிழீழ மக்கள் கூறுவதுபோல், இலங்கைத்தீவின் வடக்கு -கிழக்குப் பிரதேசங்கள் அவர்களின் சொந்தமண். சொந்த மண்ணிலிருந்து எப்படி வெளியேறி எப்படி உள்வருவது என்று முடிவுசெய்யும் உரிமை தமிழீழ மக்களின் மனித உரிமை. நடமாடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, தான் நினைத்த பாதையினால் வரும்படி நிர்ப்பந்திக்க சிறீலங்கா அரசுக்கு உரிமையில்லை என்பது மட்டுமல்ல, பாதைத்திறப்பில் சிறீலங்கா காட்டும் மேலாதிக்கப் போக்கானது, தமது இறைமையைத் திணிப்பதற்கான ஒரு வழியே. அவ்வாறே தமது சொந்த மண்ணில் ஆக்கிரமிப்பாளராக நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தை ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை விட்டு விலகும்படியும், முகாம்களுள் இருக்க வேண்டுமெனவும் கேட்கும் உரிமை மண்ணின் சொந்தக்காரர்களான தமிழீழ மக்களுக்கு உண்டு.

இவ்வாறு இராணுவ வல்லாதிக்கத்தன்மை மண்ணில் இருந்து தற்காலிகமாகவேனும் அகற்றப்பட்டாலே, இடம் பெயர்ந்து அகதிகளாகவாழும்மக்கள் சகஜநிலைக்குத் திரும்ப முடியும். வாழ்வு வழமைக்கு வரமுடியும். அத்தகைய ஒரு சூழலிலேயே இரு தேசிய இனங்களுக்கும் இடையிலான அரசியல் பேச்சுவார்த்தை அர்த்தம் உள்ளதாக முடியும். எனவேதான் அரசியல் பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்கும்படி, பொருண்மியத்தடைகளை நீக்கி, பாதையைத் திறந்து மக்கள் வாழ்வியலை வழமைக்குத் திரும்ப விடும்படி, தமிழீழத்தின் அரசு நோக்கிய அரசின் ஆட்சியாளரான தமிழீழ விடுதலைப் புலிகள் சிறீலங்காவைக் கேட்கின்றனர். **மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கான பாதையைத் திறந்துவிடு என்பதே பாதை திறப்பின் அடிப்படைக் கோரிக்கை.** ■

# கிளி. மாவட்டத்தில் ஜெயராசா சாதனை

☆ 4 "ஏ" பெற்ற முதல் மாணவன்

**கி**ளிநொச்சி மாவட்டத்தில் முதன்முதலாக 4 ஏ பெறுபேற்றினைப் பெற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் பரமசாமி ஜெயராசா க. பொ. த(உயர் தரம்) பரீட்சையில் சித்திஅடைந்துள்ளார். வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த இவர் மாவட்ட ரீதியில் 2 ஆம் இடத்தைப் பெற்ற அதே சமயம், 3 A, B பெறுபேற்றைப் பெற்ற வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவன் திருநாவுக்கரசு சிவரூபன் மாவட்ட மட்டத்தில் வர்த்தகப் பிரிவில் கூடிய புள்ளியடிப்படையில் முதலிடம் பெற்றுள்ளார் . ■

## மக்கள் தொடர்புச் சாதனங்கள்
# உண்மையையும் நேர்மையையும் தார்மீக நெறியாகக் கொள்ள வேண்டும்

"புலிகளின் குரல்" வாழ்த்துச் செய்தியில் தலைவர் பிரபாகரன்

**ஒ**ரு விடுதலைப் போராட்ட சூழலில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு முக்கியமானது. இவை மக்களுக்கு உண்மையான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும். உண்மையையும் நேர்மையையும் தார்மீக நெறியாகக் கொள்ளவேண்டும். உண்மையைத் தாங்கிவரும் கருத்துக்களே மக்களைக் கவர்ந்துகொள்கிறது. மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்கிறது.



இவ்வாறு தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொசையான 'புலிகளின் குரல்' நான்காவது ஆண்டு சேவையை பூர்த்தி செய்தது குறித்து வெளியிட்ட ஆசிச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

**அச்செய்தி வருமாறு;**

எமது விடுதலை இயக்கத்தின் அதிகார பூர்வ வானொசையான 'புலிகளின் குரல்' இன்றுடன் (21. 11. 1994) தனது நான்காவது ஆண்டு சேவையை நிறைவு செய்கிறது. இரண்டாம்கட்ட தமிழீழப் போர் தொடங்கியதை அடுத்து ஆரம்பமான எமது வானொசை, யுத்த சூழலால் எழுந்த நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் ஈடுகொடுத்து, பிரமாதமானமுறையில் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் ஈட்டப்பட்ட இந்த சாதனை பாராட்டுக்குரியது.

உன்னதமான இலட்சியப் பாதையில் முன்னேறிச் செல்லும் எமது விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தும் நோக்குடன் பல்வேறு சக்திகள் செயற்பட்டு வருகின்றன. நீண்டகாலமாகவே, இந்த சக்திகள் எமது போராட்டத்திற்கு எதிராக, திட்டமிட்ட ஒரு பிரச்சார யுத்தத்தை நடத்தி வருகின்றன. உண்மைகளை மறைத்து, பொய்களை திரித்து, விசமத்தனமான பிரச்சாரத்தை செய்து வருகின்றன. மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து, மக்களை குழப்பித் திசைதிருப்பி போராட்டத்தை நசுக்கிவிடும் நாசகார நோக்கில் இந்தப் பிரச்சாரப் போர் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

பொய்மையையே பிரதான ஆயுதமாகக்கொண்டு எமது போராட்டத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இந்தக் கருத்துப் போரை முறியடிக்க நாம் உண்மையை ஆயுதமாக ஏந்தினோம். அந்த உண்மையின் குரலாகவே 'புலிகளின் குரல்' ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

பொய்களுக்கு ஆயுள் குறைவு; அவை வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் சென்றுவிடுகின்றன. ஆனால் சத்தியம் என்றும் சாவதில்லை. அது வரலாற்றின் ஆன்மாவாக என்றும் நிலைத்து நிற்கும்.

ஒரு விடுதலைப் போராட்ட சூழலில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு முக்கியமானது. இவை மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துச்சொல்லவேண்டும். உண்மையான விளக்கங்களைக் கொடுக்கவேண்டும். உண்மையையும், நேர்மையையும் தார்மீக நெறியாகக்கொள்ளவேண்டும். உண்மையைத் தாங்கிவரும் கருத்துக்களே மக்களைக் கவர்ந்துகொள்கிறது. மக்களை விழிப்புணர்வுகொள்ளச் செய்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை, செய்தித் தொகுப்பாக, கருத்துத் தொகுப்பாக, கலைவடிவமாக மக்களுக்கு எடுத்துக்கூறி எமது வானொசை மக்களின் நல்லெண்ணத்தைப்பெற்று வருவதைக்காண நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். 'புலிகளின் குரல்' வானொசையின் அபாரமான வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்துவரும் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கும், கலைஞர்களுக்கும், ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

'புலிகளின் குரல்' தனது பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எனது நல்லாசிகள். ■

# இன்றில்லாது விட்டால் என்றுமே போராட்ட இலக்கியம் படைக்கமுடியாது

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு.வெ.இளங்குமரன்

"**இ**ந்தச் சூழலில், இக்காலத்தில் போராட்ட இலக்கியம் படைக்க முடியாதுவிடில் வேறு எக் காலத்திலும் இதைப் படைக்க முடியாமல் போய்விடும்."

இவ்வாறு தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் தெரிவித்தார். யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். இலக்கியப் பேரவையின் 93 ஆம் ஆண்டின் சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசும் போது, "இந்த மண்ணில் நடைபெறும் போராட்ட நிகழ்வுகள் இலக்கியங்களாகப் படைக்கப்படவேண்டும்; எமது தலைவர் இந்த மண்ணை மீட்டெடுப்பதுடன் எமது கலாச்சாரம் பண்பாடுகளை பேணுவதற்கும் பெரும் அக்கறை செலுத்தி வருகின்றார். இதற்காகவே தலைவர் அவர்களால் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் போராளிகளான இருவரின் நூல்கள் பரிசில்களைப் பெறுகின்றன. இந்த இரு நூல்களும் போராட்ட நிகழ்வுகளின் பதிவாகவே அமைகின்றன. போராளிகள் தவிர்ந்த வெளியில் உள்ளவர்களும் சமகால நிகழ்வான போராட்ட இலக்கியங்களைப் படைக்க வேண்டும். இது இந்த மண்ணின் தேவையுமாகும்" என்றார். ■

# அகதிமுகாமில் வாழ்ந்த மாணவன் 3 ஏ, சி, சித்தி

**நா**ன்கு ஆண்டு காலமாக அகதிமுகாமில் தங்கியிருந்து பாடசாலை சென்று வந்த மாணவன் ஒருவர், க. பொ. த (உ/த) தேர்வில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைச் பெற்றுள்ளார்.

காரைதீவு விபுலானந்த மத்திய மகாவித்தியாலயத்தில் பயின்ற எஸ். இளங்கோ என்ற மாணவன் உயிரியல் விஞ்ஞான பிரிவில் 3 'ஏ' க்களையும் ஒரு 'சி' யையும் பெற்றுள்ளார்.

இம்மாணவனின் திறமையைப் பலரும் பாராட்டியுள்ளனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசியத் தலைவரின் கையொப்பத்தை பார்க்க பேராவல்

"தலைவர் பிரபாகரனின் கையொப்பத்தைப் பார்ப்பதற்கு ஆவலாக இருக்கின்றோம்; எனவே தலைவர் பிரபாகரனின் கையொப்பம் இட்ட மோதல் தவிர்ப்பு உடன்பாட்டு ஆவணத்தை வெளியிடுவீர்களா?" இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்காவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இதற்குப் பதிலளித்த அவர், "பிரேமதாசா மீதான அரசியல் சம்பந்தமான குற்றச்சாட்டு விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டபோது, அதில் கையெழுத்திட்டவர்களின் 20 பேரின் கையெழுத்துக்களை வெளியிடவேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது. அதேபோல் இப்போதும் பிரபாகரனின் கையெழுத்தைப் பரிசீலிக்கப் போகின்றீர்களா? என அவர் கேள்வி எழுப்பினார். ■

# புலிகளின் மேலாதிக்கம் வலுக்கின்றது

## இராணுவத்தின் ஆற்றல் வீழ்ச்சியுறுகின்றது

■ சிரேஸ்ட படை அதிகாரி எச்சரிக்கை

விடுதலைப் புலிகளின் படை (இராணுவம்) ரீதியான வலுவும், மேலாதிக்கமும் அதிகரித்துவரும் வேளையில், படையணிகளின் ஆற்றல் வெகுவேகமாக வீழ்ச்சி அடைந்துவருவதாக சிரேஸ்ட படை அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளதாக ஐலண்ட் செய்தித்தாள் தெரிவிக்கின்றது.

"நிரந்தரப் படையினரதும் தொண்டர் படையினரதும் படையணிகளின் ஆற்றல் வெகு வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. 50 அதிகாரிகள் உட்பட, 850 சிப்பாய்களைக் கொண்டது ஒரு படையணியாகும். பல்வேறு காரணங்களால் பலர் படையைவிட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, தற்போது படையணிகளின் வலு 650 ஆகக் குறைந்துள்ளது. சில படையணிகளில் 24 அதிகாரிகளும் 600 சிப்பாய்களும் மட்டுமேயுள்ளனர்.

கடந்த அரசின் காலத்தில் குறிப்பிட்ட அகவை (வயது) எல்லைக்கு முன்பாக ஓய்வு பெறுவதற்குத் தடையிருந்தும், ஏற்கனவே இவ்வாறு 17 லெப்ரினன்ட் கேணல்கள் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றிருந்தனர்.

படையணிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்ப, உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென, சிரேஸ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சில போர்ப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களைத் தடுக்க, பன்னிரண்டு படையணிகள் தேவைப்படுகின்றன. ஆனால் ஏழு படையணிகளே தற்சமயம் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு அரசு தாக்குதல் நடவடிக்கைகளை அதிகரிக்கும் முகமாக புதிதாகப் பதினாறு படையணிகளை உருவாக்கியிருந்தபோதிலும், பலர் படையை விட்டு வெளியேறியதால், இந்த அணிகள் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளில் காவல் கடமையில் ஈடுபடவேண்டியுள்ளது. விடுதலைப் புலிகள் படையினரின், இப்பலவீன நிலையைச் சரியாகப் புரிந்துகொண்டுள்ளனர். பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் பட்சத்தில், அவர்கள் படை ரீதியில் மேலான நிலையிலேயே தொடர்ந்தும் இருப்பார்கள் என்றே படைத்தளபதிகள் நம்புகின்றனர்" என, அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார் என்றும் அச்செய்தித்தாளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# பாப்பரசரை பௌத்தபிக்குகள் பகிஸ்கரித்தனர்

"500, 000 பேர் கலந்துகொள்வார்கள் என்று மிகப்பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாப்பாண்டவரின் திருப்பலிக்கு, பௌத்த பிக்குகளின் பகிஸ்கரிப்பு பயமுறுத்தலினால் 50,000 மக்களே கலந்துகொண்டனர்" என இலண்டன் பத்திரிகையொன்றின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்ரோபர் தோமஸ் செய்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது செய்தியில், "பாப்பாண்டவர் பௌத்தமதம் பற்றி தனது நூலில் எழுதியிருந்த குறிப்பொன்று தொடர்பாக பிக்குகள் ஏற்படுத்திய சர்ச்சையையும் பகிஸ்கரிப்பு பயமுறுத்தலையும் தீர்த்துவைக்க சிறீலங்கா அரசு எடுத்த முயற்சி தோல்வியடைந்ததால், சிறீலங்கா அரசுக்கு பெருத்த தலைகுனிவு ஏற்பட்டது.

சிறீலங்காவில் பௌத்த பிக்குகள் அரசியலில் தலையிடுவதையும் தீவிரவாத வன்முறைகளில் இறங்குவதையும் வழக்கத்தில் கொண்டுள்ளனர். பாப்பாண்டவர் காலிமுகத்திடலில் உரையாற்றியபோது, பௌத்த இனவாத பிக்கு ஒருவரினால் 1959 இல் சுட்டுக்கொல்லப்பட்ட திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிலையைப் பார்க்கக்கூடியதாக இருந்தது என்றும் எழுதியிருந்தார்.

கொழும்பில் சர்வமதத் தலைவர்களையும் பாப்பாண்டவர் சந்திக்க ஏற்பாடாகி இருந்த கூட்டத்திற்கு இந்துமத, கிறீஸ்தவ மத, முஸ்லீம் மதத்தலைவர்கள் வருகை தந்திருந்தபோதும் பௌத்தமதபீட பிக்குகள் ஒருவர் கூட வராதது இங்கு குறிப்பிடத்தக்கது. ■

# சிறீலங்கா ஜனாதிபதி திருப்தி தமிழ் குழுக்கள் பரிதவிப்பு

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, பௌத்த பேரினவாதத்தை சமாளிப்பதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்து வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா அரசியலில் பௌத்த அழுத்தக் குழுக்களின் விளைவுகளால் தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டுக்கு தீர்வு காணமுடியாத நிலை நிலவுவது இலங்கைத் தீவின் வரலாறு. இந்நிலையில் சிறீலங்கா ஜனாதிபதி தான் முன்வைக்க முயலும் புதிய அரசியல் தீர்வுகள் குறித்து பௌத்த மகா சங்க தலைமைக் குருக்களையும், பௌத்த சங்க அங்கத்தவர்களையும் சந்தித்து கலந்தாலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதே பௌத்த சங்கத்தினரே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பாதுகாப்பாளர் எனக்கூறி, முன்னர் தனது தந்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பண்டா -செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாது தடுத்ததுடன் தனது தந்தையையே கொலை செய்வித்தமை போன்ற துரதிஸ்ட சம்பவங்கள் மீளவும் இடம்பெறாது தடுக்க முயன்று வருகிறார் என அவதானிகள் கருதுகின்றனர். ■

# வாக்குறுதிகளை அளிக்கின்றார்கள்...

அரசு கூறியது. அத்திட்டத்தை எமது பரிசீலனைக்கு முன்வைப்பதாகச் சொல்கிறது. உங்கள் தீர்வுத்திட்டத்தை நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். நீங்கள் தீர்வுத்திட்டத்தை வைத்தால் நாங்கள் பரிசீலனை செய்யத் தயார். எங்கள் கொள்கை என்னவென்று உங்களுக்குத் தெரியும். விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த இருபது ஆண்டுகளாக இரத்தம் சிந்தி உயிர் கொடுத்து ஓர் இலட்சியத்திற்காகப் போராடி வருகின்றமை உங்களுக்குத் தெரியும். தமிழ் மக்களுக்கு ஒரு தனித்துவமான ஒரு ஆட்சிவேண்டும் என்று. நாங்கள் இந்தக்கொள்கையை வரித்துக்கொண்டிருக்கின்றோம். நீங்கள் ஒரு மாற்றுத் திட்டம் தந்தால், அதனை பரிசீலனை செய்கிறோம். அதைப்பற்றி விவாதிப்போம்; அதில் உள்ள நன்மை தீமைகளை ஆராய்வோம். ஆனால் இதற்கிடையில் சந்திரிகா பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இப்போது திட்டமொன்று எங்களிடம் இருக்கின்றது. அது பண்டா -செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகவும் கூறியிருக்கின்றார். அது நாற்பது ஆண்டுகளுக்கு முன்புசெய்யப்பட்ட ஓர் இடைக்கால உடன்பாடு. அது ஒரு முழுமையான தீர்வுத்திட்டம் அல்ல. அது வடமாகாணத்தில் ஒரு பிரதேசசபை, கிழக்கில் 1 அல்லது 2 அல்லது 3 ஆக அமையலாம். அச்சபைகள் நினைத்தால் ஒன்று சேரலாம். அத்திட்டத்தை ஒரு சுயாட்சி அதிகாரப்பரவலாக்கலில் ஒரு முழுமையான திட்டமாக நாம் ஏற்கமுடியாது. அவற்றின் அடிப்படையில் ஏதாவது தீர்வுத்திட்டத்தைக் கொண்டுவரும் என்று சொன்னால் அது எமது மக்களுக்குத் திருப்தியான திட்டமாக இருக்காது. இந்த நூற்றாண்டில் நாற்பது ஆண்டுகாலமாக நாங்கள் போராடிவருகின்றோம். பிரதேசசபைகள் பழையகதை. வரலாற்றுப் புதைகுழியில் இருந்து தூக்கி எமக்குத் தரக்கூடாது. அடிப்படையில் சந்திரிகா தன் தந்தையாருடைய அரசியல் வழியில் போகவிரும்புகின்றார்; என்றாலும் இன்னும் 70 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று, 1927 ஆம் ஆண்டு பண்டா பகிரங்கமாகக்கூறிய விடயத்தை, அதாவது தமிழ் மக்களுக்கு சமஸ்டி ஆட்சி வழங்கவேண்டும்; சமஸ்டித் தீர்வை முன்வைக்கவேண்டும்.

'எமது மக்கள் சுதந்திரமாக தமது மண்ணின் பிரஜைகளாக வாழவேண்டும். செல்வநாயகம் காலகட்டம் வேறு; பிரபாகரன் காலகட்டம் வேறு. அந்தக்காலத்தில் செல்வநாயகம் சமஸ்டியைக் கைவிட்டு ஏதாவது ஒரு தற்காலிக உடன்படிக்கைக்கு இணங்கியிருந்தார். அதைக்கூட சிங்கள அரசியல்வாதிகள் கிழித்தெறிந்துவிட்டார்கள். ஆனால் தற்பொழுது உள்ள காலம் வேறு. இது பிரபாகரன் யுகம். 20 ஆண்டுகாலமாக இரத்தம் சிந்திப் போராடிய நாங்கள் பெரும் சாதனைகளைச் செய்துள்ளோம். அதேவேளை, 30,000 மக்களை இழந்துவிட்டோம். 7000 போராளிகளை இழந்திருக்கின்றோம். அற்புதமான தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் போராட்டம் ஒரு கட்டத்திற்கு வளர்ச்சிகண்டிருக்கின்றது; வெற்றி கண்டிருக்கின்றது. சுயாட்சி அமைப்புக்களை இங்கு தோற்றுவித்திருக்கின்றோம். காவல் துறை என்றும் நீதித்துறை என்றும் நிர்வாகத் துறை என்றும் பல கட்டுமானங்களை கட்டியெழுப்பி இங்கு சுயாட்சி நடைபெறுகின்றது.

**வடக்கு - கிழக்கை தாயகமாக உடைய தன்னாட்சியுள்ள சமஸ்டி கட்டமைப்பை சிறீலங்கா முன்வைத்தால் நாம் பரிசீலனை செய்வோம்**

இன்றைய போராட்ட வளர்ச்சியை கருத்தில் எடுத்து, சந்திரிகா ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவேண்டும். இதை நாம் சிறீலங்கா அரசிடம் கூறியுள்ளோம். எமது தலைவர் எப்படியான தீர்வுத்திட்டம் இருக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றார். வடக்கு -கிழக்கைத் தாயகமாக உடைய தன்னாட்சி உள்ள சமஸ்டிக் கட்டமைப்பை அரசு தந்தால் அதை நாம் பரிசீலனை செய்வோம். இவ்வளவு காலமும் இரத்தம் சிந்திப்போராடி, பல துன்பங்களை எல்லாம் அனுபவித்து எத்தனையோ வீரத்தளபதிகளை இழந்து எத்தனையோ பொதுமக்களை இழந்து, இப்பொழுது நாங்கள் உறுதியான அத்திவாரத்தில் இருந்துகொண்டும், ஆகப்பணிந்துபோய் ஏதாவது தா, அதை நாங்கள் எடுத்துக்கொண்டு போகிறோம் எனக்கேட்கக்கூடாது. நாங்கள் இறுக்கமாக நன்கு உறுதியாக நின்று ஒரு நிரந்தரமான தீர்வை, நிலையான தீர்வை எடுக்கவேண்டும். எமது மக்கள் மிகவும் நிம்மதியாக வாழவேண்டும். இவ்வளவு காலமும் பட்ட கஸ்டங்கள் இனிமேலும் இருக்கக்கூடாது. ஆகவே அரசியல் தீர்வாக இருந்தால், அது ஒரு நிரந்தரமான தீர்வாக எமது மக்களது சுதந்திரத்தையும் கௌரவத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் தீர்வாக அமையவேண்டும். இல்லாவிட்டால் இதில் அர்த்தமில்லை. கடந்த சிறீலங்கா தேர்தல் பிரச்சாரத்தின்போது சந்திரிகா கூறியிருக்கின்றார். ஏற்கனவே தமிழீழம் பிரிந்துபோய்விட்டது. ஐ. தே. ஆட்சியில் தமிழ் மக்கள் பிரிந்துபோய் இருக்கிறார்கள். தனியரசொன்றை அங்கே பிரபாகரன் நடத்திக்கொண்டிருக்கிறார். நான் ஆட்சிக்கு வந்தால், தமிழீழத்தை -தமிழ் மாநிலத்தை சிங்கள தேசத்துடன் ஒன்றுசேர்ப்பேன் என்று கூறியிருக்கின்றார். நாம் மிகவும் தெளிவாகவும், நிதானமாகவும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு வருகின்றோம். எந்தநிலையிலும் பேச்சுவார்த்தையை மீறுவதோ, குழப்பும் நோக்கமோ, போர் நிறுத்தத்தை மீறும் நோக்கமோ எமக்கு இல்லை. சமாதானப் பேச்சுக்களை நாம் ஆகக்கூடிய கவனத்தில் எடுத்து, எவ்வளவுக்கு எவ்வளவு இந்த அரசு எமக்கு நீதி வழங்கப்போகிறது என்பதை நாம் பார்க்கப்போகின்றோம். இராணுவ அழுத்தத்திற்குப் பணிவது வரலாற்றுத் தவறாக முடியும். சந்திரிகா அரசு, முன்னைய பேரினவாத அரசைவிட முற்போக்கான பார்வையுள்ள அரசு எனச்சொல்லலாம். அவரது முற்போக்கு எப்படி என்றால், இராணுவ ரீதியாக இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது; சமாதான ரீதியில்தான் தீர்க்க முடியும். அதுவும் விடுதலைப் புலிகளுடன் பேசித்தான் சமாதானத்தைக் காணமுடியும் என்ற ஒரு நிலைப்பாட்டை இவர் எடுத்துள்ளார். அது முற்போக்கானது. அதில் நின்றுகொண்டு மக்களிடம் ஒரு ஆணையைப் பெற்றார். பரந்துபட்ட சிங்கள மக்கள் இவ்வாணையை அவருக்குக் கொடுத்துள்ளனர். ஆகையால் சந்திரிகா அம்மையார் துணிந்து தைரியத்துடன் சில முடிவுகளை எடுக்கவேண்டும். இராணுவ அழுத்தங்களுக்கு விட்டுக்கொடுக்காமல் சில முடிவுகளை எடுக்கவேண்டும். தமிழ் மக்களின் அபிலாசைகளை உணர்ந்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும். இப்படியான ஒரு நேர்மையான பாதையிலே சந்திரிகா செல்ல விரும்பினால், அவருடன் ஒத்துழைத்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நாம் தயாராக இருக்கின்றோம். ஆகவே சிறீலங்கா அரசிடம் தான் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் முழுபொறுப்பும் தங்கியுள்ளது. ஆனால் இராணுவ அழுத்தங்களுக்குப் பயந்து, இராணுவப் போர் உபாயங்களைக் கைவிடாமல், பேரினவாத சக்திகளுக்கு அடிபணிந்து, இந்தப் பேச்சுவார்த்தையின் மூலம் எமது மக்களுக்கு நீதி வழங்கத் தவறினால், அது சந்திரிகா அம்மையார் செய்யும் பெரியதொரு வரலாற்றுத் தவறாகும். பேச்சுவார்த்தை ஒட்டுமொத்தத்தில் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு சிறீலங்கா அரசு எடுக்கும் முடிவுகளில்தான் தங்கியுள்ளது.

இவ்வாறு கொட்டும் மழையில் இடம்பெற்ற தளபதி கேணல் கிட்டுவின் நினைவுநாளில் திரு. அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார். ■

### இனச்சிக்கல்த் தீர்வு விவகாரம்

# ஐ.தே.க. அணுகியவிதம் மேற்குலகிற்குப் பிடிக்கவில்லை

**- சந்திரிகா -**

"கடந்தகால அரசின் இனச்சிக்கல் தீர்வுக்கான போக்குகள் குறித்து, அதிருப்திகண்ட பிரான்சு, நெதர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் 1991, 19-92 ஆண்டு காலப்பகுதியில் தங்கள் உதவிகளை இடைநிறுத்தியிருந்தன". இவ்வாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப் புலிகளுடனான சிறீலங்கா அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பான இந்தியாவின் மனப்போக்கு தனக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜனாதிபதி சந்திரிகா இராணுவத் தலைமையுடன் விட்டுக்கொடுப்புடன் கூடிய சமரசம்

**தமிழீழத்திலிருந்து ஜெயராஜ்**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் இராணுவத் தலைமைப்பீடத்திற்கும் மற்றும் பாதுகாப்புச் செயலாளருக்கும் இடையில் இருந்த முரண்பாடு, பரஸ்பர விட்டுக்கொடுப்பின் மூலம் சீர்செய்யப்பட்டுள்ளது போல் தெரிகின்றது. இதற்காக இனச்சிக்கல் தொடர்பான முன்னைய நிலைப்பாட்டில் இருந்து சந்திரிகா அரசு மாறியுள்ளமையும் தெளிவாகியுள்ளது.

பொதுத்தேர்தலின்போதும், அதைத் தொடர்ந்துவந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் இனச்சிக்கலுக்கு 'அரசியற் தீர்வே ஒரேவழி' எனக்கூறிய சந்திரிகா குமாரதுங்கா, ஜனாதிபதிப் பதவியேற்ற பின்னர் தனது கொள்கையிலிருந்து பின்வாங்கியுள்ளதை ஜனாதிபதித் தேர்தலின் பின்னான நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. இராணுவத் தலைமையுடனும், பாதுகாப்புச் செயலாளருடனும் அவர் செய்துகொண்டுள்ள சமரசம் இதனை வெளிக்காட்டும் முதன்மையான அம்சமாகும்.

சந்திரிகா குமாரதுங்கா பிரதமராக இருந்த சொற்பகாலத்தில் இராணுவத்தை கடுமையாகவே விமர்சித்துள்ளார். அவர் பி. பி. சிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் "அவர்கள் -இராணுவத்தினர் - தமக்குத்தாமே அரசாக இருந்துவந்துள்ளனர். நாம் உயர் அதிகாரிகளோடு கதைத்தபோது, அவர்களது அனுமதியின்றி எதையும் தீர்மானிக்கக் கூடாது என அவர்கள் கருதுவதை உணரமுடிந்தது" எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், அவ்வாறான பேச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா பேசவில்லை. இது பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பு தன்னிடம் இருப்பதின் காரணத்தினாலோ அன்றி அண்மைக்கால அரசியலில் நடந்த சம்பவங்களினாலோ என்பது திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது. ஆனால் காரணம் எதுவாக இருப்பினும் இனச்சிக்கல் தொடர்பான அணுகுமுறையிலும் இராணுவம் தொடர்பான தனது கொள்கைகளிலும் மாற்றம் செய்துள்ளார் என்று திடமாகவே கொள்ளமுடியும்.

> "சிறிலங்கா இராணுவத் தலைமையைப் பொறுத்து, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாக இருக்கவில்லை; ஏனெனில் அரசு நேரடியாகப் புலிகளுடன் பேசுவதென்பது, புலிகளுடனான போரில் இராணுவம் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டதாக முடியும் என்பதோடு, இராணுவம் இதுவரை பெற்றுவந்த நலன்களை இழக்கவேண்டிய நிலையும் ஏற்படலாம் என்ற அச்சமுமே காரணமாகும்."

சந்திரிகா அரசு பதவியேற்ற பொழுது அரசியல்வாதிகளில் மட்டுமல்ல, உயர் அரச அதிகாரிகள், பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள் மீதும் ஊழல், அதிகாரத் துஸ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கத் தவறவில்லை. இந்த வகையில் **பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வணசிங்கா மீதும்,** பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா மீதும் உத்தியோகபூர்வமாக இல்லாதுவிடினும், பகிரங்கமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டேவந்தன.

இந்தவகையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசின் இறுதிக்காலத்தில் அவசர அவசரமாகக் கையொப்பம் இடப்பட்ட 350 கோடி ரூபா பெறுமதியான ஆயுதக்கொள்வனவு விவகாரம் தொடர்பாக ஜெனரல் கமில்டன் வணசிங்கா மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.



பயன்பாட்டிற்கு உதவாததாகத் தெரிவிக்கப்படும் இவ்வாயுதக் கொள்வனவில் கமில்டன் வணசிங்கா நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தார். இவ்வாயுதக் கொள்வனவிற்காக அவர் ரஸ்சியா சென்றுமிருந்தார். இதில் அவர் பெருந்தொகைத் தரகை இதன் மூலம் பெற்றுக்கொண்டதாகக் குறைகூறப்பட்டது.

இதேசமயம் பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா தனது பதவிக் காலத்தில் அதாவது பொதுசன ஐக்கிய முன்னணி எதிர்க்கட்சியாக இருந்தபோதும், அதற்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் வரையும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு எதிராகச் செயற்பட்டதாகவும், சந்திரிகா குமாரதுங்கா பிரதமராகப் பதவியேற்றபோது கூட, அவரது உத்தரவுகளுக்குப் பணிய மறுத்ததாகவும், அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இதேசமயம், பிரதமராகச் சந்திரிகா பதவியேற்று, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொண்டபோது, அரசின் கொள்கைக்கு இவர்கள் விரோதமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் போர் நிறுத்தம் செய்யவோ அன்றி, பாதை ஒன்றைத் திறந்துவிடவோ இவர்கள் முழுமையான எதிர்ப்புக் காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக ஜெனரல் கமில்டன், இவ்விவகாரத்தில் அரசின் கொள்கைக்கு எதிரான அணிக்குத் தலைமை தாங்கியதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறு, சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதிப் பதவி ஏற்பதற்குமுன், இவர்களுடனான முரண்பாடு தீவிரமாகமே இருந்தது. ஆகையினால், **'சந்திரிகாவின் தேர்தல் வெற்றியானது அதிகாரமட்டத்தில் மட்டுமல்ல, அதிகாரிகள் மட்டத்திலும் மாற்றத்தைக்கொண்டுவரும்' என்றே எதிர்பார்க்கப்பட்டது.**

இவ் எதிர்பார்க்கையானது கொழும்பு ஜனாதிபதித் தேர்தலை அடுத்து அரசியல் வட்டாரங்களில் மட்டுமல்ல செய்தித்தாள்கள் மட்டத்திலும் முதன்மை இடம்பெற்றது. விரைவில் இராணுவக் கட்டமைப்பு மாற்றம் இடம்பெறவுள்ளது என்பதோடு, யார்? யார்? வெளியேற்றப்படவுள்ளார்கள், யார்? யார்? பொறுப்புக்களுக்கு நியமிக்கப்படவுள்ளார்கள் என்ற ஊகங்களும் தெரிவிக்கப்பட்டன.

இதனை மேலும் ஊர்ஜிதப்படுத்துமாப்போல் அடுத்த பாதுகாப்புச் செயலாளர் பதவி ஒரு குடிசார் (சிவில்) சேவை அதிகாரிக்கே வழங்கப்படும் என்றும், இராணுவத்தினருக்கு அப்பதவிகள் வழங்கப்படமாட்டாது எனவும் அரசதரப்புச் செய்திகளே கூறின.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்குப்பின் இடம்பெற்ற சம்பவங்கள் இவ்வாறான ஊகங்கள், அபிப்பிராயங்கள் யாவற்றையும் மாற்றியுள்ளன. இராணுவக் கட்டமைப்பில் விரைவில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றும், சிரேஸ்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் பதவிநீடிப்பு வழங்க அரசு முடிவுசெய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. இதில் 'பாதுகாப்புச் செயலாளர் கமில்டன் வணசிங்காவினதும், இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவினதும், பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வாவினதும் பதவிக்காலம் நீடிக்கப்பட்டமையானது, அரசிற்கும் ஆயுதப்படை மற்றும் காவற்றுறையினருக்கும் இடையில் சமரசங்கள் செய்யப்பட்டுவிட்டன' னபதையே காட்டுவதாகவுள்ளது.

சிறீலங்கா இராணுவத் தலைமையைப் பொறுத்து, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கவில்லை. ஏனெனில் அரசு நேரடியாகப் புலிகளுடன் பேசுவதென்பது, புலிகளுடனான போரில் இராணுவம் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டதாக முடியும் என்பதோடு, இராணுவம் இதுவரை பெற்றுவந்த நலன்களை இழக்கவேண்டிய நிலையும் ஏற்படலாம் என்ற அச்சமுமே காரணமாகும்.

**போரில் இராணுவம் பெற்றுவந்த சலுகை என்பது சிறியதல்ல. ஆண்டுதோறும் சுமார் 2500 கோடி ரூபாவை இராணுவம் விழுங்கியதென்றால், இராணுவம் பெற்ற சலுகையைக் குறைத்து மதிப்பிடமுடியாது. இதைத்தவிர ஆயுதக் கொள்வனவு மற்றும் இராணுவத்திற்கான ஏனைய பொருட்கள் கொள்வனவுடன் சம்பந்தப்பட்டவர்கள் பெற்ற தரகுத் தொகைகள், அவர்களில் பலரைக் கோடீஸ்வரர் ஆக்கியுள்ளது. சந்திரிகா அரசே இக்குற்றச்சாட்டைப் பகிரங்கமாக முன்வைத்திருந்தது.**

இதைத்தவிர வடபகுதிமீது விதிக்கப்பட்ட பொருண்மியத் தடையைத் தொடர்ந்தும், பல இராணுவ அதிகாரிகள் பெரும் சொத்துத் தேடியிருந்தனர். அரசால் அங்கீகரிக்கப்பட்ட பொருட்களுக்கான அனுமதியில் கூடப் பெருந்தொகைப் பணத்தை அவர்கள் இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையில் இராணுவத்தினரில் பலருக்கு அதிலும் அலுவலகங்களில் கடமைபுரியும் இராணுவ உயரதிகாரிகளுக்குப் பொருளீட்டும் ஒரு துறையாகவே போர் இருந்தது. இந்தவகையில் போர் என்பதை அவர்கள் வலியுறுத்துவதிலேயே அக்கறைகாட்டினர்.

> "அவர்கள் - இராணுவத்தினர், தமக்குத்தாமே அரசாக இருந்து வந்துள்ளனர். நாம் உயர் அதிகாரிகளோடு கதைத்தபோது, அவர்களது அனுமதியின்றி எதையும் தீர்மானிக்கக்கூடாது என அவர்கள் கருதுவதை உணரமுடிந்தது."
> - பி. பி. சிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா.

இதனால்தான் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு இராணுவம் பெரும் முட்டுக்கட்டையாக எழுந்தது. இதற்கு, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்காலத்தில் தம்மைப் பலப்படுத்திக்கொள்வார்கள் எனக்காரணம் கூறப்பட்டது. இதில் அரசும் இராணுவத்தைச் சம்மதிக்கச்செய்ய எடுத்தமுயற்சிகள் தோல்விகண்டது. இதற்கு இராணுவம் மிகப்பலமான சக்தியாக வளர்ந்துவிட்டமையும் இராணுவ உயர்மட்டத்தில் சந்திரிகா அரசிற்கு ஆதரவானநிலை இல்லாமையுமே காரணமாக இருந்தது.

இந்நிலையிலேயே சந்திரிகா அரசு இராணுவத்தினருடன் விட்டுக்கொடுப்புடன்கூடிய சமரசம் ஒன்றைச்செய்துகொள்ள முன்வந்தது. இதேசமயம் இராணுவத் தலைமையும் சற்று இறங்கிவர வேண்டிய நிலைமையிலேயே இருந்தது. அதிகாரம் முழுமையாக பொதுசன ஐக்கிய முன்னணியின் கைக்கு மாறிவிட்ட நிலையில் அரசை எதிர்ப்பது சிலசமயம் பாதிப்புக்களை ஏற்படுத்திவிடக்கூடும் என்பதை இராணுவத் தலைமை உணர்ந்திருக்கக்கூடும். இந்தவகையில் இராணுவத் தலைமையும் சற்று இறங்கிவந்து, அரசுடன் சமரசம் செய்துகொள்ள முன்வந்தது.

**இதன்பிரகாரமே சந்திரிகா அரசானது இனச்சிக்கலுக்கு அரசியற்தீர்வு என்ற 'ஒரு தடப் பாதைபோல்' அறிவித்திருந்த தனது கொள்கைப் பிரகடனத்தை மாற்றம்செய்து, தற்பொழுது 'இருதடப்பாதை போல்' மாற்றியுள்ளது. இதன் பிரகாரம் அரசு இனச்சிக்கலுக்கு அரசியற்தீர்வு என்பதை மட்டும் நம்பியிராது, இராணுவத்தையும் பலமாக அதாவது அரசியலுக்குச் சமமாக வளர்த்துச்செல்லத் தீர்மானித்திருப்பதையே இது காட்டுகின்றது.**

அரசின் இக்கொள்கை மாற்றத்தை உறுதிப்டுத்தும் அம்சங்கள் பலவற்றைக் குறிப்பிடமுடியும். இதில் முதன்மையாக இராணுவச் செலவீட்டில் எந்தவிதமான வெட்டையும் ஏற்படுத்தாமல், அரசு இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளமையும், இராணுவக்கட்டமைப்பு மாற்றத்தையோ அன்றி உயரதிகாரிகள் மாற்றத்தையோ செய்யாது, அவர்களுக்குப் பதவிநீடிப்பு வழங்கியதையும் புதிய ஆயுதக் கொள்வனவிற்கு அனுமதி வழங்கியதையும் சுட்டிக்காட்டமுடியும்.

இதேசமயம் இராணுவம் தனது பங்கிற்கு, அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஒத்துழைப்பது என்றும் அரசின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவதில்லை என்றும் உறுதிப்படுத்தியது போன்றுள்ளதை நிகழும் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன. இதன் பின்னரே நத்தார் திருநாளுக்கு முன்பதாக இரண்டாம்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை தொடக்கப்படும்



என்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா அறிவித்தார் எனவும் பேசப்படுகின்றது. அவ்வறிப்பின்படியும் உரியகாலத்தில் பேச்சுவார்த்தை தொடக்கப்படவில்லை என்பதும் அறிந்ததே.

இதேவேளை, இருதரப்பினரும் சில விடயங்களைப்பற்றி பேசுவதில்லை என்ற ரீதியிலும் காரியங்கள் இடம்பெற்றுள்ளதுபோல் சம்பவங்கள் உணர்த்துகின்றன. இதில் ரஸ்சிய ஆயுதக்கொள்வனவு பற்றியது முதன்மையானதொன்றாகும். இதன்பிரகாரம் ரஸ்சிய ஆயுதப்பேரம் கைவிடப்படலாம் என்றும், அதேசமயம் இவ்விவகாரத்தில் ஜெனரல் கமில்டன் போன்றவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைக் கண்டும் காணாமலும் அரசு விடலாம் என்றும் ஊகிக்கமுடிகின்றது.

இதனை உறுதிப்படுத்துமாப் போன்றே ரஸ்ய ஆயுதக்கொள்வனவு பற்றி அரசு சாதித்துவரும் மௌனமும், புதிய ஆயுதக் கொள்வனவிற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளமையும் உள்ளன. அதாவது ரஸ்ய ஆயுதவிடயம் மறைக்கப்படுவது தொடக்கப்பட்டுள்ளது எனலாம்.

இந்நிலையில் சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசு, இனச்சிக்கல் விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை, ஆட்சிப் பொறுப்பேற்று சுமார் ஒருமாத காலத்திற்குள் மாற்றிக்கொண்டுள்ளது எனக்கூறுவதில் தவறில்லை. ஆனால் இராணுவத்தினருக்கு தற்பொழுது அரசு செய்யும் விட்டுக்கொடுப்பும் இராணுவத்தைத் திருப்திப்படுத்தவும், இதேசமயம் வளர்ச்சியடையவுமே வழிவகுக்கும்.

ஆனால் அரசின் இந்நிலைப்பாடானது இனச்சிக்கலுக்கு அரசியல்தீர்வுகாண எத்தகைய தூரம் உதவும் என்பதே கேள்வியாகும். ஏனெனில் இராணுவத்தைப் பொறுத்த இவ்வணுகுமுறை முன்னைய அரசுகளின் அணுகுமுறையில் இருந்து பெரிதாக மாறுபட்டிருப்பதாகத் தெரியவில்லை. ■

**நன்றி: 'ஈழநாதம்'**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்று சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றும் எம்மக்களின் அன்றாட பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை

## தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

"பொருளாதாரத்தடையைத் தளர்த்துதல் என்பதில் எரிபொருள்மீதானதடை மிக முதன்மையானதாகும்; மிக அவசியமானதாகும். எரிபொருள்தடை முற்றாக நீக்கப்படும் நிலையை ஏற்படுத்தினால் எரிபொருட்களைக் கொண்டுவருவது சுலபமாக இருக்கும். இதனை விடுத்து சில ஆடம்பரமான பொருட்களின் மீதான தடையை நீக்குவதாவது ஒரு விளம்பரத்திற்காகச் செய்யப்படுவதாகும்" என 22.01.95 இல் நடைபெற்ற போராளி வசந்தனின் மிருதங்க அரங்கேற்றத்தில் நிகழ்த்திய உரையில் தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கூறினார்.

### சமாதான பேச்சுக்களின் போதும் எம்மக்கள் விழிப்பாகவும் உறுதியாகவுமிருத்தல் அவசியம்

"சமாதானப் பேச்சுக்கள் நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த அரசியல் சூழ்நிலையில் எமது மக்கள் விழிப்பாகவும் மிகுந்த உறுதிப்பாட்டுடனும் இருக்கவேண்டியது அவசியம்; சந்திரிகா பதவியேற்றபின் எமது மக்களின் உரிமை வழங்கப்படும், சமாதான சூழ்நிலை ஏற்படும் என்ற நம்பிக்கை அனைவர் மத்தியிலும் ஏற்பட்டிருந்தது. ஆனால் சந்திரிகாவின் தொடர்ச்சியான அரசியல் அணுகுமுறைகள் செயற்பாடுகள் அனைத்துமே அந்த நம்பிக்கையைச் சிதறச்செய்கின்றது. முதற்கட்டப்பேச்சுக்கள்கூட அந்த நம்பிக்கையை நீட்டக்கூடியதாக இருக்கவில்லை. முதற்கட்டப் பேச்சுவார்த்தையின்போது பேசப்பட்ட எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்கு ஒரு காரணம் இருந்தது. அப்போது அவரின் கையில் முழுமையான அரசியல் அதிகாரம் இருக்கவில்லை. முதலாம்கட்டப்பேச்சுக்கள் தொடர்ந்தபோது, எமது தலைவருக்கு எழுதிய கடிதத்தில் தொடக்கப் பேச்சுக்கான ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து அனுப்பியிருந்தார். அதில் வடபகுதியில் வாழுகின்ற மக்கள் இன்று அன்றாடம் அனுபவிக்கின்ற அவலங்கள், நெருக்குவாரங்கள் தீர்க்கப்படவேண்டும். இதுபற்றித்தான் நாங்கள் முதலில் பேசவேண்டும் என்று மக்களின் அன்றாடச் சிக்கல்களுக்கான தீர்வையே வலியுறுத்தி எழுதியிருந்தார். நாங்கள் அதை வரவேற்றோம். எமது மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் இன்னல்கள் குறைக்கப்படுவதை எமது தலைவர் வரவேற்றார். தொடக்கத்தில் இதைத்தான் செய்யவேண்டும். இதை சந்திரிகா அவர்கள் புரிந்துகொண்டிருப்பது வரவேற்கப்படவேண்டியது என்று அவர் தெரிவித்தார். சந்திரிகா அரசு கடிதம் அனுப்புவதற்கு முன்னரே எமது நல்லெண்ண சமிக்ஞைகள் எமது தலைவரால் அவருக்குக் காட்டப்பட்டது.

### கையில் முழுமையான அதிகாரம் வந்தவுடன் சந்திரிகா நிலைதடுமாறி நிற்கிறார்

முதற்கட்ட சிக்கல்கள் எவை என்பது தொடர்பாக எமது பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. முதற்கட்ட சிக்கல்கள் எவை என்பது தொடர்பாக எமது பிரதிநிதிகளும், அரசதரப்புப் பிரதிநிதிகளும் சேர்ந்து ஆராய்ந்தனர். அப்போது இன்றுள்ள அதிகாரங்களைக்கொண்டு முடிந்தவரை ஓரளவு இன்னல்களைத் தீர்ப்போம்; அதிகாரம் கிடைத்த பின்னர் மக்களது சிக்கல்களை முழுமையாகத் தீர்ப்போம் என்று உறுதி அளித்து அரச பிரதிநிகள் கொழும்பு சென்றனர். அதைத் தொடர்ந்து ஒரு சில பொருட்களுக்கான தடையைத் தளர்த்தினர். இந்தப் பொருட்களுக்கான தடையைத் தளர்த்தவும் வேறுசில பொருட்களுக்கு தடையைத் தொடரவும் செய்தார்கள். எமது மக்களுக்குத் தேவையான ஒரு பொருளை விடுகின்றார்கள்; ஆனால் அந்தப் பொருளோடு செயற்படத் தேவையான மற்றப் பொருளுக்குத் தடைவிதிக்கின்றார்கள். ஆகவே இந்தப் பொருண்மியத் தடைத் தளர்ப்பு ஒரு அர்த்தமற்ற விடயமாக இருக்கின்றது. இதற்கு முதலில் போர் நிறுத்தம் ஒன்று கொண்டுவந்து சுமூகமான சூழ்நிலை ஒன்று உருவாகவேண்டும். அதன்பின்பு எமது மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். கலந்து ஆலோசித்தோம். சந்திரிகா அவர்களும் இதைத்தான் முதலில் தன்னுடைய நிலைப்பாடாக எடுத்துக்கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு முழுமையான அதிகாரமும், ஆட்சிப்பொறுப்பும் வந்தவுடன் அவர் நிலைமாறி நிற்பது எங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இதுவரை மூன்றுகட்டப் பேச்சுக்கள் நடத்தியிருக்கின்றோம். இந்த மூன்று சுற்றுப் பேச்சுக்களின் போதும் எமது மக்களுக்கு என்ன கிடைத்துள்ளது? ஆக துப்பாக்கிகள் மட்டும்தான் ஓய்வை எடுத்துள்ளன. எமது மக்களின் அன்றாடச் சிக்கல்களின் பேச்சுக்கு வரும்போது சில ஆலோசனைகளைக் கொண்டு வந்தார்கள். அதன்படி சில பொருட்களை விடுவிக்கின்றோம் என்று சொன்னார்கள். அதற்கு நாங்கள் சொன்னோம். இன்று இதனை நீங்கள் விடுவிக்கின்றீர்கள். இது மக்களுக்குத் தேவையானவை ஒன்றல்ல; மக்களின் அன்றாடச் சிக்கல்களை தீர்க்கக் கூடிய தேவையான பொருட்கள் இருக்கின்றன. அவற்றின் தடையை முதலில் நீங்கள் அகற்றுங்கள் என்றோம். அதற்கு அவர்கள் நீங்கள் அவற்றை இராணுவத் தேவைக்குப் பயன்படுத்துவீர்கள் என்று கூறினார்கள். அதனை ஆராய்ந்தோம். அவர்கள் ஒரு பட்டியலைத் தந்தார்கள். இதனை நாங்கள் விரிவாக ஆராய்வோம். இராணுவ தேவைக்குப் பயன்படுத்தப்படலாம் என்று நீங்கள் கருதும் பொருட்களை தடைசெய்யுங்கள் அதில் சிக்கல் இல்லை. நீங்கள் ஒரு சில பொருட்களுக்கான தடையைத் தளர்த்தியது, ஒரு உண்மையான -ஒரு நேர்மையான செயற்பாடாக சிந்திக்கவேண்டுகிறோம். நாங்கள் இவ்வாறு அவர்களுக்குத் தெரிவித்தபோது தாங்கள் கொண்டுவந்தவற்றை திருப்பிக்கொண்டு சென்றார்கள். நாங்கள் இவற்றை ஏற்றுக்கொள்கின்றோம். தலைமைப்பீடத்துடன் கதைத்து ஒரு முடிவு எடுக்கின்றோம் என்றார்கள்.



### முழுமையான பொருண்மியத் தடை நீக்கத்திற்கும் சுதந்திரமான பாதை திறப்பிற்கும் இராணுவம் தடை

இராணுவம் எரிபொருட்களை விடத்தயாரில்லை என்று அறிந்தோம். இது உத்தியோகபூர்வமாக எமக்குக் கிடைக்கவில்லை. அங்கிருந்து எமக்குவரும் செய்தித்தாள்கள் வாயிலாகவே நாங்கள் இதை அறிந்தோம். இங்கு மின்சாரம் இல்லை. நாள்தோறும் எமக்கு சக்தி அவசியமானது. ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் சக்தி தேவையானது. ஆகவே மின்சாரம் கொண்டுவரப்படவேண்டும். எரிபொருட்தடை முற்றாக நீக்கப்படவேண்டும். நீக்கப்படும் நிலையை ஏற்படுத்தினால்தான், நீங்கள் ஏனைய எந்தப் பொருட்களின் தடையை நீக்கினாலும் அந்தப் பொருட்கள் இலகுவாக இங்குவரும். ஆகவே எரிபொருட்தடை நீக்கம் மிகமுதன்மையானதாகும். அதே போன்று பாதை ஒன்று திறப்பதைப்பற்றியும் அறிகின்றோம். அவர்கள் ஒரு திட்டத்தை முன்வைத்தார்கள். ஐ. தே. கட்சி அரசினதும், சிங்கள இராணுவத்தினதும் இறுக்கமான பிடியில் இருக்கின்றோம். UNHCR உடனான பேச்சுவார்த்தையின் போது அது சம்பந்தமாகப் பேசினோம். அத்திட்டங்களை இன்று கொண்டுவந்திருக்கின்றார்கள். இன்று நாம் பெரும் வெற்றிகளை நிலைநாட்டியுள்ளோம். அன்று கிளாலிக் கடற்பரப்பில் போகின்றபோது ஒவ்வொரு கணமும் உயிராபத்து இருந்தது. ஆனால் இன்று எத்தனையோ போராளிகளை இழந்து, கிளாலிக்கடல் நீரேரி முழுமையாகக் எங்கள் பிடியில் வந்துள்ளது. நாங்கள் ஆடிப்பாடிப் பயமின்றி போகின்றோம். இந்த சூழ்நிலையில் பாதை திறப்பு பற்றிய தீர்வைக்கொண்டு வந்தார்கள். நாங்கள் அதை நிராகரித்து விளங்கப்படுத்தினோம். தமிழ் மக்களுக்கான ஒரு அரசியல் தீர்வை உங்கள் அரசும் நேர்மையாக முன்வைக்க விரும்பினால், முன்பிருந்த ஐ. தே. கட்சியும் இராணுவமும் மேற்கொண்ட நடவடிக்கையில் இருந்து நீங்கள் முதலில் மீளவேண்டும். அதுதான் முதன்மையானது. குடாநாட்டு மக்களை வேறு இடங்களில் இருந்து முற்றாகத்துண்டித்து, குடாநாட்டை முற்றுகைக்கு உட்படுத்தி, பெரிய படையெடுப்பை மேற்கொள்ளப் போடப்பட்டதுதான் பூநகரி இராணுவமுகாம். நீங்கள் அந்த முகாமிற்கு வரும்பொழுது எந்தவித இழப்பும் இல்லாமல்தான் வந்தீர்கள். நாங்கள் அதிலே இருக்கவில்லை. ஆகவே உங்களுடைய இராணுவம் நாம் எதிர்பார்த்தவேளையில் மிகவும் சுலபமாகத்தான் வந்தது என அதைச்சுட்டிக்காட்டினோம். பூநகரியில் வந்து இருந்தபிறகு, நீங்கள் அதற்காகக் கொடுத்தவிலை மிக மிக அதிகமானது. உங்களது சாதாரண சூழ்நிலையில் அந்த முகாமிருக்கும் என்றால், எமது மக்களுக்கு இராணுவ ரீதியில் ஒரு மிரட்டலைக்கொடுத்துக்கொண்டு ஓர் அரசியல் தீர்விற்கான வழிமுறைக்குப் போவதாகத்தான் நாங்கள் கருதுகின்றோம். அரசு தரப்பினர், எமது விளக்கத்தை மிகத்தெளிவாக ஏற்று, தாங்கள் தங்கள் தலைமைப்பீடத்துடன் கதைத்து, அடுத்தகட்டப் பேச்சின் போது முடிவோடு வருவோம். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் இதற்குப் பதிலனுப்புவோம் என்று சொல்லிப் போனார்கள்; ஆனால் அங்குபோய் இராணுவத்திடம் கலந்தாலோசித்தபோது எல்லாம் முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

### பேச்சுவார்த்தையை நாம் தட்டிக்கழிக்கவில்லை தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றோம்

பேச்சுவார்த்தைக்கான சிக்கல்கள் அரசினாலும், சில செய்தித்தாள்களினாலும் திரிவுபடுத்தி பிரச்சாரம் செய்யப்படுகின்றன, அதாவது இனச்சிக்கலுக்குத் தேவையான பேச்சுக்களை புலிகள் தட்டிக்கழிக்கின்றார்கள் என்று. நாங்கள் தட்டிக்கழிக்கவில்லை. இனச்சிக்கலுக்கான பேச்சுக்களைத்தான் இன்றும் நடாத்துகின்றோம். அந்த இனச்சிக்கலுக்கான தீர்வின் தொடக்க நடவடிக்கையாக உங்களுடைய அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைத்தான் நாம் வலியுறுத்துகின்றோம். இனச்சிக்கலுக்கான பேச்சுக்களின்போதும் ஒவ்வொரு விடயங்களையும் மிகநுணுக்கமாக ஆராய்ந்து முடிவுகள் எடுக்கவேண்டும். இறுதிக்கட்டமாகத்தான் ஒரு அரசியல் தீர்வு வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு. இந்நிலையில் எமது தலைவரும் சிறீலங்கா ஜனாதிபதியும் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அது மோதல் தவிர்ப்பு சம்பந்தமான ஓர் ஒப்பந்தம். மிகச்சுருக்கமாக அது உள்ளது. இந்த ஒப்பந்த விடயத்தை விரிவாக நாங்கள் பேச்சுக்களின்போது கதைத்தோம். தாக்குதல் நடவடிக்கை இடைநிறுத்தத்தின் போது, கடலிலே எமது மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதை நீங்கள் தடுக்கமுடியாது என்று அந்த ஒப்பந்தத்தில் மிகத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது சட்டபூர்வமான மீன்பிடிக்கு தொடர்ந்து தடைசெய்ய முடியாது என்று. ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையின் போது இணங்கி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபின், அரசிடமிருந்து கடல் மீன்பிடி சம்பந்தமான சில அறிவுறுத்தல்கள் வந்தன. அது மிகவும் முரணாக இருப்பதை பேச்சுக்களில் சுட்டிக்காட்டினோம். இதேவேளை கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் ஆயுதத்துடன் நடமாடவேண்டும். அங்கு பல சிக்கல்கள், பல குழுக்கள் இருக்கின்றன. இப்போது கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற எமது பெற்றோர், உற்றார், உறவினர் அங்குள்ள மக்களுடைய நிலைப்பாடு சம்பந்தமாக பேச்சுக்களின்போது இணக்கம் கண்டோம். ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின் ஒரு சில சிக்கல்கள் உருவாகியுள்ளன. இரண்டு மூன்று நாட்களில் இதற்கான தெளிவான பதில்களைத் தருகின்றோம் என்று கூறினார்கள். ஆனால் இதுவரை எந்தவித பதிலும் இல்லை.

### போரின்றி அழிவின்றி நல்லதொரு தீர்வு வருவதையே நாம் வரவேற்கின்றோம்

இந்தப் பேச்சுவார்த்தை சம்பந்தமான சூழ்நிலை ஒரு சிக்கலான நிலையில் சென்றுகொண்டிருக்கின்றது. இந்த நிலையில் போரின்றி, அழிவின்றி மக்களுக்கான நல்லதொரு தீர்வு வருமாயின் அதை முழுமையாக நாங்கள் வரவேற்கின்றோம். அதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் இன்று எங்கள் மக்களின் பிரதிநிதிகளாக சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு நிற்கின்றோம். எமது தலைவரின் உறுதியான வழிகாட்டல், அதற்காக இன்று தமது உயிர்களை அர்ப்பணித்த எத்தனை மாவீரர்கள் -கரும்புலிகளின் தியாகங்கள் மட்டுமல்ல எமது மக்களின் முழுமையான பங்களிப்பும் அவர்களுடைய இத்தியாக உணர்வும்தான் இந்த நிலைக்கு எம்மை கொண்டுவந்திருக்கின்றது. இந்தப் பேச்சுக்கள் சிலவேளைகளில் வெற்றிகரமாக அமையலாம். சிலவேளைகளில் தோல்விகரமாக அமையலாம். ஆனால் எங்களுடைய மக்களிடம் ஒரு உறுதிப்பாடு நிலை பெற்றிருக்க வேண்டும். எமது மக்கள் எடுத்துக் கொள்ளும் முடிவின் தெளிவும், திடமும் தான் முதன்மையானது" என்றார். ■

## வாக்குறுதிகளை...

சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் அது அப்படியல்ல. தலைவர் அவர்கள் சிறீலங்கா அரசிற்கு அனுப்பிய கடிதமொன்றில் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். அதாவது பேச்சுவார்த்தை கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படவேண்டும். எங்கள் பிரச்சினை ஒரு சிக்கலான பிரச்சினை. கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுகால நீண்டவரலாறு கொண்ட சிக்கலான பிரச்சினை. இதனை அவசரப்பட்டுத் தீர்க்கமுடியாது. இதில் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். அன்றாடப்பிரச்சினை இனப்பிரச்சினையின் ஓர் அம்சம். அதுவேறு அல்ல. முந்திய இராணுவத்தின் ஒடுக்கு முறையால் ஏற்பட்ட விளைவுதான் அன்றாடப் பிரச்சினை என்று நாங்கள் சொல்வோம். விடுதலைப் புலிகளின் இலட்சியம் என்னவென்று சிறீலங்கா அரசிற்குத் தெரியும். சரி இனப்பிரச்சினை பற்றிப்பேச நாங்கள் தயாராக இருக்கின்றோம். தாங்கள் ஒரு தீர்வுத்திட்டத்தை தயாரித்துக்கொண்டு இருக்கிறது என்று சிறீலங்கா

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "இராணுவம் முற்றாக அகற்றப்பட்ட பாதையே வேண்டும்; அது எது என்பதை அரசுதான் தீர்மானிக்க வேண்டும்"

## செய்தியாளர் மத்தியில் தமிழ்ச்செல்வன்

**14. 01. 95** அன்று, தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும், சிறிலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையில் நடைபெற்ற மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தை தொடக்கப்படுவதற்கு முன்பாக, அங்கு குழுமி இருந்த உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்களுடன் நடாத்திய செவ்வியின்போதே தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தார். அச்செவ்வியின்போது, செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளையும், தமிழ்ச்செல்வன் அவர்களால் வழங்கப்பட்ட பதில்களையும் முழுமையாகத் தருகின்றோம்.

**கேள்வி: சந்திரிகா அரசு அடுத்தமாத முற்பகுதியில் இனப்பிரச்சினை தொடர்பாக பேச உள்ளது என அறிவித்துள்ளது. அதில் உங்கள் நிலைப்பாடு என்ன?**
பதில்: பேச்சின் ஆரம்பத்தில் எமது நிலைப்பாட்டை நாம் அரசிற்கு தெளிவாக எடுத்துக்கூறினோம். அதாவது தமிழ் மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும். அதன்பிறகுதான் இனப்பிரச்சினை பற்றி பேசப்படும் என்று.

**கேள்வி: இந்த நேரத்தில் ஒரு நிரந்தர சமாதானம் வருவது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**
பதில்: நிச்சயமாக ஒரு நிரந்தர சமாதானம் வருமென நாங்கள் பூரண நம்பிக்கை வைத்திருக்கின்றோம்.

**கேள்வி: பாப்பண்டவர் இலங்கை வரும்போது, மக்கள் செல்வதற்காக ஒரு பாதை திறப்பதைப் பற்றி ஏதாவது தீர்க்க முடிகின்றதா?**
பதில்: பாப்பாண்டவர் வருவதற்கு முன்பே குடாநாட்டு மக்கள் போய்வரக்கூடிய ஒரு பாதை திறக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடையதும் மக்களுடையதுமான விருப்பமாகும்.

**கேள்வி: எந்தப் பாதையைத் திறக்கவேண்டும் என்று விரும்புகின்றீர்கள்?**
பதில்: இராணுவம் முற்றாக அகற்றப்பட்ட ஏதாவது ஒரு பாதையை வேண்டுகின்றோம். அது எந்தப்பாதை என்பதை அரசுதான் முடிவுசெய்யவேண்டும்.

**கேள்வி: பாதை குறித்து முன்னமே கதைத்தீர்களா?**
பதில்: இராணுவம் முற்றாக அகற்றப்பட்ட ஏதாவது ஒரு பாதையை வேண்டுகின்றோம். அது எந்தப்பாதை என்பதை அரசுதான் முடிவுசெய்ய வேண்டும்.

**கேள்வி: பாதை குறித்து முன்னமே கதைத்தீர்களா?**
பதில்: இரண்டாம் கட்டப்பேச்சுக்களின்போது இப்பிரச்சினை குறித்தே நாம் பேசினோம். இம்முறை பாதை குறித்த பதில்களை அவர்கள் தருவார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

**கேள்வி: அரசியல் தீர்வுகாண எப்போது பேச உள்ளீர்கள்?**
பதில்: அரசியல் தீர்வுகாண நாளையில் இருந்தே நாம் பேசத்தயாராக உள்ளோம். ஆனால் அது அரசின் கையிலேயே உள்ளது.

**கேள்வி: அரசியல் தீர்வுகாணமுன் என்னென்ன பிரச்சினைகளை அரசு தீர்க்கவேண்டுமென நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?**
பதில்: இலங்கைவாழ் மக்களில் சிங்கள மக்கள் இன்றைக்கு அனுபவித்துக்கொண்டிருப்பதை, அரசு தமிழ் மக்களுக்கு நிராகரித்துவருகிறது. சிங்கள மக்கள்போல் தமிழ் மக்களும் சகல வசதிகளுடன் வாழ வழிதரவேண்டும்.

**கேள்வி: அப்படி என்ன சிங்கள மக்கள் மட்டும் அனுபவிக்கின்றார்கள்? உதாரணம் கூறமுடியுமா?**
பதில்: பொருளாதாரத்தடை என்பதால் உணவுப்பொருள்களின் விலை அதிகரிப்பும் பெரும்பாலான பொருள்களைப் பெறமுடியாது. போக்குவரத்துப் பாதை வசதியாக இல்லை. இதற்குக் காரணம் பொருளாதாரத்தடையே.

**கேள்வி: பொருளாதாரத்தடையை நீக்கி, போக்குவரத்துப் பாதை திறந்தால் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு நீங்கள் தயாரா?**
பதில்: நிச்சயமாக இப்பிரச்சினைகளே காரணம்.

**கேள்வி: சமாதானப் பேச்சை எப்போ ஆரம்பிப்பது என்பதுபற்றி பேசுகின்றீர்களா?**
பதில்: கடந்த இரண்டு கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது நாம் அரசிடம் அடிப்படைப் பிரச்சினைகளை விளக்கினோம். அதில் போர் நடவடிக்கை நிறுத்தப்பட்டிருப்பதைப் பற்றியே தவிர வேறு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

**கேள்வி: மோதல் தவிர்ப்புக் காலத்தில் ஏதாவது இராணுவ அத்துமீறல்கள் இடம்பெற்று உள்ளதா?**
பதில்: வடபகுதியைப் பொறுத்தவரையில் பெரிதாக ஒன்றும் நடைபெறவில்லை. கிழக்கு மாகாணத்தில் சில நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன.

**கேள்வி: கிழக்கில் மோதல் தவிர்ப்பை அரச படைகள் மீறுகின்றனவா?**
பதில்: அவற்றை மோதல் தவிர்ப்பு மீறல்கள் எனக்கூறமுடியாது. ஆனாலும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் உடன்படிக்கைக்கு முரணாக இருக்கின்றன.

**கேள்வி: 1990 காலத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஏன் முறிவடைந்தன எனக்கூற முடியுமா?**
பதில்: அவை முறிவடைய அன்றைய ஐ. தே. கட்சியின் செயற்பாடுகள்தான் காரணம்.

**கேள்வி: அதற்கான முக்கிய காரணமொன்றைக் கூறமுடியுமா?**
பதில்: எமது பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கும்பொழுது, போர் நிறுத்தத்தை மீறும்வகையில் அன்றைய அரசு செயற்பட்டது. அத்துடன் அந்தப் பேச்சுக்களில் முக்கியமாக எங்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுத்த திட்டங்கள் அதற்குத்தக்க எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

**கேள்வி: அரசு பிரச்சினையைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?**
பதில்: ஆம். பூரணமான நம்பிக்கையுடன் இருக்கின்றோம்.

**கேள்வி: புனரமைப்பிற்கும், நிவாரணத்திற்கும் இனித்தரப்பட உள்ள நிதியை வைத்து யார் கையாள்வது என ஆராய்ந்தீர்களா?**
பதில்: நாமும் அரசும் சேர்ந்து சந்தித்துத்தான் தீர்வு செய்வாம்.

**கேள்வி: தென்பகுதி மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**
பதில்: தென்பகுதி மக்கள், இன்றைக்கு தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வுத்திட்டம் கொண்டுவரப்படும்வேளை அதற்கான முழுமையான ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும். நிச்சயமாக அவர்கள் வழங்குவார்கள் என்றே நம்புகின்றோம். மேலும் தென்னிலங்கை மக்களை. நாம் வாழ்த்துகின்றோம். ஏனென்றால் இனவாதத்தை நிராகரித்து தமிழ் மக்களுக்கு உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை தென்னிலங்கை மக்கள் விரும்புகின்றார்கள்.

**கேள்வி: இனப்பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்வை அரசிடம் எதிர்பார்க்கின்றீர்கள்.**
பதில்: எமது நீண்டகாலப் போராட்டத்தின்போது நிறைய ஒப்பந்தங்கள் ஏற்பட்டதுடன், தீர்வுத்திட்டங்களும் ஏற்பட்டன. இவையெல்லாம் நிராகரிக்கப்பட்ட நிலையில்தான் நாங்கள் எங்களுக்கென ஒரு நாடு மேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம். தற்போது நாங்கள் எந்த நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என்பது பற்றி அரசிற்கு தெட்டத்தெளிவாகத் தெரியும். எனவே அதனை அடிப்படையாகக்கொண்டே எங்களுக்கான தீர்வுத்திட்டம் கிடைக்குமென நம்பிக்கைகொண்டுள்ளோம்.

**கேள்வி: உங்கள் தீர்வுத்திட்டத்தை அரசிடம் சமர்ப்பித்துவிட்டீர்களா?**
புதில்: இல்லை.

**கேள்வி: அரசு முன்வைக்கும் திட்டத்தில் நீங்கள் எதிர்பார்ப்பது கிடைக்கும் என்று எண்ணுகிறீர்களா?**
பதில்: ஆம்.

**கேள்வி: சமஸ்டி அரசியல் தீர்வுபற்றி நீங்கள் சந்தோசப்பட்டீர்களா?**
பதில்: ஏற்கனவே, எமது தேசியத் தலைவர் சமஸ்டித் தீர்வொன்றை முன்வைத்தால் அதுபற்றி பரிசீலிப்போம் என்று கூறியுள்ளார்.

**கேள்வி: இரண்டு சுதந்திர நாடுகளாகவும் அதில் ஒரு மத்திய அரசாகவும் என பத்திரிகைகளில் கூறப்படுகின்றது. அதுபற்றி ஏதாவது தெரியுமா?**
பதில்: நாங்கள் இதுபற்றி கருத்துக்கள் எதுவும் இப்போது கூறமுடியாது.

**கேள்வி: தீர்வுபற்றி கொழும்புப் பத்திரிகையில் அருள் என்பவர் வெளியிட்டுள்ளார். உத்தியோகபூர்வமாக அரசு ஒரு தீர்வையும் அறிவிக்கவில்லை. அவர் கூறுவது பற்றி உங்கள் பதில்?**
பதில்: அவருக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது.

**கேள்வி: காமினி திசாநாயக்காவின் கொலைக்கும் உங்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?**
பதில்: அவர் கொலைக்கும் எமக்கும் ஒருவித தொடர்பும் கிடையாது.

# "சமாதானப் பேச்சுக்களை இறுதிவரை நடாத்த விடுதலைப் புலிகள் தயாராகவே உள்ளனர்"

**■ ஜனாதிபதி செயலாளர் பாலபட்டபந்தி**

மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை முடிந்தபின் செய்தியாளர்களுடன் நடாத்திய செவ்வியின் போதே சிறீலங்கா அரசுத் தூதுக்குழுவில் சென்ற ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்தி இவ்வாறு தெரிவித்தார். அச்செவ்வியின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி: அரசு எதிர்பார்ப்பதுபோல் அரசியல் பேச்சில் விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நீங்கள் நினைக்கின்றீர்களா?**
பதில்: விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களை இறுதிவரை நடாத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றார்கள். இதற்கு அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள். இதனால் பேச்சுவார்த்தைகளை இறுதிவரை கொண்டுசெல்ல முடியுமென நான் நினைக்கின்றேன்.

**கேள்வி: தாக்குதல் தவிர்ப்புநிலை நீடிக்குமா? இந்த நிலையை போர் நிறுத்த நிலைக்கும் கொண்டுசெல்ல ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவா?**
பதில்: ஆம். விடுதலைப் புலிகள் கூறுகின்றனர், தாக்குதல் இடைநிறுத்தத்திற்கும் போர் நிறுத்தத்திற்கும் வேறுபாடு இல்லை என்று. அதேவேளை எமது கருத்து இருவிடயங்களுக்கும் இடையில் சில வேறுபாடுகள் இருக்கின்றன என்பதே. போர் நிறுத்தம் என்பது இறுதியாக எடுக்கப்படும் முடிவு. அந்த இறுதியான முடிவைநோக்கிப் போவதான பாதையில் மோதல் தவிர்ப்பு அவசியமென நாம் கருதுகின்றோம். மோதல் தவிர்ப்பு சமாதானமாக அமைந்தால் அது போர் நிறுத்தத்தில் முடிவடையும். அந்த முடிவிற்குச் செல்வதற்கு விடுதலைப் புலிகள் தயார்; நாங்களும் தயார்.

**கேள்வி: அப்படியானால் தற்போது நடக்கும் மோதல் தவிர்ப்புக் குறித்து விடுதலைப் புலிகள் நம்பிக்கை தெரிவித்தார்களா? போர் நிறுத்தத்திற்கு செல்வதற்கு உங்களுக்கு உள்ள தடையென்ன?**



பதில்: போரில் இருந்து சமாதானத்தை உடனடியாகக்கொண்டுவர முடியாது. அதிலும் மிகப்பெரிய போரிலிருந்து நாம் சமாதானத்திற்குள் பிரவேசித்து ஒரு கிழமைதான் ஆகின்றது. ஆகவே சாதாரண ஒரு மோதல் தவிர்ப்பினால், இந்தப் போரை நிறுத்தமுடியாது. எங்களால் இவர்கள் கேட்கும் யாவற்றையும் கொடுக்க முடியாது. அதுபோல் நாங்கள் கொடுக்கும் விடயங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்த நிலைப்பாட்டில் மத்தியஸ்தர் ஒருவர் உருவாக்கப்படவேண்டும். அந்த மத்தியஸ்தர் பங்குபற்று நிலையை நிர்ணயிப்பதற்கு நீண்டகட்டப் பேச்சுக்கள் நடாத்தப்படவேண்டும். இது மிகவும் முக்கியமான விடயம்.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...

www.tamilarangam.net



# வாக்குறுதிகளை அளிக்கின்றார்களே தவிர...

அரசியல் கட்டுரை அடுத்த இதழில் தொடரும்

"இன்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மூன்று சுற்றுப்பேச்சுக்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. பேச்சுக்களினால் மக்களின் பிரச்சினை தீருமா? அரசு என்ன செய்யப்போகின்றது? பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்குமா? தமிழ் மக்களுக்கு நிம்மதியான, நிரந்தரமான ஒரு சமாதானச் சூழ்நிலை ஏற்படுமா? இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படுமா? எந்தவகையில் எத்திசையில் இந்தப் பேச்சுக்கள் போகின்றன என்று எமது மக்கள் இன்று கேட்கிறார்கள். ஆகவே இன்று எனது பேச்சில் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாகவும் எமது நிலைப்பாடு சம்பந்தமாகவும் அரசின் நிலைப்பாடு சம்பந்தமாகவும் சில விடயங்களை உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன். மூன்று சுற்றுப்பேச்சுக்கள் நடந்தும் உருப்படியாக எதுவும் இல்லை. அரசு வாக்குறுதிகளை அளித்துக்கொண்டு இருக்கின்றது. அன்றாடப் பிரச்சினை அன்றி அடிப்படைப் பிரச்சினைகளிலும் சிக்கல்கள் இருக்கின்றது. பாதைத் திறப்பில் சிக்கல் இருக்கின்றது. இது பற்றி தெளிவான விளக்கத்தைத் தரவிரும்புகின்றேன்.

ஆரம்பத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடங்கும் நேரத்தில் நாங்கள் சமாதானப் பேச்சுக்கள் இரண்டு கட்டமாக எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தோம். அதாவது மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள், அத்தியாவசிப் பிரச்சினைகள் ஆகியவற்றிற்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும். அதற்கு அடுத்த கட்டமாக இனப்பிரச்சினை ஆராயப்பட்டு தீர்வு காணப்படவேண்டும் என நாங்கள் கூறினோம். முதற்தடவையாக எங்களிடம் பேச்சுக்களை நடாத்தவந்த அரச தூதுக்குழு ஒரு நிகழ்ச்சி நிரலைத் தந்தது. அந்த நிகழ்ச்சி நிரலிலும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டுமெனவும், அதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அரசு கூறியது. அன்றாடப் பிரச்சினைகள் குறித்து முதற்கட்டப் பேச்சில் வற்புறுத்தினோம். முதற்கட்டப் பேச்சில் அன்றாடப் பிரச்சினைகள் என்றால் என்ன என்று எடுத்து விளக்கினோம். போர் நிறுத்தம் வரவேண்டும்; அதன்பின் இயல்பான நிலையைத் தோற்றுவிக்கவேண்டும். சமாதானம் தோன்றவேண்டும் எனக்கூறினோம். இது முக்கியமானது. அடுத்ததாக எமது மக்கள்மீது திணிக்கப்பட்ட பொருளாதாரத்தடை நீக்கப்படவேண்டும். மூன்றாவதாக எமது மக்கள் யாழ். குடாநாட்டில் இருந்து வடதமிழீழத்தின் பெரு நிலப்பரப்பிற்கும் கொழும்பிற்கும் செல்வதற்கான பாதை திறக்கப்படவேண்டும். அடுத்ததாக கடல்வலயத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும். இறுதியாக அகதிகளாக இடம்பெயர்ந்திருக்கும் எமது மக்கள் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்று அன்றாடப் பிரச்சினைகளைத் தெளிவாகக் குறித்துக்காட்டினோம்.

## இராணுவ நிலைப்பாட்டுடன் தொடர்புடைய எம்மக்களின் அன்றாடப் பிரச்சினைகள்

பிரச்சினைகள் யாவும் இராணுவத்துடன் தொடர்புபட்டவையாக இருந்தன. அரசதரப்பு பிரதிநிதிகளுக்கு அன்றாடப் பிரச்சினைகளின் பரிமாணம் புரியவில்லையோ, புரிந்ததோ அவர்கள் அதைத் தீர்ப்பதாக வாக்குறுதி அளித்தனர்; ஆனால் கொழும்புக்கு மீண்டும் சென்று அவர்கள் ஆராய்ந்தபோது அவர்களுக்கு ஒரு விடயம் விளங்கியது. அது என்னவென்றால் அன்றாடப் பிரச்சினைகள் ஒவ்வொன்றும் இராணுவ நிலைப்பாட்டுடன் சம்பந்தப்பட்டது என்று விளங்கியது. பொருளாதாரத்தடையை முற்றாக நீக்குவதற்கு இராணுவம் எதிர்ப்புக்காட்டுகின்றது. பாதையைத் திறப்பதானால் இராணுவம் தனது நிலைகளில் இருந்து விலகவேண்டும். போர் நிறுத்தம் செய்வதற்கான இராணுவம் அதற்கு இணங்கவேண்டும். அகதிகள் மீளக்குடியமர்வது என்றால் அதுவும் இராணுவம் தான் பிடித்துவைத்துள்ள இடங்களில் இருந்து விலகவேண்டும். இப்படியாக ஒவ்வொரு பிரச்சினையிலும் இராணுவம் பங்குகொண்டிருக்கிறது என்று அவர்கள் கண்டுகொண்டார்கள். இந்நிலையில் இராணுவம் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. புலிகளை நம்பவேண்டாம் என இராணுவம் அழுத்தம் கொடுத்தது. இந்தப் பிரச்சினைகளில் புலிகளுக்கு விட்டுக்கொடுக்க வேண்டாம் என்றும் அழுத்தம் தந்தது. இதனால் அரசிற்கு சிக்கல் ஏற்பட்டது. இராணுவத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் இராணுவத்தின் அனுசரனை இல்லாமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது என்ற நிலையை உணர்ந்துகொண்டார்கள். இந்த நிலையில் அரசு, தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியது. "முதலில் போர் நிறுத்தம் செய்வோம்; போர் நிறுத்தம் செய்தவுடன், இனப்பிரச்சினையை பேசித்தீர்த்துவைப்போம்" என அதில் குறிப்பிட்டிருந்தது. அதற்கு நாங்கள் முடியாது எனக்கூறினோம்.

## பேச்சுவார்த்தையில் உறுதியாகவுள்ள தமிழீழத் தேசியத் தலைவர்

போர் நிறுத்தம் நாங்கள் செய்ய, இரண்டு தரப்பும் அதைச்செய்யலாம். ஆனால் நீங்கள் வாக்குறுதி அளித்தால், அளித்தமாதிரி உங்கள் நிகழ்ச்சிநிரலில் குறிப்பிட்டுள்ளதுபோல் தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டபின், அடுத்த கட்டமாக இனப்பிரச்சினைக்கு போவோம். என நாங்கள் வலியுறுத்தினோம். தலைவர் இதை வலியுறுத்தி ஒரு கடிதம் எழுதினார். இவ்வாறு இந்தப் பிரச்சினை மாறிமாறி கடிதப் போக்குவரத்தினூடாக இருந்தது. ஆனால் தலைவர் மிக உறுதியாக இருந்தார். அதாவது அன்றாடப் பிரச்சினைகள் அவலமான பிரச்சினைகள் அதைவிட்டுவிட்டு இனப்பிரச்சினைக்குப் போனால் அது எவ்வளவு காலம் நீடிக்குமோ தெரியாது. அவர்கள் என்ன கொடுக்கப் போகிறார்களோ தெரியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்னர், அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். உண்மையான சமாதான சூழல் உருவாகவேண்டுமென வலியுறுத்தினார். இதன்வழியே பேச்சுக்கள் செல்லவேண்டும் என்று உறுதியாக நின்றதனால், அவர்கள் திரும்பிவந்தனர். அன்றாடப் பிரச்சினைகள் பற்றி இரண்டு கட்டப்பேச்சுக்களிலும் அது தொடர்ந்தது.

## தலைவர் பிரபாகரனும், ஜனாதிபதி சந்திரிகாவும் கைச்சாத்திட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம்

மிகவும் முக்கியமான விடயம் மோதல் தவிர்ப்பு. தலைவர் பிரபாகரனும் சனாதிபதி சந்திரிகாவும் கைச்சாத்திட்ட ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதில் மோதல் தவிர்ப்பை கடைப்பிடிக்கவேண்டுமென சில வழிமுறைகள் உள்ளன. இந்த வழிமுறைகளின்படி எக்காரணத்தைக்கொண்டும் ஆயுதப்படைகள் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது. நாங்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது. இராணுவ முகாம்களில் இருந்து இராணுவத்தினரும் புலிகளும் எவ்வளவு தூரத்தில் நிற்கவேண்டும் என்பதும் இந்த ஒப்பந்தத்தில் இருந்தது. இதில் ஒரு முக்கியமான விடயம் கடற் பிரதேசத்தில் சட்டபூர்வமான முறையில் மீன்பிடிப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. எமது மக்கள் தமிழீழக் கடற்பிராந்தியத்தில் சுதந்திரமாகத் திரிந்து மீன்பிடிப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்து. மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின்பின் அரசு புதிய விதிமுறைகளை அறிவித்தது. இப்படி இருக்கும்போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், நாங்கள் சமாதானத்தைப் பிரகடனப்படுத்திய பின்னர், மோதல் தவிர்ப்பு ஏற்பட்ட பின்னர் அறிக்கைவிட்டது. அதாவது கடற்பிரதேசத்தில் குறிப்பிடப்பட்ட பிரதேசத்திலேயே நடமாட முடியும். இரவு நேரம் மீன்பிடிக்க அனுமதிக்க முடியாது. எமது போராளிகள் ஆயுதம் தாங்கி கிழக்கு மாகாணத்தில் நடமாட முடியாது. இப்படியான சில விதிமுறைகளைப்போட்டது. நாங்கள் இதற்கு கடுமையான ஆட்சேபம் தெரிவித்தோம். மூன்றாம் கட்டப்பேச்சின்போது அவர்களுக்கு விடயத்தை விளக்கினோம். "இருதரப்பினரும் இணங்கி, ஒரு ஒப்பந்தம் செய்து கைச்சாத்திட்ட பின்னர், நீங்கள் ஒருதலைப்பட்சமாக சில பிரகடனங்களையும் சில வற்புறுத்தல்களையும் செய்வது மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறுவதாக அமையும்; பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும்" என்று அரசிடம் கோரினோம். ஆகவே நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்படவேண்டும்; எந்த இடையூறுமின்றி பெருமளவு பொருட்கள் வருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். அதாவது சிங்கள மக்களுக்கு என்னென்ன பொருட்கள் கிடைக்கின்றனவோ தென்னிலங்கையில் அவர்கள் என்னென்ன பொருள்களை பெற்றுக்கொள்கின்றார்களோ, அதேமாதிரி தமிழ் மக்களும் இங்கு அதே பொருள்களை அதே விலையில் பற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பும் சந்தர்ப்பமும் அளிப்பதுதான் உண்மையான நடைமுறை. இதை நீங்கள் செய்யவேண்டும்.

இதைச் செய்தால்தான் தமிழ் மக்கள் உங்கள்மீது நம்பிக்கை வைப்பார்கள் என்று சொன்னோம். சரி இந்த முறை பேச்சுவார்த்தையில் இந்தப் பிரச்சினை பேசப்பட்டது. நாங்கள் சந்திரிகா அம்மையாரோடு கதைத்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண்போம் என்று வாக்குறுதி காடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்.

## பூநகரி பாதை திறப்பு விவகாரம்

பூநகரிப் பாதை திறப்பதற்கு வேண்டிய காரணங்களை விளக்கினோம். பாதை திறப்பு யாழ்ப்பாண மக்கள் சதா எதிர்பார்த்து நிற்கும் பிரச்சினை. கிளாலியால் போய் எமது மக்கள்படும் கஸ்டம் சிறீலங்கா அரசிற்குத் தெரியும். அந்தப் பயணம் எத்தனை நாட்களில் முடிகின்றது. எங்கெங்கெல்லாம் மக்கள் தவித்திருந்து பெரும் துன்பப்பட்டுப் போகிறார்கள் என்பது சிறீலங்கா அரசிற்குத் தெரியும். ஆகையால் உடனடியாக ஒரு பாதையைத் திறந்துவிடும்படி கேட்டோம். யாழ்ப்பாணக் குடாநாட்டை வடதமிழீழத்தோடு இணைக்கின்ற மிகப்பிரதான பாதைகளில் இராணுவம் வந்து தடுத்து நிற்கின்றது. இது உங்களுக்குத் தெரியும். இது மட்டுமல்ல வெற்றிலைக்கேணி வரை ஒரு இராணுவ வேலி அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சுற்றி ஒரு முள்வேலி போடப்பட்டதுபோல் இந்தப் பாதை இரண்டையும் மறித்து முற்றுகையிட்டு இராணுவம் நிற்கின்றது. ஒரு பாதையைத் திறந்துவிடுங்கள் என்றே நாங்கள் கேட்கின்றோம். எந்தப் பாதையைத் திறப்பது? பூநகரியைத் திறவுங்கள் என்று நாங்கள் சொல்கின்றோம். ஏன் ஆனையிறவைத் திறந்தால் என்ன என்று நீங்கள் கேட்கின்றீர்கள். நாங்கள் பூநகரியைப் பாதையை திறக்கும்படி கேட்பதற்கு பல காரணங்கள் உண்டு. ஆனையிறவில் சிறீலங்கா இராணுவம் கடந்த 30 ஆண்டுகளாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. இராணுவத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த நிலையம். அந்த இடத்தில் இருந்து இராணுவம் இலகுவில் விட்டுப்போகாது. ஆனால் பூநகரி இராணுவ முகாம் தொடக்கப்பட்டு 3 ஆண்டுகாலமே ஆகும். நீண்டகாலமாக எமது மக்கள் பாவித்துவந்த பாதை, இதனால் இந்தப் பாதையைத் திறந்து, இராணுவ முகாமை அகற்றிவிடும்படி கேட்கின்றோம். யாழ். குடாநாட்டை இராணுவம் எல்லாத்திசைகளிலும் முற்றுகையிட்டுள்ளது. சரி நாங்கள் பூநகரியை அகற்றக் கேட்பதற்கு வேறு காரணங்களும் இருக்கின்றன. முதலாவது யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு யாழ். மீது ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்காகத்தான் இவர்கள் பூநகரியிலும், ஆனையிறவிலும், வெற்றிலைக்கேணியிலும், பலாலியிலும், தீவுப்பகுதிகளிலும் சுற்றிவளைத்து நிற்கின்றார்கள். நீங்கள் ஒரு யாழ். குடாநாட்டின் பூகோளப்படத்தை எடுத்துப்பார்ப்பீர்களேயானால், யாழ். குடாநாட்டைச் சுற்றி இராணுவம் எல்லா முதன்மையான நிலைகளிலும் குந்தி இருக்கின்றது. இந்த ஐந்து இடங்களிலிருந்தும் குடாநாட்டின்மீது பாரிய தாக்குதலை நடத்தவேண்டுமென்பதே இராணுவத்தின் திட்டம். ஆனால் அரசு மாற்றம், தேர்தல், சமாதானம், சந்திரிகா பதவியேற்பு, பேச்சுவார்த்தை என்பதோடு இந்தப் படையெடுப்பு ஒத்திப்போடப்பட்டுள்ளது. ஒத்திவைத்துவிட்டு என்ன செய்கிறார்கள் என்றால் பேச்சுவார்த்தை எப்படிப்போகின்றது. இந்தப் பேச்சுவார்த்தை குழம்பி சரிவராமல் போனால் இந்தத் திட்டத்தின்படி ஐந்து முனைகளில் இருந்தும் குடாநாட்டின்மீது ஊடுருவவேண்டும் என்ற நோக்கத்தோடு உள்ளது. இதற்காகவே நாங்கள் பூநகரியில் இருந்து வெளியேறுங்கள் என்று கூறுகின்றோம். வெளியேறுவது என்று சொன்னால், யாழ். குடாநாட்டின் மீது தாக்குதல் நடாத்தும் நோக்கம் இல்லையென்று தெரியவும், உண்மையாக சமாதானம்தான் வேண்டும் என்று அறியவும் இந்தப் பாதை திறக்கப்படவேண்டும். இந்தப் பாதையில் உள்ள இராணுவ முகாமை அகற்றவேண்டும் என்றும் கேட்கின்றோம். பூநகரியிலிருந்து ஒரு அரைமைல் தூரத்தில் விலகி நிற்பதாகச் சொல்கின்றார்கள், இது எப்படி? நாம் சொல்கிறோம் ஒரேயடியாக விலகிப்போகுமாறு. இதில் அரசு ஒரு முக்கியமான முடிவு எடுக்கவேண்டும். இந்தமுறை அரசகுழு வந்து பேசியபோது பூநகரிப்பாதை திறப்பதுதான் முதன்மையாக இருந்தது. நாங்கள் பல விளக்கம் கொடுத்தோம். சமாதானத்தீர்வு ஏற்பட்டால் வடக்கு -கிழக்கில் இருக்கும் எல்லா இராணுவ முகாம்களையும் எடுத்துக்கொண்டு போகிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

## வடக்கு - கிழக்கில் மொத்தம் 400 இராணுவ முகாம்கள்

வடக்கில் மட்டும் 200 இராணுவ முகாம்கள் வைத்திருக்கிறார்கள். திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 200 முகாம்கள். இவ்வளவு தொகையான இராணுவ முகாம்களையும் வைத்துக்கொண்டு போவோம் என்று சொல்கின்றீர்கள். ஒன்றையாவது எடுத்துக்காட்ட வேண்டும். எங்கள் பாதை, நாம் நடமாடும் பிரதேசம். அதில் நந்தி மாதிரி இராணுவம் குந்தியிருக்கின்றது. விலகிக்கொண்டால் எங்களுக்கும் மக்களுக்கும் நம்பிக்கைவரும். ஆனால் அவர்கள் இராணுவத் தலைமையுடன் கதைக்கவேண்டும்; இராணுவத்தலைமை விடக்கூடாது என்று சொன்னார்கள். மூன்றுகட்டப் பேச்சுக்களின் பலாபலன்களில் ஒரு முதன்மையான அம்சம் உண்டு. என்ன பலாபலன்களைக் கண்டோம் என்று கேட்பீர்கள். எங்களைப் பொறுத்தமட்டில் இந்த மோதல் தவிர்ப்பு தான். மோதல் தவிர்ப்பு மூலம் போரை நிறுத்தியுள்ளோம். விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடனும் முழு முயற்சியுடனும் இந்த மோதல் தவிர்ப்பு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இதை விடுதலைப் புலிகள் மீறமாட்டார்கள். நாங்கள் இதில் உறுதி அளிக்கின்றோம். தலைவர் இதை வலியுறுத்திக் கூறியுள்ளார். எமக்கும் பிரச்சினை உள்ளது. கிழக்கு மாகாணத்தில் இராணுவம், எமது போராளிகள் சுதந்திரமாக நடமாடக்கூடாது; ஆயுதங்களைத் தரித்திருக்கக்கூடாது; இராணுவ சோதனைக்கு உட்பட்டுத்தான் போகவேண்டும் என்று பல பிரச்சினைகளை இராணுவம் போடுகின்றது. இந்தப் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்க்கப்படவேண்டும் என்று நாங்கள் கருதுகின்றோம். ஏனென்றால் வந்துபோனவர்கள் அந்த வாக்குறுதியைத் தந்துவிட்டுப்போய் இருக்கிறார்கள். அப்படியான சூழ்நிலை வந்தால்தான் ஒரு நிலையான போர் நிறுத்தம் ஏற்படும். அது நல்ல விசயம்; எமது மக்கள் வரவேற்க வேண்டிய விசயம். நான்கு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்த 2 ஆம் கட்ட ஈழப்போரின் பின்பு இப்படி ஒரு இடைவெளி வந்துள்ளது. அடுத்து என்ன வேண்டும்? எமது மக்களுக்கு அத்தியாவசியமான பொருட்கள் இங்கு வரவேண்டும். எமது மக்களுக்கு வேலை கிடைக்கவேண்டும். எமது தொழிலாளர்கள் தொழிலுக்குப் போகவேண்டும். இங்குள்ள மக்கள் மூன்றுநேரமும் வயிறாரச் சாப்பிடவேண்டும். இந்தப் பிரச்சினைதான் எமக்கு முதன்மையானது. எமது மக்களின் பொருளாதார வாழ்வு சீராகவேண்டும். பொருளாதாரத்தடையை முற்றாக நீக்கவேண்டும். தடையை முற்றாக நீக்கினால் என்றால், பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் என்றுதான் சொல்லுவோம். அடுத்து பாதைத் திறப்பு. இப்போது எமக்கு பாதை இருக்கின்றது; இல்லை என்று சொல்லவில்லை. ஆயினும் பூநகரிப் பாதையைத் திறந்தால் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் என்று சொல்லுவோம். அதேசமயம் இந்தக் கடல் வலயத்தடையை தீர்த்துவைப்போம் என்று அரசுத் தரப்பு சொல்லிவிட்டுப்போய் இருக்கிறது. அடுத்த பேச்சுக்கான நாள் தரப்படவில்லை. ஏனெனில் அடுத்தமுறை வந்தாலும் இதேபிரச்சினைதான் இருக்கின்றது.

## செல்வநாயகம் காலம் வேறு பிரபாகரன் காலம் வேறு

இனப்பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு நாங்கள் தயார். அன்றாடப்பிரச்சினையை முதலில் தீர்க்கவேண்டும் என்று. நாங்கள் இனப்பிரச்சினையைத் தட்டிக்கழிக்கின்றோம் என்று சில கொழும்புச் செய்தித்தாள்கள் சில

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "கடலில் புலிகள் நல்ல நிலையில் உள்ளனர்; தற்கொலைப் படை அவர்களது பலம்"

□ 'சாகரவர்த்தனா' கப்டன் - கொமாண்டர் பொயாகொட

சாகரவர்த்தனா' என்ற பெயருடைய ஆழ்கடல் ரோந்துக் கப்பலின் பிரதம கட்டளை அதிகாரியான கப்டன் பொயாகொட அவர்கள், விடுதலைப் புலிகள் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலை இங்கே தருகிறோம். நேர்காணலின்போது கப்டன் பொயாகொட அவர்கள் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டார்; வெளிப்படையாகத் தனது கருத்துக்களைக் கூறினார். சுமார் ஒரு மணிநேரம் நடந்த இந்த நீண்ட நேர்காணலின் முழுவிபரத்தையும் கீழே தந்துள்ளோம்.

கப்டன் பொயாகொட 14.12.1953 இல் கண்டியில் பிறந்தார். 1974 இல் சிறீலங்கா கடற்படையில் இணைந்து கொண்டார்; "ஒஃவ்ஃவீசர் கடெற்" (Officer Cadet) என்ற பதவிநிலையில் உடனேயே அமர்த்தப்பட்டார். அடிப்படைக் கடற்பயிற்சிகளை திருகோணமலைக் கடற் தளத்தில் பெற்றுக்கொண்ட பொயாகொட, மேலதிக விசேட பயிற்சிகளை இந்தியாவிலுள்ள "கொச்சின் கடற்படைத் தளத்தில்" பெற்றுக்கொண்டார்.



இனி நேர்காணலைப் படியுங்கள்.

**01. 'சாகரவர்த்தனா' மீதான தாக்குதலைத் தொடர்ந்து எவ்வாறு நீங்கள் கைதுசெய்யப்பட்டீர்கள்?**

தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து 'சாகரவர்த்தனா' மூழ்கத் தொடங்கியது; கப்பலைக் கைவிட்டு நீரில் குதிக்க வேண்டிய நிலை எழுந்தது. 'ஜக்கெற்றுக் களை' அணிந்துகொண்டு நீரில் குதித்து நீந்தினோம். சிறிது நேரத்தில் கடற்புலிப் படகொன்று என்னருகே வந்து என்னைப் படகிற்குள் ஏற்றியது. நான் தனியாகத்தான் பிடிக்கப்பட்டேன். அதன்பின், புலிகளின் முகாம் ஒன்றிற்குக் கூட்டிச் செல்லப்பட்டேன். அடுத்த நாள் காலையில், மேலும் ஒருவர் சிறைப்பிடிக்கப்பட்டதாக புலிகள் சொன்னார்கள். அதன் பின் அவ்வாறு பிடிக்கப்பட்டது எனது சக அதிகாரியான கமகே விசித்த என்று கண்டுகொண்டேன். அதன்பின்னர் நாங்கள் இருவரும் கிளாலியூடாக யாழ்ப்பாணம் கூட்டிவரப்பட்டு, இப்போது நாங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு - இடம் எதுவென்று தெரியவில்லை - கொண்டுவரப்பட்டோம்.

**02. கைதுசெய்யப்பட்ட அந்தக் கணப்பொழுதில் நீங்கள் என்ன நினைத்தீர்கள்?**

வெளிப்படையாகச் சொல்வதானால் என்னை என்ன செய்யப் போகின்றார்களோ என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அடிக்கப் போகின்றார்களா? அல்லது கொல்லப் போகின்றார்களா? என எண்ணிக் கொண்டிருந்தேன். அப்போது எனது மனைவியைப் பற்றியும் எனது குடும்பத்தைப் பற்றியும் நினைத்தேன். அப்படியான வேளையில் குடும்பத்தைப் பற்றி நினைப்பது இயற்கை தானே? நாங்கள் அதற்காகத்தானே வாழ்கின்றோம். ஆயினும் அவர்கள் (கடற்புலிகள்) என்னைக் கொல்லும் 'மூட்' இல் இருக்கவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

**03. இப்போது நீங்கள் ஒரு போர்க் கைதியாக உள்ளீர்கள். இங்கே எவ்வாறு நடத்தப்படுகிறீர்கள்?**

என்னைப் புலிகள் நடாத்தும் முறை கண்டு மிகவும் சந்தோசப்படுகிறேன். ஒரு போர்க் கைதியைப் போலவோ...... அல்லது ஒரு கைதியைப் போலவோ நான் நடாத்தப்படவில்லை; அதற்கும் மேலாக நட்பறிமையுடன் நடாத்தப்படுகிறேன். இப்படியான ஒரு பராமரிப்பு முறைபற்றி நான் கொழும்பில் இருந்தபோது எதிர் பார்த்திருக்கவேயில்லை. கொழும்பில் மக்கள் கதைத்துக் கொள்வதற்கு முற்றிலும் மாறான ஒரு பராமரிப்பை (Treatment) நான் கண்டேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒரு விடயமென்று இதை நான் கூறுவேன்.

**04. 200 பயணிகளுக்கு மேல் பலியாகிய கிளாலிக் கடல் நீரேரிப் படுகொலைகளைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். படகுப்பயணிகள் மீது சிறீலங்கா கடற்படை நடாத்திய இந்த வெறியாட்டத்திற்கு, ஏதாவது நியாயப்பாடுகள் இருக்கின்றன எனக் கருதுகின்றீர்களா?**

தனிப்பட்ட ரீதியில் அத்தகைய படுகொலைகளை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். அப்படிச் செய்வதன் மூலம் நாங்கள் மேலும் மேலும் எதிரிகளையே உருவாக்குகின்றோம்; அத்துடன் போர் முறைக்கே அது பிழையானது. ஒரு தாக்குதலைச் செய்யும் பொழுது அல்லது ஒரு இராணுவ நடவடிக்கை நேரத்தில், துப்பாக்கிச் சூட்டுக்கு இடையில் (Cross firing) அகப்பட்டு மக்கள் உயிரிழப்பது வேறு விடயம். அப்படியான தற்செயல் சாவுகளையும் தவிர்க்கவேண்டும்.

**05. உங்களுடைய இருபதுவருட கடற்படைச் சேவையில், புலிகளுக்கு எதிராக நேரடியாகப் பங்குகொண்ட இராணுவ நடவடிக்கைகள் பற்றிச் சொல்ல முடியுமா?**

அப்படி எந்தவிதமான இராணுவ நடவடிக்கைகளிலும் நான் சம்மந்தப்படவில்லை. அப்படி ஒரு இராணுவ நடவடிக்கையில் பங்குபெறும் வாய்ப்பு (Opportunity) எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் 'ஒப்பரேசன் லிபரேசனை' குறிப்பிடலாம். அப்போது நான் கிழக்குப்பிராந்தியக் கடலில் சேவையில் இருந்தேன். அதில் நான் பங்குகொண்டிருந்தேன். அதுவும் நேரடியான போர் நடவடிக்கையில் அல்ல; கடல் ரோந்திலேயே ஈடுபட்டிருந்தேன்; கடற்படையினராகிய நாங்கள் உதவிப்பணிகளில் தான் (Supporting role) ஈடுபடுகின்றோம்; அதுதான் உண்மை. அத்துடன், பெரும்பாலும் நான் நிர்வாகப் பணிகளிலேயே ஈடுபட்டுவந்தேன்; எந்த வழியிலும் நான் போர் வெறிகொண்ட ஆளல்ல.

**06. 'சாகரவர்த்தனா'வின் அன்றாடக் கடமைகள் என்ன? விசேட கடமைகள் என்ன?**

எங்களுக்கு தரப்பட்டது கடல் ரோந்துப் பணிதான். அத்துடன் கடல் கண்காணிப்பும் மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதும்தான். இவைதான் நாங்கள் செய்யும் பணிகள்.

**07. தமிழ்நாட்டு மீனவர் படகுகள் மீதான தாக்குதல் சம்பவங்களுக்கும் 'சாகரவர்த்தனா'வுக்கும் சம்பந்தமுள்ளதாக, சில செய்திகள் கூறுகின்றனவே? அது உண்மையா? அப்படியாயின் அத்தகைய தாக்குதல்களில் பங்குகொண்ட போர்ப் படகுகள் பற்றிக் கூறமுடியுமா?**

எம்முடைய 'கொமாண்ட்' காலத்தில் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. இரு நாடுகளும் கைச்சாத்திட்ட ஒரு உடன்படிக்கை இப்போதும் உள்ளது. அதன்படி தமிழ்நாட்டு மீனவர்களை நாம் தாக்க முடியாது. எங்களுடைய கடல் எல்லைக்குள் அவர்கள் மீன் பிடிக்கும்போது, அவர்களை சுமுகமான அணுகு முறைகள் மூலம் அப்புறப்படுத்தவேண்டியிருக்கும்; அப்படியான நடவடிக்கைகளை நான் செய்திருக்கிறேன்.

**இல்லையே! தமிழ்நாட்டு மீனவர்கள் கொல்லப்பட்டதுபற்றி, அவர்களே எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தியுள்ளனரே?**

ஆம். அவர்களின் படகுகளை அப்புறப்படுத்தும்போது அப்படியான சில சம்பவங்கள் நடந்துள்ளன. குறிப்பிட்ட ஒரு கப்பல் என்றில்லாமல் கடற்படையின் ஏனைய கப்பல்களும் இதைச் செய்துள்ளன. அவர்கள் (தமிழ்நாட்டு மீனவர்கள்) ஆயிரக்கணக்கான படகுகளில் எங்களது கடற்பரப்பிற்குள் வருவார்கள். ஆகவே அதைத் தடுக்கும் நோக்கில் அதை (தாக்குதல்கள்) செய்ய வேண்டியிருக்கின்றது; சிலவேளைகளில் சாவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய ஒரு உடன்பாடு வந்துள்ளது. உண்மையில், பெருந்தொகைப் படகுகளுடன் எமது கடல் எல்லைக்குள் புகும் தமிழ்நாட்டு மீனவர்களைத் தடுப்பதும், அவர்களை எமது கடலெல்லைக்கு அப்பால் விரட்டிவிடுவதும் கடற்படைக்கு ஒரு கடினமான பணியாகவே இருக்கின்றது.

**08. கடலில் இருந்தபடி, கரையோரக் கிராமங்கள் மீது உங்களது போர்க்கப்பல்கள் எறிகணைத்தாக்குதல்களை நடாத்துகின்றனவே! இது ஏன்? இதற்கு ஏதாவது இராணுவ நோக்கம் உள்ளதா?**

இது சரியான தகவலா என்று எனக்குத் தெரியவில்லை. கடற்படைக் கப்பல்கள் ஏன் அவ்வாறு சுட வேண்டும்? அதாவது, பொதுமக்களைச் சாகடிக்க வேணும் என்பதற்கு எந்த ஒரு காரணமுமில்லை. அத்துடன், இத்தகைய உயிரழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய நீண்டதூர வீச்சுக்கொண்ட ஆயுதங்களும் எமது கப்பல்களில் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**5 கி. மீற்றருக்கும் மேற்பட்ட தூரத்திற்கு எறிகணை வீசக்கூடிய சுடுகருவிகள் உங்களது கடற்படைக் கப்பல்களில் உண்டே? அத்துடன், கிரமமான முறையில் எறிகணைகளை வீசும் கடற்படைக் கப்பல்கள், கரையோரப் பகுதி மக்களைக் கொன்று வருகின்றனவே....!**

அப்படி நடக்குமாக இருந்தால், அது வீம்புக்குச் சுட்டு விளையாடும் சில நபர்களது (Trigger happy persons) வேலையாக இருக்கலாம். ஏனென்றால், அவ்விதமான நடவடிக்கைகளுக்குப் பின்னால் எந்த ஒரு இராணுவ நோக்கமும் இருப்பதில்லை.

**09. இராணுவ முகாம்களில் இருந்தும் கடல் நடுவிலிருந்தும் தமிழர் குடியிருப்புக்கள் மீது நடாத்தப்படும் எறிகணைத்தாக்குதல்களுக்கு, புலிகளுக்கெதிரான நடவடிக்கை அல்லது தற்காப்பு என்று, அரச தரப்பிலிருந்து காரணம் கற்பிக்கப்படுகின்றது. இதே காரணங்களைக் கூறிக்கொண்டு சிங்களவர் குடிமனைகள் மீது புலிகள் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினால், அதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?**

தரையில் ஒரு இராணுவ நடவடிக்கை நடந்தது, தரைத்துருப்புகளின் முன்னேறும் நடவடிக்கைக்கு குண்டு வீச்சு உதவி (Fire power) தேவைப்பட்டாலொழிய, மற்றும்படி ஒரு கப்பல் கரை மீது எறிகணைவீச எந்தக் காரணமுமில்லை.

எல்லா நடவடிக்கைகளுக்கும் சமமான அளவில் மறு நடவடிக்கைகளும் இருக்கும். (All actions have equal reactions).

அரச படைகள் தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை நடாத்தினால், புலிகளும் அதேவழி முறையில் பழிவாங்க முனைவார்கள். சிங்களக் குடியேற்றவாசிகள் மீது -எல்லைப்புற சிங்களவர்கள் மீது - தாக்குதல்களை நடாத்துவார்கள்.

**10. புலிகளுக்கெதிரான இராணுவச் செயற்பாடுகளின்போது உங்களால் மறக்க முடியாத நினைவுகள் ஏதாவது இருந்தால், அதை எங்களுடன் பகிர்ந்து கொள்ளமுடியுமா?**

அப்படியான ஒரு போர்க்களத்துடன் நான் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அதனால் இப்படியான ஒரு நினைவு எனது மனதில் இல்லை. ஆயினும் அந்த இறுதிச் சம்பவம் எனது வாழ்க்கையில் என்றும் மறக்கப்பட முடியாதது. ஒரு தற்கொலைத் தாக்குதலை என் கண்ணாற் கண்டேன். எனது கப்பல் உடைந்து மூழ்கியதைக் கண்டேன்; எனது சகாக்கள் துன்பப்பட்டு இறந்ததைக் கண்டேன்; சிலர் உயிருக்காகப்



"சாகரவர்த்தனா" கப்பல் 1984 இல் முதன்முதலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். அப்போது ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு.லலித் அத்துலத் முதலி,கப்பலைக் கடற்படையினரிடம் வழங்கினார். "சாகரவர்த்தனா" வெள்ளோட்டம் போன அந்த முதல் நிகழ்வை, திருமதி சிறீமானி அத்துலத் முதலி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். 1993 ஆம் ஆண்டு திரு.அத்துலத் முதலி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார் என்பதும், சிறீமானி அவர்கள் இப்போது சந்திரிகா அரசில் அமைச்சராக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூழ்கடிக்கப்பட்ட கடற்படைக்கலங்கள்

**நீங்கள் தனித்தமிழ்நாட்டைப் பற்றியா கதைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்.? ஊர்காவற்றுறைக் கடலில் அல்லது காரைநகர் கடலில் தரித்து நின்றபடி, சிறீலங்கா கடற்படையின் ஒரு கப்பல் பத்துக் குண்டுகளை வீசினால், உங்களது தமிழீழம் கடலினில் அமிழ்ந்துவிடுமே?**

**திரு. மு. சிவசிதம்பரம், திரு. வி. நவரத்தினத்திற்குச் சொன்னதாக, 'தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் -வீழ்ச்சியும்' என்ற ஆங்கில நூலிலிருந்து (பக். 282)**

ஒரு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு தமிழ் அரசியல்வாதி வைத்திருந்த கருத்து அது. சிங்களவன் அடிப்பான் -கொல்லுவான் என்று அஞ்சியபடி தமிழினத்தை அடிமை வாழ்வுக்குப் பழக்கப்படுத்த முயன்ற, ஒரு கையாலாகாத தலைமையின் வாக்குமூலம் அது. அப்போது சிங்களக் கடற்படையின் பலம் இப்போதிருப்பதை விடக் காற்பங்கே என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருவாளர் மு. சிவசிதம்பரம் அன்று கூறியிருந்தபடி இதுவரை தமிழீழம் மூழ்கவில்லை என்பது பெரிய விடயமல்ல. அவர் குறிப்பிட்ட அந்தக் கடற்பரப்பில் நங்கூரமிட்டபடி இளைப்பாற சிங்களக் கடற்படைக்கப்பல்கள் இன்று அஞ்சுகின்றன என்பது, ஒரு யுகமாற்றம் அல்லவா.....!

அவர் கூறியதுபோல் தமிழீழம் மூழ்கவில்லை; சிங்களக் கடற்படையின் கப்பல்கள்தான் மூழ்கத் தொடங்கியுள்ளன.

88 போர்க்கலங்களையும், 10, 400 கடற்படையினரையும் கொண்ட சிங்களக் கடற்படை, கடந்த 4 ஆண்டுப் போரில் பாரிய இழப்புக்களைச் சந்தித்துவிட்டது.

போர்க்கப்பல்கள், சண்டைப்படகுகள்.... என்று 15 கடற்கலங்களை அது இழந்துவிட்டது. இது சிங்களக் கடற்படையின் கப்பற் பலத்தில் 15% என்பது குறிப்பிடத்தக்கது.


கண்காணிப்புக் கப்பல் ஒன்று, ஆழ்கடல் ரோந்துக்கப்பல் ஒன்று, விநியோகக் கப்பல் ஒன்று, சுப்ப டோரா ஒன்று, நீருந்து விசைப்படகுகள் ஒன்பது, மற்றும் கரையோர ரோந்துப் படகுகளான 'சீகாட்' ஒன்று, 'கூகர்' ஒன்று என்பன மூழ்கடிக்கப்பட்டுவிட்டன.

அதேவேளை, கட்டளைக் கப்பல்களான அபிதா, எடித்தாரா என்ற தாய்க் கப்பல்களும் 'சவட்டன்' என்ற கரையோர ரோந்துப் படகும், சாதாரண டோரா ஒன்றும், மற்றும் தரையிறக்கும் கலங்களும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டன.

இதேவேளை, 350 பேருக்கு மேற்பட்ட கடற்படையினரும் இந்த நான்காண்டுப் போரில் கொல்லப்பட்டுவிட்டனர். இந்தக் குறுகிய காலத்தில், இவ்வளவு தொகையில் கடற்படையினர் கொல்லப்படுவது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல.


நாகதேவன்துறை தளத்தில் சுமார் 300 பேர், சாகரவர்த்தனாவில் 23 பேர், சுப்ப டோறா கப்பல் தகர்ப்பில் 13 பேர், நீரேரிக் கடலில் நிகழ்ந்த கரும்புலித் தாக்குதல்கள் -கண்ணி வெடிகள் மற்றும் படகுச் சண்டைகளிலும் 20 பேருக்கும் மேல், நயினாதீவுக் கடலில் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டதில் 7 பேர், இத்துடன் பல்வேறு கடற்சண்டைகளின் போதும் பல கடற்படையினர் கொல்லப்பட்டிருந்தனர். ■

## மூழ்கடிக்கப்பட்ட கடற்கலங்கள்



**"சீகாட்"**

22.09.1991 தீவகக் கடற்பரப்பில் 'சீகாட்' ரக கரையோர ரோந்துப் படகுமீது கண்ணிவெடித் தாக்குதல். படகு மூழ்கடிக்கப்பட்டது. இரு அதிகாரிகள் உட்பட 7 கடற்படையினர் பலி.



**"கூகர்"**

01.10.1991 நயினாதீவு கடற்படை முகாமிலிருந்து காரைநகர் கடற்படை முகாமிற்கு ரோந்து சென்ற 'கூகர்' ரகப் படகு தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது.



**"சுப்ப டோறா"**

29.08.1993 பருத்தித்துறைக் கடலில் ஒரு சுப்ப டோறா விசைப்படகு மீது (மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன்) கரும்புலித் தாக்குதல். டோறா மூழ்கடிக்கப்பட்டது 5 அதிகாரிகள் உட்பட 13 கடற்படையினர் பலி.




**நீருந்து விசைப்படகு**

29.12.1991 யாழ். நீரேரியில் கடற்படையின் ரோந்துப்படகொன்று மூழ்கடிக்கப்பட்டது.

26.08.1993 கிளாலிக் கடல் நீரேரியில் நீருந்து விசைப்படகுகள் இரண்டின்மீது(மேஜர் வரதன், கப்டன் மதன்) கரும்புலித் தாக்குதல் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.


10.11.1993 பூநகரி கூட்டுத்தளம் மீதான 'தவளை'த் தாக்குதலில் ஐந்து நீருந்து விசைப்படகுகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன. (கரும்புலிகள் மேஜர் கோபி, மேஜர் கணேஸ்).

30.08.1992 மண்டைதீவிலிருந்து ஒரு நீருந்து விசைப்படகு கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டது.



**கண்காணிப்புக் கப்பல்**

16.08.1994 காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்துநின்ற கண்காணிப்புக் கப்பல் மீது (கப்டன் அங்கயற்கண்ணி) கரும்புலித் தாக்குதல்,கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.



**"சாகரவர்த்தனா"**

19.09.1994 சிலாவத்துறைக் கடலில் 'சாகரவர்த்தனா' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் மீது (லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் வாமன், கப்டன் லக்ஸ்மன்) கரும்புலித் தாக்குதல். கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. 25 கடற்படையினர் பலி.

www.tamilarangam.net


## எங்கள் கடல்

தமிழீழம் என்பது, நிலப்பரப்பை மட்டும் உள்ளடக்கிய விடயம் என்று பலரும் கருதுவது தவறு. தரையைப்போல பிரமாண்டமான ஒரு கடற்பரப்பையும் கொண்டமைந்ததுதான் எங்கள் தமிழீழத் தாயகம். இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்லப்போனால், எமது தாயகத்தின் நிலப்பரப்பைவிட கடற்பரப்பின் விஸ்தீரணம் அதிகமானது என்ற பேருண்மையை, எமது மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஏறக்குறைய 1200 கி. மீற்றர் நீளமான கடற்கரையைத் தமிழீழம் கொண்டிருக்கின்றது.

ஒரு நாட்டின் கடற்கரையிலிருந்து 19 கி. மீற்றர் தூர கடற்பரப்பு, குறித்த அந்த நாட்டிற்குச் சொந்தமானது என்று, அனைத்துலகச் சட்டங்கள் வலியுறுத்துகின்றன. இதன்படி ஏறக்குறைய 23,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவான கடற்பரப்பு தமிழீழத் தாயகத்தின் ஒரு அங்கமாக இருக்கின்றது. அதேவேளை,தமிழீழத்தின் நிலப்பரப்பு ஏறக்குறைய 19,000 சதுர கிலோமீற்றர் ஆகும். எனவே தமிழீழத் தாயகத்தைப் பொறுத்தவரை கடற்பரப்பில்தான் அதன் பெரும் பகுதியுள்ளது. இக்கடற்பரப்பை நாம் வெற்றிகொண்டேயாகவேண்டிய அவசியத்தை இப்போது உணரக்கூடியதாக உள்ளது அல்லவா...?

# சேதமாக்கப்பட்ட கடற் கலங்கள்



### கரையோர ரோந்துப் படகு "சவட்டன்"

27-02-1992 - தாளையடி கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையின் 'சவட்டன்' ரக படகு மீது துணிகர அதிரடி, படகு பலத்த சேதமடைந்திருந்தது.





### "கட்டளைக் கப்பல்"

*10-09-1990 - வல்வைக் கடலில் "எடித்தாரா" கட்டளைக் கப்பல்மீது (மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் விநோத்) கரும்புலித் தாக்குதல். 04-05-1991 அன்று 'அபிதா' கட்டளைக்கப்பல் மீது (கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன்) கரும்புலித் தாக்குதல். கப்பல்கள் சேதமாக்கப்பட்டன. திருத்தப்பட்டபின் இப்போது சேவையில் உள்ளன.*

### தரையிறங்கு கலம்

*08-11-1994 வெற்றிலைக்கேணிக் கடலில் தரையிறக்கும் கலம் மீது(கரும்புலி மேஜர் வித்தி) கரும்புலித் தாக்குதல்: கலம் பலத்த சேதமடைந்தது.*





### சாதாரண டோறா

*03-03-1992 - மாதகல் கடலில் டோறா மீது கண்ணிவெடித் தாக்குதல்: சேதமடைந்த நிலையில் திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.*

# இதுவரை தாக்கப்படாத கடற் கலங்கள்


### வீரைவுத் துருப்பேற்றிகள்

*குறைந்தது 120 துருப்புக்களைக் காவியபடி, மணிக்கு 30 கடல் மைல் (55 கி.மீ.) வேகத்தில் செல்லக்கூடியன.*





விரைவுப் பீரங்கிக் கப்பல்கள் - "வீரயா", "சூரயா" போன்றன.



### "ஓசன்றேடர்"

*09-10-1994 வெற்றிலைக்கேணிக் கடலில் "ஓசன்றேடர்" என்ற விநியோகக் கப்பல் மீது நேரடித் தாக்குதல்: கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.*

## மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் மொத்த எடை

| | | |
|---|---|---|
| கண்காணிப்புக் கப்பல் | 6300 | தொன்கள் |
| சாகரவர்த்தனா | 330 | " |
| ஓசன் றேடர் | 1200 | " |
| சுப்ப டோறா | 54 | " |
| நீருந்து விசைப்படகுகள் - ஒவ்வொன்றும் 5 தொன்கள் வீதம் 9 படகுகள் (கைப்பற்றப்பட்டவை உட்பட) | 45 | " |
| கூகர் படகு | 8 | " |
| | 7937 | தொன்கள் |

**இந்த நான்காண்டுப் போரில் சிங்களக் கப்பற்படைமீது கடற்புலிகள் நடாத்திய தாக்குதல்களால், மொத்தம் 7937 தொன்கள் நிறையுடைய கப்பல்களை சிறீலங்காக் கடற்படை இழந்துவிட்டது.**

www.tamilarangam.net



# "கடலில் புலிகள் நல்ல நிலையில் உள்ளனர்"

## என்று எதிரியே புகழ்ந்துரைக்க வழிவகுத்த எங்கள் காவியங்கள்.



லெப். கேணல் நளாயினி
**பத்மாவதி ஆறுமுகசாமி**
ஊறணி - யாழ்.
07.01-1972 - 19.09.1994



மேஜர் மங்கை
**புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை**
ஊரிக்காடு - யாழ்.
16.12.1965 – 19.09.1994



கப்டன் லக்ஸ்மன்
**குகதாசன் பிரணவன்**
நல்லூர் - யாழ்.
05.07.1974 – 19.09.1994



கப்டன் வாமன்
**கந்தசாமி ரவிநாயகம்**
மட்டக்களப்பு.
22.08.1971 – 19.09 1994

# கடலில் புலிகள் நல்ல நிலையில்...

போராடியதைக் கண்டேன். என்னுடைய வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத சம்பவம்.

***11. வடபுலக் கடலில் - மன்னார் வளைகுடா உட்பட -கடற்படைக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் கடற்போர் பற்றிய உங்களது மதிப்பீடு என்ன?***

கடற்புலிகளைத் தடுத்து நிறுத்த நாங்கள் முயன்று கொண்டிருக்கின்றோம்; எங்களது நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த அவர்கள் முயன்றுகொண்டிருக்கின்றார்கள். இப்போது நடந்து கொண்டிருக்கின்ற கடற்சண்டை இதுதான். ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லமுடியும். கடற்புலிகளிடம் ஒரு தற்கொலைப்படை இருக்கின்றது. அதுகாரணமாக அவர்கள் ஒரு நல்ல நிலையில் (Better Position) இருக்கின்றார்கள். இதேநிலை தொடருமாக இருந்தால், அரசபடைகள் வேறு ஏதாவது ஒரு மார்க்கத்தைத் தேடிப்பிடிக்க வேண்டியிருக்கும் என்று நான் நினைக்கின்றேன்; அதாவது, படைத் தளபாடங்களை அதி நவீனமயப்படுத்த வேண்டிவரும். ஆனால் சிறீலங்காவைப் போல சிறிய நாடுகளுக்கு இது முடியாத காரியமாகும். கப்பல்கள் வாங்குவதிலும் வெடிப்பொருட்கள் வாங்குவதிலும் அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவளிக்கின்றது. இப்போது நாங்கள் ஆட்களையும் ஆயுதங்களையும் இழந்து வருகின்றோம். நாட்டின் பொருளாதாரமும் நாளுக்கு நாள் படுகுழிக்குள் செல்கின்றது. என்னைப் பொறுத்தவரை புத்திசாதுரியமான முடிவு என்னவென்றால், இந்தப் பிரச்சினைக்கு ஒரு அரசியற் தீர்வு கொண்டுவரப்பட வேண்டும் என்பது தான்.

***12. கடற்படைக்கு பேரழிவுகளை ஏற்படுத்தி, படிப்படியாக கடற்படையின் அசைவியக்கத்தை (Mobility) கடற்புலிகள் தடுத்து நிறுத்தும்போது, வடபுலத்தில் இராணுவ முகாம்களை வைத்திருக்க முடியாது போகும் என்று இராணுவ விமர்சகர்கள் கூறுவது பற்றி.......?***

முழுமையாகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறமாட்டேன்; சிறிய அளவில் பாதிப்பு ஏற்படலாம்.

***13. போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்படும்போது அதன் கப்டன்கள் உயிரோடு மீள்வதை அவமானமாகக் கருதும் ஒரு கடற்போர் மரபு இருப்பதாகக் கூறுகின்றனரே? இதுதொடர்பாக நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?***

முன்னைய காலத்தில் ஒரு கப்பல் மூழ்கும்போது அதன் கப்டனும் அதனுடனேயே செல்வார்; ஆனால் தற்போதைய மரபு அப்படியல்ல. தோல்வியடைந்து போகின்ற ஒரு சமரில், நீ சண்டையிட முனையக்கூடாது (You don't try to fight, in a loosing Battle), அதைத் தவிர்க்க வேண்டும்; அல்லது அதிலிருந்து பின்வாங்கி அடுத்த நாள் சண்டைக்குப் போகவேண்டும். முகங்கொடுத்து வெல்ல முடியாத ஒரு சூழ்நிலை எழுந்தவுடன், அதைத் தவிர்ப்பதற்காக இராணுவம்கூடப் பின்வாங்குகின்றது. பின்வாங்கி -தன்னை மீளவும் ஒருங்கமைத்துக்கொண்டு -அடுத்த சண்டைக்குத் தாயராகின்றது. கப்பலுடனே சாவது என்ற முன்னைய காலமரபு இப்போது எந்த நாட்டிலும் நடைமுறையிலில்லை.

'சாகரவர்த்தனா' கப்பலுக்கு நான்தான் பொறுப்பு. அதில் எந்த சந்தேகமும் எனக்கில்லை. ஆனால் பேரழிவுக்கு அது உட்படுத்தப்பட்ட அந்தச் சூழலை உணர்ந்துகொள்ளவேண்டும்.

***14. 'சாகரவர்த்தனா'வை இழந்ததற்காக, அதன் கப்டன் என்ற முறையில் உங்களை இராணுவ நீதிமன்றில் நிறுத்தி விசாரணைசெய்யப் போவதாக, கொழும்புப் பத்திரிகைகள் கூறுகின்றனவே?***

என்னை இராணுவ நீதிமன்றில் நிறுத்தக் கூடும்; அங்கே எனது குற்றமற்ற தன்மையை நிருபிக்கும்படி பணிக்கப்படக் கூடும்; அல்லது கப்பல் மூழ்கக் காரணமான சூழ்நிலைபற்றிக் கேட்கக்கூடும். கப்பல் மூழ்கும்போது கடைசியாகக் கடலில் குதித்த ஆள் நான்தான். அத்துடன், எனக்கு அடுத்த அதிகாரியும் (Second in command) உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளார். நாங்கள் இருவரும்தான் கப்பலைவிட்டு இறுதியாக வெளியேறிய ஆட்கள். என்னுடைய தகைமைகளுக்கு (Abilities) ஏற்ற வகையில் நான் எனது கடமைகளை ஆற்றியுள்ளேன் என்மீது ஏதாவது குற்றம் நிருபிக்கப்படும்வரை நான் நிரபராதிதான். ■

---

### யேர்மனியில் தமிழ் மாணவர் அமைப்பு நடாத்தும்

### மாவீரர்
### வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி
### 1995

அதியுன்னதமான தியாகங்களின் மூலம், தமிழீழம் என்ற எமது தாய்நிலத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவிக்க, உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூருமுகமாக தமிழ் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படவிருக்கும் **மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி**யில் யேர்மன்வாழ் அனைத்து விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் பங்குபற்றி இப்போட்டியைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

போட்டிக்கான விதிமுறைகள், விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

TAMILISCHER STUDENTENVEREIN DEUTSCHLAND C. V.,
POSTFACH, 101133,
41411, NEUSS.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 0711 / 2369693
கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய இருபோட்டிகளுக்குமான விண்ணப்பிக்கும் இறுதிநாள்: 29.04.1995

மெய்வல்லுநர் போட்டிகளுக்கான விண்ணப்பிக்கும் இறுதிநாள்: 31.05.1995

நன்றி.

**தமிழ் மாணவர் அமைப்பு,**
**யேர்மனி.**

---

# அன்று யூகோசிலாவியாவிற்கொரு...

இன்று தயாராகிவிட்டனர். 1992 ஆம் ஆண்டிலிருந்தே தாத்தாரிய மக்கள் வாழும் Tatarstan பகுதி பிரியப் போவதாக முன்னறிப்புச் செய்து வருகின்றது. சக்கலின் தீவுக் கூட்ட குடியரசுகளோ தாம் யெல்ட்சினின் அடிமைகள் இல்லையென போர்க் குரல் எழுப்புகின்றன. ருஸ்ய இனத்தவர் வாழும் சைபீரியப் பகுதிக் குடியரசுகள்கூட மிகக் கூடிய சுயாட்சி அதிகாரம் கோருகின்றன. இன்றும் பல தமது தேசிய வளத்தில் மிகக் குறைந்த பகுதியையே ருஸ்யாவிற்கு வழங்க முன் வருகின்றன. இதனால் தான் இவ்வாறு நிலைகள் நீடித்தால் ருஸ்யா 50, 60 பகுதிகளாக துண்டாடப்பட்டு, 1000 ஆண்டுகட்கு மேலான போரைச் சந்திக்க நேரிடும் என யெல்ட்சின் சிலகாலம் முன்னர் கூறிக் கவலைப்பட்டாராம்.

எனவேதான் செச்சென்யாவின் போக்கு யெல்ட்சினுக்கு பெருத்த தலைவலியாகிவிட்டது. ஆனால் செச்சென்ய மக்கட்கோ, தமது இறைமையைக் காக்க பல நூறு ஆண்டுகளாகப் போராடியபின் 19 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் ருஸ்ய படைகளால் தோற்கடிக்கப்பட்டு தாம் இழந்த தன்னாட்சியைப் பெறுவதே ஒரே இலட்சியமாகும். அதற்காகவே இன்று போராடுகின்றனர். அதேவேளை ருஸ்யத் தரப்பிலும் பெருத்த குழப்பமே நிலவுகின்றது. தமது முன்னைய மதிப்பையும் செல்வாக்கையும் இழந்து சிதறியிருக்கும் ருஸ்ய இராணுவம் எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்கும் என்பதும் ஒரு சிக்கல். மிகுந்த ஊழல்களும் நிரம்பி தகுந்த வேதனமுமின்றியிருக்கும் ருஸ்ய இராணுவத்தை தன்னோடு வைத்திருக்க யெல்ட்சின் மிகுந்த கவனம் செலுத்துகின்றார். இதனால்தான் யெல்ட்சினின் எதிர்ப்பாளர்கள் செச்சென்ய படையெடுப்பிற்கு எதிராக பெருத்த எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். இப்படையெடுப்பினைக் காரணம்காட்டி யெல்ட்சின் பாதுகாப்புச் செலவை அதிகரித்து அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து தம்மை நசுக்கிவிடுவர் என்ற பயம் அவர்கட்கு. இத்தகைய நிலையிலே பெரும் சூதாட்டமொன்றில் யெல்ட்சின் இறங்கிவிட்டார். இப்போது ருஸ்ய இனத்தைச் சாராத சோவியத்திலிருந்து பிரிந்து சென்ற முன்னாள் 14

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்



சென்ற இதழ் தொடர்ச்சி

நான் நுவரேலியாவிலிருந்து 1992 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வந்தேன், எங்கள் மச்சானுடன் இங்கு வந்து சேர்ந்தேன். மச்சான், வீட்டில் இருந்தேன் அப்பொழுது எங்கள் மச்சான் கொழும்பிற்கு போய் விட்டார். அவரின் மனைவி எனக்கு ஓயாமல் வேலை தந்து வதைப்பாள்; அது மட்டுமல்லாது எனக்கு சாப்பாடு தருவது மிகவும் குறைவு; நான் இரண்டாவது முறை கேட்டால் ஏன்னைப் பேசுவார்; அதையும் நான் பொறுத்துக்கொண்டு தான் இருப்பேன். பாடசாலைக்குப் போகும் போது நான் எல்லா வேலையையும் செய்துவிட்டு பாடசாலைக்கு சாப்பிடாமல் போவேன்.

கொஞ்ச சாப்பாடுதான் தருவார் அதைச் சாப்பிட்டுக் கேட்டால் அடிப்பார் அதனால் கேட்பதில்லை. அவரது பிள்ளைகள் அம்மா எல்லோரும் சாப்பிட்டுவிட்டு நித்திரை கொள்வார்கள் எனக்கு நிம்மதியில்லை- ஓயாமல் வேலையும் அடியும் பேச்சும் தான், அவர்கள் நித்திரை கொண்டு 4.30 மணிக்கு எழும்புவார்கள், என்னை 4.30 மணிக்கிடையில் சுடு நீர் வைத்து தேனீர் போடும்படி சொல்லுவார், அப்படி செய்யாவிட்டால் என்னை அடிப்பார், அது மட்டுமல்லாது அவர்கள் படுத்த பாடு இருந்தால் "தான் சாப்பிடுவேன். சாப்பிட்டபிறகு படுப்பேன் அதன்பிறகு நான் 4 மணிக்கு எழும்பி சுடு நீர் வைத்து தேனீர் தயாரிப்பேன். அது மட்டுமல்லாது அவரது பிள்ளைகள் இரண்டு பேரும் எழுந்தவுடன் நான் கால் முகம் கழுவி விடுவேன். இல்லாவிட்டால் எனக்கு அடிப்பார்.

ஒருநாள் எங்கள் மச்சானின் தம்பிக்கு வருத்தம் வந்துவிட்டது; பிறகு அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றேன். அவரை வைத்தியர் அங்கு நிற்கும்படி கூறிவிட்டார், நான் தான் பராமரித்தேன். அப்பொழுது நான் அந்த வெயிலில் சென்றாலும் சாப்பாடு தரமாட்டார், நான் கால் முகம் கழுவி விட்டுத் திரும்பி வந்து விடுவேன். எனக்கு பசியாக இருந்தது அப்பொழுது அங்குள்ள கடைகளில் ஐயா சாப்பாடு தாருங்கள் என்று கேட்பேன். அவர்கள் எல்லோரும் ஏன் என்று கேட்பார்கள். நான் எனது நிலையைக் கூறுவேன், அதைக் கேட்டு உடனே எனக்குச் சாப்பாடு தந்துவிடுவார்கள், அதை வாங்கிச் சாப்பிடுவேன். அதன் பிறகு தான் எனக்கு பசி தீரும்

**காந்தருபன் அறிவுச்சோலையைச் சேர்ந்த சிறார்கள் சிலர், தாங்கள் ஏதிலிகளாக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த மறக்கமுடியாத சம்பவங்களைப் பகிர்ந்துகொண்டபோது பெற்ற விபரங்களே, 'அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்படுகின்றது.**

அது மட்டுமல்லாது நான் பாடசாலையிலிருந்து 2 மணிக்கு வருவேன் அவர் நான் 2.30 மணிக்கு வருகிறேன் என்று அடிப்பார், அப்பொழுது திட்டுவார், அடிப்பார் அதையும் நான் வாங்கிக் கொள்வேன். பாடசாலையிலிருந்து பசியில் வருவேன் வந்தாலும் அவர் வேலை கொடுப்பார். அதைச் செய்யாமல் வந்து சாப்பிட்டால் அடிப்பார், அந்த வேலையை செய்து விட்டுத் தான் சாப்பிடுவேன்.

பாயெல்லாம் சுருட்டி விட்டு வாசலை கூட்டச் சொல்லுவார், நான் அதைச் செய்வேன், 6 மணிக்கிடையில் விளக்கை கழுவி விளக்கேற்றவேண்டும், இல்லாவிட்டால் அடிப்பார், நான் எல்லா வேலையையும் செய்துவிட்டு உடல் நோகுது என்று படுத்தால் அடிப்பார், எல்லோரும் இரவுச் சாப்பாடு சாப்பிட்ட பிறகு அவர்களுக்கு பாய், தலையணி எல்லாம் விரித்து விடுவேன், அதன் பிறகு சாப்

அதன் பிறகு தான் மச்சானிடம் செல்வேன். அங்கு சென்றதும் அவருக்கு வேண்டிய உணவுகளை அங்குள்ள மாமாக்கள் வாங்கித் தருவார்கள். அதைக் கொடுப்பேன். ஒருநாள் எல்லாவற்றையும் யோசித்தேன், அழுதேன், ஒரு முடிவுக்கு வந்தேன்.

நான் காந்தருபன் அறிவுச்சோலையில் சேர்ந்து நிம்மதியாக வாழலாம் என்று யோசித்தேன், மச்சானுக்கு நோய் மாறியவுடன் நானும் அவரும் ஓடிவந்து காந்தருபன் அறிவுச்சோலையில் சேர்ந்தோம். இதுவே எனது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்.

**து. சுரேஸ்**

## வடதமி...

மீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் அவர்கள், "தமிழ்மொழியை உயிருக்கும் மேலாக மதித்துப் பேணிப்பாதுகாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் இனநலன்களை முன்வைத்துச் செயற்பட்டால், எமது எழுச்சிக்கு அவை வழிகோலும் எனவும் இடர்கள், தடைகளைப் படிக்கற்களாக ஏற்று, முன்செல்லவேண்டும் எனவும் வடதமிழீழ மாவட்டங்கள் மட்டத்தில் இடம் பெற்ற இத்தமிழ் எழுச்சிவிழா எதிர்வரும் ஆண்டுகளில் தமிழ்த் தேசிய விழாவாக மலரும்" எனக்கூறினார். ■

# தலைவரின் சிந்தனைகளை நிறைவேற்ற துறைசார் வல்லுநர்களின் ஒத்துழைப்பு தேவை

## ❑ தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர்

"இன்று ஒட்டுமொத்தமாக தமிழீழம் என்ற ஓர் இடத்தை மையமாக வைத்து, எமது அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர்; இந்த இந்த இடங்களில்தான் குடியிருப்புக்கள், நகர அமைப்புக்கள் அமைக்கப்படவேண்டும் என்பதை இனங்கண்டிருக்கின்றனர். இத்திட்டங்களை நிச்சயமாக நாங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். இனம்கண்ட சிக்கல்கள் (பிரச்சினைகள்) ஒவ்வொன்றாக மீண்டும் ஆராயப்பட்டு, இதை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்; இதை நடைமுறைப்படுத்துவதற்கான சிக்கல் என்ன இருக்கிறது என்பதை நாம் மீள ஆராயவேண்டும்". இவ்வாறு தமிழீழ அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் கரிகாலன் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற, 'அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல்' என்ற ஆய்வுப்பட்டறையின் இறுதி அமர்வில் ஆற்றிய உரையில் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில்:

"அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணும் ஆய்வுப்பட்டறையில் கலந்துகொண்டு, தமிழீழத்தின் பொருண்மிய உட்கட்டுமான அபிவிருத்தியை செயற்படுத்த வேண்டுமென்ற அயராத எழுச்சியோடு அனைவரும் இந்த நிகழ்விலே கலந்துகொண்டு, அரிய பல கருத்துக்களை எடுத்து விளக்கியுள்ளார்கள்; தமிழீழம் இப்படித்தான் அமையவேண்டும் என்ற ஒரு எதிர்பார்ப்பிலே பொருத்தமான செயல் திட்டங்களை வகுத்து மலரப்போகும் தமிழீழத்தில் வளருகின்ற பிள்ளைகள் இன்னொரு இனத்திற்கு அடிமைப்பட்டோ இன்னொரு பொருண்மியத்தடைக்கு உட்பட்டோ அல்லலுறக்கூடாது என்பதற்காக இந்தப் பரம்பரையில் நாம் திட்டமிட்டு, செயற்படவேண்டும் இந்த நாட்டினுடைய மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்கான ஒரு அடிப்படை எண்ணத்தோடும் -எதிர்கால சிந்தனையோடு செயற்படுவதை இங்கே நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தத் தமிழீழம் எப்படி அமையவேண்டும் என்பதில் பலருக்கும் கற்பனை உண்டு. எங்கள் தேசியத் தலைவர் அவர்களும் பலவிதமான எண்ணங்கள், சிந்தனைகளோடும் தமிழீழம் எப்படி அமையவேண்டுமென்ற எதிர்பார்ப்போடும் இருக்கின்றார்.

எங்கள் தமிழீழத் தேசியத் தல்லவரின் எண்ணத்தையும் நிறைவேற்றுவதற்கு எங்கள் துறைசார் வல்லுநர்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் இருக்குமாக இருந்தால், நிச்சயம் நாங்கள் அத்தகைய ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். மிகுந்த ஆற்றலுள்ள ஒரு தேசியத் தலைவரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். தலைவரும் இப்படித்தான் ஒவ்வொன்றாகச் சிந்தனைசெய்து தன்னை வளர்த்துக்கொண்டவர்.

உங்களுக்குத் தெரியும்; ஆனையிறவுப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, கப்பல் மூலம் துருப்புக்களை இறக்கி அந்தப் போரை முறியடித்த சிறீலங்கா இராணுவத்திற்கு தலைவர் அவர்கள் சவால் விடுத்திருந்தர்; இந்தக் கடற்படையினரின் கடல் ஆதிக்கத்தை முறியடிப்பேன் என்று. மூன்று ஆண்டுகளுக்குள் கடற்படையை ஒரு மிகப்பெரிய வளர்ச்சிகண்ட படையணியாக மாற்றியமைத்து,

இன்று கடற்படைக்கு அதிவேக விரைவுப் படகுகளையும், சிங்கள இராணுவத்திடமிருந்து அவர்களுடைய கடற்படைத்தளங்களை அழித்துக் கைப்பற்றியதை நீங்கள் நேரடியாகவே பார்த்திருக்கின்றீர்கள். அவ்வாறு அவர் தன்னுடைய சிந்தனைகள் ஒவ்வொன்றையும் நிசமாகவே செயற்படுத்திக் காண்பித்திருக்கின்றார். இன்றும் இந்தப் போர் நடவடிக்கைகளில் முழுமையான கவனத்தைச் செலுத்தி, எமது நாட்டை முழுமையாக பாதுகாப்புள்ள ஒரு நாடாக மாற்றியமைக்கவேண்டும் என்ற சிந்தனையோடும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். அதேநேரத்தில் எங்களுடைய மக்களின் ஆதரவும் இந்த துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களுடைய ஒத்துழைப்பும் இருக்குமாக இருந்தால், நிச்சயமாக நாம் எதிர்பார்க்கின்ற அந்த தமிழீழத்தை மாற்றியமைக்க முடியும்.

ஆராய்ந்து, ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை வடிவமைத்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை நாங்கள் கொண்டுவரவேண்டும். இன்று நாம் ஒரு எதிர்பார்ப்போடு இந்த செயற்திட்டங்களை இனங்காணுகின்றோம். இன்றைய அரசு ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையை நடாத்திக் கொண்டிருக்கின்றது. எமது தலைவர் அவர்களும், இரத்தம் சிந்தாமல் எங்கள் மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை கிடைக்குமாக இருந்தால், அதனை நாங்கள் பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றோம் என்று பகிரங்கமாகவே அறிக்கைவிட்டதோடு, ஆக்கமான பல நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளார்.

இன்று சந்திரிகா அவர்கள் ஜனாதிபதியாக வந்துள்ளார். ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்து எங்கள் தேசியத் தலைவர் அவர்கள் ஓர் ஏழல் (வாரம்) போர் நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு எங்களது விடுதலைப்புலிப் போராளிகளுக்கு அறிவித்தல் கொடுத்திருந்தார். இந்த ஒவ்வொரு

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

## தமிழீழ நன்மைக்காகவே தொழிற்சாலை தேவை

**- பேராசிரியர் வே.நவரத்தினராசா**

"கைத்தொழில் சம்பந்தமாக எம்மால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் எமது சிறந்த கனவுகள்; அவற்றை நனவாக்குவதன் மூலம் நாம் வளமான தமிழீழத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்." இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் ஆய்வுப்பட்டறையில் கைத்தொழில் சம்பந்தமான அமர்விற்கு தலைமைவகித்துப் பேசிய பொறியியல்பீட பேராசிரியர் திரு. வே. நவரத்தினராசா அவர்கள் கூறினார்.

காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலை எமது மூலவளத்தை சுரண்டும் ஒன்று எனவும், எதிர்காலத்தில் பல தொழிற்சாலைகள் புனரமைக்கும்பொழுது அவை தமிழீழத்தின் நன்மையைக் கருத்திற்கொண்டு செயற்பட ஆவணசெய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவன முகாமையாளர் எஸ். தியாகராசா அவர்கள், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் கைத்தொழில் அபிவிருத்தி பற்றி கருத்துரை ஆற்றினார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு மூலவள நிலையத்தால் அதிகபயன்

## ■ தமிழீழ கல்விப்பொறுப்பாளர் வெ. இளங்குமரன்

"எமது சமுதாயத்திற்கு கணிதம் முக்கியம்; கல்வி அறிவு விலைமதிக்க முடியாத ஒன்று. கடந்த காலத்தில் கணிதத்தில் தலைசிறந்த மாவட்டமாக இருந்த யாழ். மாவட்டம் தற்போது தரம் குன்றி காணப்படுகிறது".

வடமராட்சிக் கல்விக் கோட்ட கணித மூலவள நிலையத்தினரின் ஓராண்டு நிறைவு விழா கடந்த ஆண்டு நவம்பரில் (11. 1-1. 1994) கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா தலைமையில் நடைபெற்றபோது, முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட தமிழீழ கல்விப்பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு முன் தொடக்கத்தில் மங்கள விளக்கு ஏற்றலுடன் தேசியக் கொடியை தமிழீழக் கல்விக் கழக பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும், பாடசாலைக் கொடியை கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசாவும் ஏற்றி வைத்தனர்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், "கடந்த காலத்தில் கணித பாடத்தில் இம்மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தலைசிறந்து காணப்பட்டனர். தற்போது தமிழீழ பொதுக்கல்வி தேர்வுகளின் மூலம் கணித பாடத்தின் தரம் குறைவடைந்திருக்கிறதை அறியக்கூடியதாகவுள்ளது.

கணித பாடத்தில் தேர்ச்சி குறைந்த மாணவர்களுக்கு கணித மூலவளம் ஒரு வழிகாட்டி; கணித மூலவள நிலையத்தின் மூலம் மாணவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். கற்பித்தல் முறையானது கணித மூலவள நிலையத்தில் மட்டும் தங்கியிருக்காது பாடசாலை மட்டத்திலும் கணித மூலவள செயற்பாடு பரவலாக்கப்பட வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் பரவலாக்கப்படும் போது, மெல்லக் கற்கின்ற மாணவர்களுக்கு அதிக பயனைக் கொடுக்கும். மாணவர்கள் பலர் பலனடைவர்; கணித பாடம், தேர்வுக்கு மட்டும் தங்கியிருக்காமல் எமது அன்றாட வாழ்வின் தேவைக்கும். பயன்படும், இதனை நாம் உணர்ந்து மாணவர்கள் மத்தியில் கணிதத்தை கற்பிக்க வேண்டும். கசப்பானவற்றை இனிப்பாக மாற்றும் பயன்பாடு கணித மூலவளத்திற்கு உண்டு. இந்த மூலவளத்தைப் பயன்படுத்தி மாணவர்களை கணிதத்தில் தேர்ச்சி பெற வைக்கமுடியும். கணித பாடத்தின் வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் இருந்திருக்கின்றன. கணித பாடத்தின் தரத்தை உயர்த்த சகலரும் தன்னால் இயன்ற முயற்சியை எடுக்க வேண்டும். எமது கழகம் தொடர்ந்தும் மாணவர்களுக்கு ஆதரவு வழங்கும்" என்றார்.

முதன்மை விருந்தினரில் மற்றொருவரான வலயம் -2 கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி உரையாற்றும் போது, கணித எண்ணக்கருவை கீழ் வகுப்பில் கற்றுக் கொடுத்து, கணித பாடத்தின் அறிவை மாணவர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும். சிறு சிறு விடயங்களை பெரிதாக்கி விடக்கூடாது. ஒரு தேர்வுப் பெறுபேற்றில் சித்தியடையாத மாணவர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும். தேர்வுப் பெறுபேறுகளை பெரிதாக்கி விடக்கூடாது.

கல்வித் தரம் குறைந்த மாணவர்களுக்கு கணித மூலவள நிலையத்தின் மூலம் தரத்தை உயர்த்த வேண்டும். கணித பாடத்தில் தேர்ச்சி இல்லாமல் மேல் வகுப்புக்களில் கல்வி கற்பது கடினம். ஒரு தேர்வுப் பெறுபேற்றில் கணித பாடம் சித்தியடையாது விட்டால், மாணவர்களுக்கு கால் முறிந்தது போலாகும். கல்வி மாணவர்களுக்குச் சேரவேண்டுமானால் மாணவர்கள் ஆசிரியரை மதிக்க வேண்டும்.

இந்த மண்டபத்தில் காணப்படுகின்ற கணித கோலங்கள் கணித உணர்வை உண்டுபண்ணுகின்றன. மாணவர்கள் கல்வியில் தேற ஆசிரியர்களின் ஊக்கம் தான் முக்கியம்.

தொடர்ந்து மூலவள நிலையப் பொறுப்பாளர் திரு. இராமகிருஸ்ணன், பாடசாலை மாணவி செல்வி பிறேமவதி, மாணவன் கோ. குகதாசன், ஆசிரியர்கள் சார்பில் கணிதவள ஆசிரியர் திரு. மகாதேவன், கணிதமுதன்மை ஆசிரியரும் ஆசிரிய ஆலோசகருமான திரு. செபரட்ணம், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி அதிபர் திரு. என். அனந்தராஜ், வலயம் -2 கணித மூலவள உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், தெ. ப. பொ. கூ. முகாமையாளர் திரு. சிவநேசன் ஆகியோரும் உரையாற்றினர்.

வரவேற்புரையை பாடசாலை அதிபர் திரு. க. பொன்னையாவும், நன்றியுரையை திரு. கி. சிவராசாவும் நிகழ்த்தினர். தொடர்ந்து "ஒரு மனிதனின் வாழ்க்கையுடன் இணைந்து செயல்படுவதில் கூடிய பங்கை வகிப்பது எண் கணித அறிவா? கேத்திர கணித அறிவா? என்னும் பொருளில் பட்டிமன்றம் இடம்பெற்றது. மூலவள நிலையத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். ■

# மோதல் தவிர்ப்பு...

நடவடிக்கைகளை அவை மேற்கொள்ளலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அவசரகாலச்சட்டம், குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் மேல், சிறீலங்காப் பாதுபாப்புப் படைகள் கடும்போக்கினை மேற்கொள்வதற்கு பக்கத்துணையாக உதவக்கூடும் என அவதானிகள் கருதுகின்றனர்.

இத்தகைய இராணுவ விஸ்தரிப்பிற்கான மறைமுகப்போக்குகள் தெளிவாக இனங்காணப்படும் நேரத்தில், வடபகுதிக்கான ஆனையிறவு, பூநகரி இரு பாதைகளையும் திறந்துவிடவேண்டும் என்பதே சிறீலங்கா அரசின் நிலைப்பாடாகும் என சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கூறியுள்ளார்.

உண்மையில் இராணுவ விஸ்தரிப்பிற்கான தடுப்பு நடவடிக்கைகளைப்பற்றி ஆராயாமல், கேந்திர முதன்மைத்துவம் வாய்ந்த பாதைத்திறப்பு பற்றி சிறீலங்கா பேசுவது அவதானிகளுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்கு (National Security) உத்தரவாதம் வழங்கப்பட்டு இராணுவ ஆக்கிரமிப்பு அபாயம் நீங்கிய நிலையிலேயே சுதந்திரமான பாதைத்திறப்புக்கள் சாத்தியமாகலாம் என்பது உலகப் போராட்ட அனுபவம். மேலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் வேண்டுகோளின்பேரில் இளவாலை, கீரிமலைப் பிரதேசம் போர்ச் சூனியப் பிரதேசமாக்கப்பட்டு கீரிமலைப் பாதை திறக்கப்பட்டபோது, அனைத்துலக போர்ச் சட்டத்திற்கு முரணான வகையில் சிறீலங்கா இராணுவம் இளவாலை -கீரிமலைப் பிரதேசத்தை இராணுவ ஆக்கிரமிப்புச் செய்த வரலாற்றை உலகு சமீப காலத்தில் இனங்கண்டுள்ளது.

ஆயினும் இப்பாதைத் திறப்பு தொடர்பான புதிய ஆலோசனை, சிறீலங்கா அரசால் கடிதம் மூலம் விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் சிறீலங்காப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த கூறியுள்ளார்.

இதுவரை 15 கடிதங்கள் சிறீலங்கா அரசுக்கும், தமிழீழ அரசுநோக்கிய அரசிற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார். அத்துடன் சிறீலங்கா அரசுக்கும் தமிழீழ அரசுநோக்கிய அரசுக்கும் இடையே 'நேரடித் தொலைபேசிச் சேவை' (Hot Line) ஒன்று மோதல் தவிர்ப்பு அமுலாக்க சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் இருவாரகாலத்துடன் முடிவடைவதாக உள்ளபோதிலும் தொடர்ந்தும் நீடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் விடுதலைப் புலிகள் எட்டு முதன்மையான விடயங்கள் குறித்து சிறீலங்காவிடம் ஆலோசனைகள் சமர்ப்பித்துள்ளதாகவும் அவை சிறீலங்காவால் வரவேற்கப்பட்டு தீர்த்துவைக்கப்பட்டால், இலங்கைத் தீவில் நிரந்தர அமைதி ஏற்படலாம் என, பூவரசங்குள மோதல் தவிர்ப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதி கூறியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# திருமலையில் நோர்வே...

4. வவுனியா மாவட்டக் குழுவிற்கு கிளிநொச்சியைச் சேர்ந்த **சின்னத்தம்பி கதிரவேலு,** கண்டாவளையைச் சேர்ந்த **சுப்பிரமணியம் தர்மரத்தினம்.**

5. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டக் குழுவுக்கு அம்பாறையைச் சேர்ந்த **பொன்னர் நடராஜா,** மட்டக்களப்பைச் சேர்ந்த **கிங்ஸ்லி அரியரத்தினம் ராஜநாயகம்.**

இது ஒருபுறமிருக்க இம்மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுக்களில் அனைத்துலக பிரதிநிதிகளை நோர்வே, நெதர்லாந்து, கனடா போன்ற நாடுகள் நியமிப்பதினை தமிழீழ விடுதலைப் புலிகள் வரவேற்றுள்ளதாகவும்

ஆயினும் 'சார்க்' அமைப்பின் தற்போதைய தலைமை நாடான பங்களாதேசும் அணிசேரா நாடுகள் அமைப்பின் தற்போதைய தலைமை நாடான இந்தோனிசியாவும் தமது பிரதிநிதிகளை நியமிப்பதற்கு விடுதலைப் புலிகள் அங்கீகரிக்கவில்லையெனவும் கொழும்புச் செய்தித்தாள்கள் செய்தி தெரிவித்துள்ளன. ■

# எதிர்கால வாழ்விற்கு இன்றைய கல்வி பயனற்றது

**- க. அருண் ஆசிரியர்**

"இக்காலக் கல்வி மாணவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு சரியான பயன் அளிப்பதாக அமையவில்லை; வணிகக் கல்வி படித்த மாணவர்களை, நிதித்துறைக்கு பணிக்கமர்த்துவதற்கு எடுக்கும்போது, அவர்களுக்கு மேலதிக பயிற்சியளிக்க வேண்டியிருக்கின்றது".

இவ்வாறு தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. க. அருண் ஆசிரியர், வைத்தீஸ்வரா க். கல்லூரி வணிக மாணவர் மன்றத்தின் 'வணிக ஒளி' மலர் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா அண்மையில் மேற்படி கல்லூரியின் விவேகானந்தா மண்டபத்தில் மன்றத் தலைவர் செல்வன் சீ. ராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றது.

"பல்கலைக்கழகத்தில் இப்போது வணிகத்துறை, முகாமைத்துவத் துறை என இரு துறைகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் இத்துறை மூன்று துறைகளாகப் பிரிக்கப்படவுள்ளன" என, முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைத் தலைவர் திரு. மா. நடராஜசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. து. சந்தோசம் தனது உரையில் வணிக மாணவர்களது முயற்சியையும் வளர்ச்சியையும் பாராட்டினார்.

யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட நிதி உதவியாளர் திரு. க. கனகரத்தினம் மலர் மதிப்பீட்டுரை நிகழ்த்தினார். மலர் ஆசிரியர் செல்வன் ரி. தனேந்திரன் பதிலுரையையும் மன்றச் செயலர் திரு. ஆ. திலீபன் நன்றியுரையையும் வழங்கினார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ■

# தலைவரின் சிந்தனைகளை...

நடவடிக்கையும் நாங்கள் எம்மக்களுடைய நிம்மதியான வாழ்க்கையை மையமாக வைத்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம் என்பதையே காட்டுகின்றது.

இன்று உலகம் மிகவேகமாக முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றது. கணனிமயமாக உலக நாடுகள் முன்னேற்றமடைந்திருக்கின்ற நேரத்திலே இங்கு பலர் பேசினார்கள்; நாங்கள் இருபது ஆண்டுகள் பின்தங்கிய நிலைக்குச் சென்றுவிட்டோமென்று. இருபதாம் நூற்றாண்டின் பின் இறுதிக்கட்டத்திற்கு வந்தபின்னும் நாங்கள் இன்னும் பழைய நிலைக்குத் திரும்பமுடியாது. ஆகவே புதிய யுகத்தை நோக்கி நாம் செல்லவேண்டுமாக இருந்தால், அந்த நவீன யுகத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய புதிய முறைகளை அறிமுகப்படுத்தவேண்டிய கட்டாயதேவை எங்களுக்கு இருக்கின்றது. இதனை எல்லோரும் நீங்கள் புரிந்திருக்கின்றீர்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த கருத்தரங்கிலும் கலந்துகொண்டிருக்கின்றீர்கள். ஆகவே நாங்கள் இதனை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்திக் காட்டவேண்டும்.

அதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணவேண்டும். இதனை நாங்கள் இச்சூழ்நிலையிலே ஆராய்வு செய்வதோடு மட்டும் நின்றுவிடாது, இந்த ஒவ்வொரு திட்டத்தையும் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதை நாம் நேரடியாகச்சென்று அவதானித்து ஆய்வு செய்து அதற்கான திட்டங்களை வகுக்கவேண்டும். ஆகவே இங்கே கூறப்பட்ட கருத்துக்களை ஆக்கபூர்வமானதாக எடுத்துக்கொண்டு, அதனை நாம் நடைமுறைப்படுத்தவேண்டும். மேலும் எம்மிடமுள்ள ஆற்றலுள்ள சக்திகளை நாம் முழுமையாகப் பயன்படுத்தி, உணர்வுபூர்வமாக ஒவ்வொருவரும் ஒத்துழைத்து இந்த ஆய்வுப்பட்டறையை முழுமையான ஒரு பயனுள்ளதாக மாற்றுவதற்கு உங்கள் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பையும் கேட்டுக்கொள்வதோடு, ஒவ்வொரு துறைசார்ந்த வல்லுநர்களும் ஒவ்வொரு குழுக்களை நாம் அமைத்து, இந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளுடைய அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட ஒரு முழுமையான திட்டத்தைத் தயாரிக்கவேண்டும்" என்றார். ■

www.tamilarangam.net






சிறு கதை

தமிழீழத்திலிருந்து
**செல்வி. ச. வதனா**

**ஈழநாதம் (வன்னிப்பதிப்பு) ஓராண்டு நிறைவுப் போட்டியில் முதல் பரிசுபெற்ற சிறுகதை**

"**கா**லையில இருந்து வீட்டில கிடைக்கிற பேப்பரெல்லாம் மேஞ்சு கொண்டிருந்தா எப்படி? அதத செய்யவேண்டிய நேரத்தில செய்யவேண்டாமோ?"

வீட்டிலுள்ளிருந்து கற்பகம் கத்துவது சுந்தரம்பிள்ளையின் காதுகளில் நாரசுரமாக விழுந்தது.

"கற்பகம் ஏனிப்பிடிக் கத்துறாய்? நான் இப்ப என்னத்தைச் செய்யவேணும்? உன்னோட சேர்ந்து சமைக்க வேணுமே? எனக்கு சமையலொன்றும் தெரியாது."

பதிலுக்குக் கத்தவேண்டும் போல்தான் சுந்தரம்பிள்ளைக்கு விருப்பம். ஆனால் மனைவியென்றாலும் எதிர்த்துப் பேசிப்பழகாதவர். மௌனமாக சமையல் கட்டுப்பக்கம் சென்று,

"என்ன கற்பகம்! என்ன! என்னத்தைச் செய்யச் சொல்லுறாய்!? இந்த அறுபத்திரெண்டு வயசுல பேப்பர்களை படிச்சுக்கொண்டிருக்காட்டி வேறு என்னத்தைச் செய்யிறது?!"

என மென்மையாகக் கேட்டார். "என்னத்தைச் செய்யிறதோ! எங்கட கடைக்குட்டிக்கு கல்யாணப்பேச்சு முற்றாகிப்போட்டுது தெரியுந்தானே; ஏன் மறந்து போச்சே?

ஓ... நல்லாத் தெரியும். ஞாபகம் இருக்கு... அதுக்கு என்ன என்னத்தைச் செய்யச் சொல்லுறாய்!?"

**"உங்களுக்கு தலையிலதான் முடிகொட்டுதெண்டு பார்த்தா, சிந்திக்கிற மூளையும் கொட்டிற்றே ? சின்னவன்ர கல்யாணத்துக்குரிய வேலை-களை செய்ய வேண்டாமேப்பா!"**

**"கல்யாணத்துக்கு நாங்கள் என்னத்தைச் செய்யவேணும்? கோயில் மண்டபம், கல்யாணச் செலவு, ரிஜிஸ்டேசன் எண்டு எல்லா வேலைகளையும் பொம்பள வீட்டாக்கள் செய்யுறம் எண்டு சொல்லிப்போட்டுதுகளே!?"**

"ஓம் ஓம்... செய்யுங்கள் அதோட ரெண்டுபேரையும் கனடா அனுப்புறதும் அவையளின்ர வேலைதான். ஆனால் எங்கட வேலையெண்டு ஒண்டு இருக்கல்லே!"

"அதானப்பா என்னண்டு சொல்லுமேன்!"

"மூத்தவன் பிரான்சில இருந்தும் அடுத்ததுகள் ரெண்டும் யேர்மனியில இருந்தும் என்தம்பி சுவிசில இருந்தும் அடிக்கடி கடித்தில என்ன எழுதுதுகள்? மறந்துபோச்சே! சின்னவன் பாலனிற்கு நல்லா கல்யாணத்த செய்துபோட்டு வெளியில அனுப்புங்கோ; அங்கயிருந்தா வீணா பிரச்சினையில மாட்டுப்படுவான் எண்டு எத்தனை தடவை எழுதிப் போட்டதுகள்."

"சரிசரி அதற்குத்தான் பொம்பளையின்ர தமையன் இருக்கிற கனடாவிற்கு எங்க பொடியனையும் அனுப்பப்போறோமே! ஏன் இப்ப பாலன் ஏலாது எண்டுபோட்டானே?!

"இல்லையில்லை அவனொண்டும் அப்படிச் சொல்லையில்லை. அவன் சொல்றான். தன்ர பிரன்ஸ்செல்லாம் கல்யாணத்தை நல்லாப் பெரிசா செய்யச்சொன்னதுகளாம். பத்திரிகையெல்லாம் நல்லா அடிக்கவேணும் எண்டும் கதைச்சவன்."

"ஓ... அதுக்கென்ன அவன் விருப்பப்படி பத்திரிகையும் அடிச்சு பேப்பருக்கும் கொடுத்து விடுவோமே".

"அதத்தான் நானும் சொல்ல வந்தனான். **இங்க யாழ்ப்பாணத்தில நல்லகாட் கிடைக்கிறது சரியான கஸ்டமாம்; அதோட பேப்பருக்கு கொடுத்தாலும் கோடடிச்ச பேப்பரிலதான் வருமாம். அதால, கொழும்புக்குப் போட்டு வாங்கோ! கொழும்புப் பேப்பருக்கும் கொடுத்துப்போட்டு வாங்கோ!"**

"என்ன?!! கொழும்புக்கோ கொழும்பெண்டால் எவ்வளவு செலவு தெரியுமே? எவ்வளவு கஸ்டம் போய்வர?"

"ஓ... அதற்கு என்ன செய்யுறது. பெடியனை கொழும்பிற்கு அனுப்ப ஏலாது. நீங்கள்தான் போகவேணும். போவதற்கு ஏற்பாடு செய்யுங்கோ!"

மனைவி கற்பகத்தின் விளக்கத்தையும் பின் இடப்பட்ட கட்டளையையும் கேட்டு சுந்தரம்பிள்ளை அடங்கிப் போனார்.

"சரி நான் அடுத்த போட்டிற்கு வெளிக்கிடுறன்."

"இங்க யாழ்ப்பாணத்துப் பேப்பரில்ல கோடடிச்சுத்தான் செய்திவரும்; அது கூடாது. நீங்கள் கொழும்பிற்கு போட்டு வாங்கோ!"

தாயும் தனயனும் மீண்டும் மீண்டும் தன்னை நச்சரித்தது, காதில் ஒலித்துக் கொண்டிருப்பதாக கிளாலி படகுத்துறை மணலில் இருந்த சுந்தரம்பிள்ளைக்கு உணர்ந்தது. அந்தக்கரையில் பெருந்திரளான மக்கள் ஏதோ காரணங்களுக்காக இக்கடலைக் கடக்க இரு தினங்களாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மூன்று தினங்களுக்குப்பின் இன்று மறுபடியும் படகுச்சேவை நடைபெறுமென கடற்புலிகள் அறிவித்தபின், இன்றுதான் சனங்களுக்கு மனத்திலேயொரு நிம்மதி. முகத்திலோ மகிழ்வு இருந்தாலும் அக்கரைக்குச் சென்றால்தான் அது நிச்சயம்.

கிளாலிக் கடலைக் கடப்பதென்பது பகலில் முடியாத காரியம். காரணம், பகலில் கடக்க முனைந்தால் பூநகரியின் கடற்படையினர் வந்து சூறையாடிவிடுவார்கள். இரவில்தான் கடலைக் கடக்கவேண்டும். அவ்வேளைகளிலும் கடற்படை வருவதுண்டு. ஆனால் அதை கடற்புலிகள் சமாளித்து, அடித்து விரட்டிவிடும் என்றுதான் சுந்தரம்பிள்ளை கேள்விப்பட்டிருக்கிறார். அது உண்மையா பொய்யாவென இன்று அறியவும் போகிறார்.

காலையிலிருந்து காத்திருந்து மதியம் மட்டும் ஆறு இடியப்பமும் ஒரு பிளேன்டியும் குடித்தார். அதற்கே பன்னிரண்டு ரூபா கணக்கு வந்துவிட்டது. இதுவரை அவர் கிளாலிக் கரையை அடையமட்டும் முன்னூற்றிஐம்பதிற்குமேல் செலவழித்து விட்டார். அவரிந்தக் கடலைக் கடப்பதைக்கூட பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் இன்னும் எவ்வளவு செலவழிக்கவேண்டிவருமோ? அதை இங்கேயே செலவழித்து காட் அடிச்சிருக்கலாம். கோடடிச்ச பேப்பரில படம் வந்தாலென்ன? முகம் தெரியாதே! இதுகளுக்கு விளங்க வைக்க ஏலாது.

இன்று தமிழீழத்தில் எத்தனையோ பேர் இப்படித்தான். விண்ணிலிருந்தாலும் குளிர்ச்சியாக அழகாகவிருந்தாலும் தாரகை; சேற்றின் நடுவேயிருக்கும் செந்தாமரைபோல் வருமா?"




என்று சுந்தரம்பிள்ளையின் மனவலை இறைஞ்சிக் கொண்டிருந்தது அக்கடலலையைப்போல!

* * *

பலரும் கூறியது போலல்ல கடலில் புறப்படும்போது, தனக்குத் தெரிந்த அனைத்துக் கடவுள்களையும் வேண்டிக்கொண்டுதான் புறப்பட்டிருந்தார் சுந்தரம்பிள்ளை. ஆனால் பூநகரியிலிருந்து இடையிடையே வெளிச்சம் மட்டுந்தான் அடித்துக்கொண்டிருந்தவன். நல்லகாலம் கடலில் வந்து கலாட்டா செய்யவில்லை. இருந்தாலும் கடற்புலிகளின் படகுகள் மட்டும் குருவி பறப்பதுபோல அதிவேகத்துடன் கடற்படை வருவான் என எதிர்பார்க்கப்படும் பக்கம் அடிக்கடி சென்று வந்துகொண்டிருந்தது.

கடல் நன்றாக அடித்ததினால் நன்றாக கடல்நீரில் நனைந்தபடியே கரையை வந்தடைந்தார். கரையில் மிசின் நின்றது. அதில் ஆலங்கேணி வந்து காலை தாண்டிக்குளம் தடைமுகாமினை வந்தடைந்தார் சுந்தரம்பிள்ளை.

பொறுத்த வெயிலில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள்வரை நிற்கவைத்துவிட்டனர் சிறீலங்கா இராணுவத்தினர். நேற்றிலிருந்து சரியாகச் சாப்பிடாததினால் சுந்தரம்பிள்ளையின் தலை சுற்றுமாப்போலவும் இருந்தது.

இராணுவத்தின் அர்த்தமற்ற சோதனைகளையும் தேவையற்ற கேள்விகளையும் முடித்துக்கொண்டு, ஒருவழியாக வவுனியாவுக்குள் நுழைந்த சுந்தரம்பிள்ளை, தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தையும் தெரியாத சிங்களத்தையும் வைத்து எப்படியோ கதைத்து கொழும்பு சென்றார். அங்கு மகனும் மனைவியும் விரும்பியவாறு நல்ல காட்டில் 'மலிவு விலையில்' கல்யாணப்பத்திரிகையை அடித்துக்கொண்டு கோடில்லா கம்யூட்டர் அச்சில் பதிவாகும் பேப்பருக்கும் கொடுத்துவிட்டு ஊர் திரும்பினார்.

பலரும் கூறியிருந்தனர், ரெயிலிலே சிங்களக் காடையர்கள் கொள்ளையடித்துப் போடுவான்கள் என்று. அதனால் சற்றும் கண்ணயராமல் விழித்தபடியிருந்தார் சுந்தரம்பிள்ளை.

தன்னிடம் பறிகொடுக்க என்னயிருக்கிறது என சிந்தித்தார் சுந்தரம்பிள்ளை. "கொண்டுவந்த ஐம்பதினாயிரத்தில இதுவரை போக்குவரத்து செலவு... ம்... ம்... ம்... மூ... மூவாயிரத்திட்ட வந்திட்டுது. இனிப் போய்ச்சேர எப்படியும் ரெண்டாயிரம் ரெடியா இருக்கவேணும். மற்றப்படி ஆயிரம் பத்திரிகை... ரெண்டாயிரம் சொன்னவன்... கூறை துணி இருபது கொடுத்தனான். அப்ப இருபத்தியைந்து சரி. பேப்பருக்கு கல்யாணப்பத்திரிகை... பிறகு நன்றி நவிலல் அதையும் எப்படியோ வேறு கல்யாணப் போட்டோவை வந்தவையளின்ர முகத்திற்கு இதுகளின்ரை முகத்தை வைச்சு இப்பவே கொடுத்தது நல்லதாப் போச்சு. அதற்கு... அந்திந்த செலவெல்லாம் எட்டுக்கு வந்திட்டுது. மூன்றுதரம் பெரியவனோடையும், மற்றதுகளோட யேர்மன், சுவிஸ் எண்டு டெலிபோன் கதைச்சது எல்லாம்... பத்துக்கு மேலதான்வரும். அவ சொன்ன இந்தச் சில்லறைச் சாமான்களுக்கே அஞ்சு முடிஞ்சிட்டுது. ஐம்பதோட வந்தனான். போகேக்க ஆயிரம்

**தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






கொண்டு போவனோ தெரியேல்ல... ம் கடவுளே யாழ்ப்பாணத்துப் பேப்பரில கோடாம்... இப்ப சிக்கனமா ஐம்பதில முடிஞ்சுட்டுது.

இரண்டு ரவுலிங்பேக் கல்யாணப் பத்திரிகை அடங்கிய பெட்டி என்று மூன்று பார்சலைத் தூக்கிவர சுந்தரம்பிள்ளை பெரிதாகச் சிரமப்பட்டார். ஒரு வழியாக தாண்டிக்குளம் சோதனைச் சாவடியை அடைந்து, சோதனையில் கலந்துகொண்டார்.

"இது புலிக்கு கொண்டுபோறது தானே?"

கல்யாணப் பத்திரிகையைப் பார்த்து சிங்கள இராணுவம் கேட்க...

"இல்லை... ஐயா; என்ர புத்தாட வெடிங்கிற்கு..."

"உன்ர புத்தா... புலி... அதுக்கு தானே... கல்யாணம்... நீ அங்கிட்டு நில்லு..."

மீசைகூட அரும்பாத அச்சிறு இராணுவத்தினர் சற்றும் மரியாதையின்றி அவரை அப்புறப்படுத்திப்போட்டு ஏனைய பயணிகளில்... சோதனையைத் தொடர்ந்தனர். அதிலும் ஐந்தாறுபேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் எல்லோரையும் வேறு இருவர் வந்து விசாரித்து சுந்தரம்பிள்ளையை விட்டபோது நேரம் மூன்றைத் தாண்டிவிட்டிருந்தது.

வேகமாக வெளியேறிய சுந்தரத்தார்... ஆள் பிடித்து சாமான் தூக்கி தமிழீழத்தினுள் நுழைந்தார். அவரின் நல்லகாலமோ என்னமோ அன்று படகுச்சேவை இருந்ததினால் அவர் சாப்பாட்டைக்கூட சிந்தியாது பயணத்தைத் தொடர்ந்தார்.

* * *

மீண்டும் சுந்தரம்பிள்ளைக்கு ஒரு கடற்பிரயாணம் செய்யவேண்டியதையெண்ணி கலங்கிய கண்களுடன் கடலைப் பார்த்தார். அந்திசாயும் நேரம் எங்கும் இருள் மென்மையாகப் படர்ந்துகொண்டு வந்தது. ஆலங்கேணி கரையில் கடற்பயணம் செய்ய படகுகள் தங்களைத் தயார் செய்துகொண்டிருந்தன.

**"கடவுளே... முருகா அண்டைக்குப் போல இண்டைக்கும் நான் ஒரு பிரச்சினையும் இல்லாமல் கடலைக் கடக்கவேணும். எனக்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாட்டி மூன்று வெள்ளிக்கிழமை தொடர்ந்து விரதமெடுத்து நல்லூருக்கு வருகிறேன். முருகா நீதான் காப்பாற்றவேண்டும்".**

சுந்தரம்பிள்ளை மனதிற்குள்வேண்டி நேர்த்தி வைத்துக்கொண்டிருந்த நேரம்.

**"அப்பனே... ஆண்டவா; நீதான் என் செல்வங்களுக்குத் துணை. எங்களுக்குப் பாதுகாப்புத் தாறன் எண்டு திரியும் இந்தப் பிள்ளைகளை நீதான் காத்தருளவேண்டும். இன்றும், என்றும் இக்கடலில் ஒருவருக்கும் ஒரு தீங்கும் வரக்கூடாது".**

யாரோ வாய்விட்டுக்கோரும் கோரிக்கையைக் கேட்டு, சுந்தரம்பிள்ளை திரும்பிப்பார்த்தார். அங்கு சுமார் நாற்பது நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் மறையும் சூரியனைப் பார்த்து வேண்டிக்கொண்டிருந்தாள். சுந்தரம்பிள்ளை தனது வேண்டுதலையும் அப்பெண்ணின் வேண்டுதலையும் கேட்டு வெக்கிப்போனார்.

"நான் எவ்வளவு பெரிய சுயநலவாதி".

படகு புறப்பட்டுவிட்டது. கரையில் தனக்கருகில் நின்றபெண் படகிலும் கூடவருவதையும், எல்லாருமாகப் பதினான்கு பேரும் சாமான்களோடும் படகு பயணிப்பதையும் சுந்தரம்பிள்ளை கவனித்துக் கொண்டார். படகிலிருந்த பதினான்கு பேருக்கும் முகத்திலொரு பயமிருந்தது. அவரவர் தமது குல தெய்வங்களை வழிபட்டுக் கொண்டிருப்பதாகவே சுந்தரர் நினைத்துக்கொண்டார்.

படகு நீரில் மிதந்து, நீரையும் அலைகளையும் கிழித்துக்கொண்டு ஓடத்தொடங்கியது. சுந்தரம்பிள்ளை தனது பார்சல்களைப் பார்த்தார். வேக்ரெண்டும் அணியத்தினுற் இருந்தது. அவை வெளியில் தெரியவில்லை. ஆனால் கொழும்பில் "நல்ல காட்டில் மலிவு விலையில்" அடித்துவரப்பட்ட பத்திரிகை பார்சல் மட்டும் நல்ல பொலித்தீன் பையில் கட்டப்பட்டு அவர் பார்வை பட்டுக்கொண்டிருந்தது.

படகு வேகம் பிடித்திருந்தது. கரையில் தெரிந்த வெளிச்சங்கள் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டிருந்தது. இப்போது பெரிய பெரிய அலைகளில் 'போர்ட்' துள்ளி விழுந்து ஓடிக்கொண்டிருந்தது. ஆழ்கடலை அடைந்துவிட்ட நிலையில்,

"இண்டைக்கு இவன் இன்னும் 'ப்போக்கஸ்' அடிக்கையில்லை; ஏனெண்டு தெரியல்ல."

அங்கிருந்து ஒருவர் இன்னொருவரிடம் கூறிக்கொண்டிருந்தார். திடீரென அணியத்திலிருந்த ஓட்டியின் வழிகாட்டி... "அண்ணே... திருப்பு... திருப்பு நேவிக்காரன் வாறான் திருப்பு..."

உடனே படகு தனது பாதையிலிருந்து விலத்தியோடியது. படகிலிருந்தவர்களின் இதயங்கள் பயத்தினால் வேகமாக அடித்துக்கொண்டன. தத்தமது கடவுள்களை ஒவ்வொருவரும் வாய்விட்டுக் கூப்பிட்டனர். சில பெண்கள் அழத்தொடங்கினர். நீச்சல் தெரியுமோ... தெரியாதோ... அனேகமானவர்கள் கடலில் குதிப்பதற்கு வழிபார்த்தனர். ஒருவர் அணியத்திலிருந்த சாமான்களை அகற்றிவிட்டு அதில் ஒளிவதற்கு வழிதேடினார்.

சுந்தரம்பிள்ளையின் கை, கால்கள் உதறின... நல்லூரானையும், நயினை அம்மனையும் கூப்பிட்டார். பதறிய மனத்துடனேயே பார்சலைப் பார்த்தார். அது மட்டும் அமைதியாக கவனமாக இருந்தது.

"கரைக்குத் திருப்பச்சொன்னா, நீயேண்டாப்பா தொடர்ந்து கடலிலேயே ஓட்டிறனீ...?

பயணிகளில் ஒருவர் ஓட்டியைப் பார்த்து ஆத்திரத்துடன்கூற,

அது பிரச்சினையில்லை; அங்க கடற்புலிகள் போகுது. இனி எங்களுக்குப் பயமில்லை".

ஓட்டி கூறியவுடன்தான் அனைவரது கண்களும் அத்திசையை நோக்கின. அங்கு "தீபாவளி, வருடப்பிறப்புக்களின் போது நடைபெறும் வாணவேடிக்கைகள் போல தொடரும் நெருப்புப்புள்ளிகள் மூன்று திசைகளிலிருந்தும் ஒரு இடத்திற்குச் சென்றுகொண்டிருந்தன. ஆனால் அந்தவொரு இடத்திலிருந்து மட்டும் நெருப்புத்துளிகள் விட்டுவிட்டு மூன்று திசைகளுக்கும் பதிலடி கொடுத்துக் கொண்டிருந்தது.

"தொடர்ந்து சுடுவதுதான் நேவி. மூண்டு போர்ட்டில வந்திருக்கான்; எங்கட பெடியள் நடுவில நிண்டு சண்டை பிடிக்குதுகள். அவன்கிட்ட நிறைய ரவுன்ஸ் இருக்கு; அதான் தொடர்ந்து சுடுறான். எங்கட பெடியள் இருக்கிறதத்தானே அடிக்கவேணும். அதும் முடிஞ்சு போட்டா, என்னத்த செய்யுங்கள்!? அதான் ஒவ்வொண்டா அடிக்குதுகள். எங்கட பெடியள் அடிக்கிற ஒவ்வொரு வெடியும் பிரயோசனமாத்தான் அடிக்குங்கள். நல்ல ஸ்பீட் போர்ட்டும் இருக்கவேணும் இந்த நேவிக்காரன் எந்த மூலைக்கு".

அனுபவம்பெற்ற ஒருவர் கூறிக்கொண்டிருந்தார். அங்கு கடலில் பெரிய பெரிய வெளிச்சங்களும், சிறிய வெளிச்சங்களும் தெரிந்தவண்ணமிருந்தன.

"கடவுளே எண்ட பிள்ளைகளைக் காப்பாத்து. அதுகள் எங்களுக்காக மரணத்தை இப்படித் தேடிப்போகுதுகளே; எண்ட பிள்ளைகளைக் காப்பாத்து கடவுளே!"

கரையில் வணங்கிய பெண் அழுதவண்ணம் கடவுளை இறைஞ்ச ஏனைய பயணிகள் அவளை இரக்கத்தோடு பார்த்தனர்.

சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. ஒரு பக்கம் படகுப்பயணமும் நடந்துகொண்டிருந்தது. தெரியும் வெளிச்சங்களுக்குரிய சத்தங்கள் காதைப் பிளப்பனவாகத் தானிருக்கும். ஆனால், படகு இன்ஜீன் சத்தத்தால் பயணிகள் ஒருவருக்கும் அது விளங்கவில்லை.

தொடர்ந்த வெளிச்சங்கள் மத்தியிலே திடீரென பெரியதொரு வெளிச்சம்...!! மின்னல் தோற்றுப்போகுமாற்போலத் தோன்ற, கடலும் ஒருமுறை அதிர்ந்து அமைதியுற்றது. பின் கொந்தளித்தது. பயணிகள் முகங்களில் பயம் சோகம் இளையோடியிருந்தது. அப்பெரிய வெளிச்சத்தோடு சகலதும் அடங்க சண்டை முடிந்தது. படகுப்பயணம் தொடர்ந்தது.

**"இது புலிக்கு கொண்டு போறதுதானே?" கல்யாணப் பத்திரிகையைப் பார்த்து சிங்கள இராணுவம் கேட்க... "இல்லை... ஐயா என்ர புத்தாட வெடிங்கிற்கு..." "உன்ர புத்தா... புலி... அதுக்குத்தானே... கல்யாணம்... நீ அங்கிட்டு நில்லு..."**

சுந்தரம்பிள்ளை பெருமூச்சுவிட்டவராக பார்சலைப் பார்த்தார். அது கவனமாக விருந்தது. கரையைப் பார்த்தார். கிளாலிக் கரையிலுள்ள வெளிச்சங்கள் தெரியத்தொடங்கின.

**"நான் சொன்னனான்தானே! இங்க அடிச்சிருந்தா, கார்ட் இவ்வளவு வடிவாயிருக்குமோ! அடிச்சதே அடிச்சனீங்கள், ஒரு ஐநூறுகூட அடிச்சிருக்கலாம்".**

கற்பகம், சுந்தரம்பிள்ளை கொழும்பிலிருந்து கொண்டுவந்திருந்த கல்யாணப் பத்திரிகையைப் பாத்துக்கொண்டிருந்தாள். சுந்தரம்பிள்ளை குளித்துவிட்டு வந்தமர்ந்தவர், அன்றைய ஈழநாதம் பத்திரிகை கிடப்பதைக்கண்டு... அதை படிக்கத் தொடங்கினார். அதில்...

"இரவு கிளாலிக் கடலில் கடற்படைப்படகு கரும்புலித்தாக்குதலால் நிர்மூலம் - இரவு கிளாலிக்கடலில் பயணம் செய்து கொண்டிருந்த மக்களைச் சூறையாட வந்த சிறீலங்கா கடற்படையினரை கடற்புலிகள் மறித்து தாக்குதல் -நடாத்தினர். இத்தாக்குதலில் கடற்படைக்குச் சொந்தமான நீருந்து விசைப்படகு (வாட்டர் ஜெட்) புலிகளின் கரும்புலித் தாக்குதலால் நிர்மூலமாக்கப்பட்டது."

என்று பிரசுரமாயிருந்தது. சுந்தரம்பிள்ளை நிமிர்ந்து இருந்தார். அவரின் கண்களின் கற்பகமும் அவள் கையிலிருந்த கல்யாணப் பத்திரிகையும் சின்னஞ்சிறிதாகத் தெரிய, அவரின் மனக்கண்ணில் தெரிந்த அந்தக்கரும்புலி பெரிதாகத் தெரிந்தான். காரணம் அக்'கோடடித்த' பேப்பரில் வந்த செய்தியே!! ■

## ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலைக்கும் ஒரு சிங்கள மொழி ஆசிரியர் நியமனம்

□ அம்பாறை சு.க. அமைப்பாளர் தகவல்

ஒவ்வொரு தமிழ்மொழிப் பாடசாலைக்கும் ஒவ்வொரு சிங்கள மொழி ஆசிரியரை நியமிக்க, எமது கட்சி முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாறு சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் சட்டத்தரணி ஏ. எம். சம்சுதீன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அம்பாறை மாவட்டத்தில் 43 பேருக்கு விரைவில் சிங்கள ஆசிரிய நியமனம் கிடைப்பதற்கு ஆவணசெய்யப்படும். கல்முனை வலயத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் போதிப்பதற்காக 65 பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்களில் 22 பேர் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டார். ■

## உப்பு உற்பத்தி ஊக்குவிப்பு

முல்லை மாவட்ட மாத்தலன் பகுதியில் பொதுமக்களிடமிருந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கைத்தொழில் பகுதியால் உப்பு சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதி மக்கள் குடும்பங்களாக அல்லது குழுக்களாகச் சேர்ந்து உப்பு சேகரிக்கும்போது, நாளொன்றுக்கு 600 ரூபா முதல் 700 ரூபா வரையில் சம்பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது. இப்பகுதியில் வாழும் அநேகமானோர் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வதால், இவர்களின் குடும்பநிலையை அறிந்து, நாளொன்றுக்கு 150 ரூபா முதல் 200 ரூபா வரையில் முற்பணமாகக் கொடுக்கப்படுகின்றது. ■

## வடதமிழீழ தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகள்

**1994** ஆம் ஆண்டுக்கான தமிழ் எழுச்சிவிழா அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இவ்விழாவில் இவ்வாண்டிற் செயற்படுத்திய பள்ளி மாணாக்கரிடையிலான தமிழ்மொழி கலைத்திறன் செயற்பாடுகளிலிருந்து, வடதமிழீழ மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட நிலைகளில் முதலிடம்பெற்று, மேல் நிலைக்குத் தெரிவான, வரையறுப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய பாடசாலைகளுக்கான வடதமிழீழத் தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்றன.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வணபிதா பிரான்சிஸ் யோசப் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை முல்லை, கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. கமலநான் அவர்களும் புதிதாக அமைக்கப்பெற்ற வன்னிப் பெருநிலப்பரப்புக்கான தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினது கிளையின் தலைவர் திரு. பொன் வினாயகமூர்த்தி அவர்களும் மங்கல விளக்கேற்றித் தொடக்கிவைத்தார்கள்.

தமிழீழத் தேசியக்கொடி தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் அவர்களால் ஏற்றப்பட்டது. வன்னி மாவட்ட மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் திரு. செல்வம் மாமா ஈகச்சுடரை ஏற்றிவைத்தார்.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வருகைதந்து, சிறப்புரையாற்றிய தமிழீழ அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்கள், "இன்று பல்வேறு தீயசக்திகளால் ஏற்படுத்தப்படும் பண்பாட்டுச் சீரழிவைத் தடுத்துநிறுத்தி, தமிழ் இனத்தைத் தூய்மையாய் வளர்ப்பதற்கு, பள்ளி மாணாக்கர்கள் மத்தியில் தூய தமிழ்ப் பயன்பாட்டை ஊக்குவிக்கவேண்டும் என்றும் சலுகைகளையல்ல, உரிமைகளை நோக்கி முழுமையான நம்பிக்கையுடன் வாழும் இனமாக நாம் இருக்கவேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார்.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு, உரையாற்றிய தமி

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலக உலா

# யூகோசிலேவியாவுக்கொரு பொசுனியா

# ருஸ்யாவுக்கொரு செச்சென்யா

## அன்று,

படையெடுப்பதா, வேண்டாமா என்கிற நீண்டகால தயக்கத்தின் பின், செச்சென்யா மீதான படையெடுப்பிற்கு உத்தரவிட்ட ருஸ்ய அரசுத் தலைவர் போரிஸ் யெல்ட்சின், அதன் பின்னர் வெளியில் முகம் காட்டவேயில்லை. இரண்டொரு நாட்களாக அவர் எங்கிருந்தார் என்பதே தெரியவில்லை. இதனால் மொஸ்கோவில் பெருத்த பரபரப்பே ஏற்பட்டது. பின்னர் தான் **'நிலையற்ற மனமும்' 'திரம்பிய போதையில் மிதப்பவருமான'** யெல்ட்சின் மொஸ்கோ நகர மருத்துவமனையொன்றில் இருப்பது தெரிய வந்தது. இச்சம்பவமே செச்சென்ய சிக்கலின் தீவிரத்தை

> "எந்த வரலாற்றுக் காரணிகள் யூகோசிலேவியாவை முன்னாள் யூகோசிலேவியா என்று சொல்லவைத்தனவோ அவை இப்போது ருஸ்யாவுக்குள்ளும் இயங்கத் தொடங்குகின்றன. பொசுனிய முசுலிமக்கட்கு எதிராக சேர்பியரின் பெரும் தேசிய வாதத்திற்கு துணை போகும் யெல்ட்சின் முசுலிம் பகுதியான செச்சென்யா மீது படையெடுத்திருப்பது வரலாறு மீண்டும் திரும்புகின்றது என்பதையே குறிக்கின்றது."

விளக்கப் போதுமானது. ஏனென்றால் 19 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் 12 இலட்சம் மக்களை உள்ளடக்கிய சிறிய நாடான செச்சென்யா 1991 ஆம் ஆண்டு ஏனைய முன்னாள் சோவியத் குடியரசுகள் செய்ததுபோல, சுதந்திரப் பிரகடனம் செய்தபோது அதைத் தடுக்க ருஸ்யாவால் முடியாது போயிற்று. செச்சென்ய மக்கள் தமது விமான நிலையத்தை மூடி, தமது நாட்டில் இருந்த ருஸ்யத் துருப்புக்களை அப்போது வெளியேறச் செய்துவிட்டனர். குழம்பிய நிலையில் இருந்த அப்போதைய ருஸ்ய இராணுவம் பணத்திற்காக விற்ற சுடுகலன்களால் அப்போதே செச்சென்யா நிரம்பி வழிந்ததாகக் கூறப்பட்டது. அன்று தொட்டே செச்சென்யாவின் முக்கியத்துவம் கருதி அதைத் தன்னோடு இணைக்க ருஸ்யா படாதபாடுபட்டு வருகின்றது. இவ்வாறுதான் ஜோர்ஜிய மாநிலம் பிரிந்தபோது ஜோர்ஜியாவிலிருந்து பிரிய வேண்டி போரிட்ட அப்காசிய மக்கட்கு உதவியதன் மூலம் ஜோர்ஜியாவை 1993 ஆம் ஆண்டளவில் பணிய வைத்த தனது தந்திரத்தை இங்கும் யெல்ட்சின் செய்ய முனைந்தார். செச்சென்ய தலைவர் சோகார் துதாயேவுக்கு (Dzhokhar Dudayev) எதிரான உமர் அவ்டேக்கனேவுக்கு இரகசியமாக உதவிகளை வழங்கி செச்சென்யாவை பணிய வைக்க அவர் எடுத்த முயற்சி, செச்சென்ய வீரர்களால் ருஸ்ய போர் வீரர் சிறைபிடிக்கப்பட்டு பணயம் வைக்கப்பட்ட போது அம்பலமானதால் பெருத்த தோல்வியில் முடிந்தது.

தனது ருஸ்ய சாமிராச்சிய உடைவின் தொடக்கமாக செச்சென்யா அமைந்துவிடும் என்கிற பயத்தால், செச்சென்ய தலைவர்கட்கு தமது ஆயுதங்களை ஒப்படைக்க ஒரு காலக் கெடுவை நவம்பர்மாதம்வழங்கிய பின்னர், இப்போது செச்சென்ய தலைநகரான குரோஸ்னியை முற்றுகையிட ருஸ்ய இராணுவத்திற்கு யெல்ட்சின் உத்தரவிட்டார். இப்போது குரொஸ்னியின் பெரும்பகுதியை ருஸ்யஇராணுவம் கைப்பற்றிவிட்டது. ருஸ்யாவின் மிகையொலிதாரைவிமானங்கள் பேரிரைச்சலோடு குரோஸ்னி மீது பறந்து தாக்குகின்றன. தாங்கிகள், தாக்குதல் உலங்கு வானூர்திகள், பீரங்கிகள் சகிதம் ருஸ்ய இராணுவம் நகர்கின்றது. **ஆனால் இத்தகைய மிரட்டல்களுக்கெல்லாம் செச்சென்ய இசுலாமிய மக்கள் அஞ்சுகின்றவர்கள் அல்லர்.** அவர்கள் பண்பு அத்தகையது. அவர்கள் மட்டுமல்ல. வட கோக்கசஸ் மலை வாழ் பகுதி மக்களின் வீரப் பண்பு அத்தகையது. கிழக்கு ஐரோப்பாவிலேயே மிக்க வீரம் செறிந்த மக்களாக இவர்கள் கருதப்படுகின்றனர். எனவேதான் இன்று பாலர் தொட்டு முதியோர்வரை ருஸ்யாவிற்கு எதிரான போராட்டத்தில் குதித்து விட்டனர். தாமாகவே முன்வந்து வீதித் தடைகளை ஏற்படுத்தி தாங்கிகள் நகராமல் மனிதத் தடைகளை ஏற்படுத்தி ருஸ்ய இராணுவத்தை திட்டித் தீர்க்கின்றனர். கிராமங்கள் தோறும் போராட்டக் குழுக்களை ஏற்படுத்துகையில் அகப்பட்ட ஆயுதங்களோடு வீதிக்கு வந்து விட்டனர். பாரிய ருஸ்ய இராணுவத்தின் நகர்வு அவர்களுக்கோ அவர்களின் தலைவர் துதாயேவுக்கோ அச்சத்தையோ அல்லது ஆச்சரியத்தையோ சற்றும் ஏற்படுத்தவில்லை. இது அவர்கள் எதிர்பார்த்தது தான். ஏனென்றால் விடுதலையின் விலையென்ன என்பது அவர்கட்கு வரலாற்றுப் பாடம். பாரிய இராட்சத இயந்திரக் கருவிகட்கு தீனியாகத் தமது குருதியை, தமது சொந்த மண்ணில் இப்போது அவர்கள் சிந்துகின்றார்

## இன்று,

கள். ஏனென்றால் **அவர்களின் மரபு "சரணடைந்து அவமானப் படுவதைவிட சாவதே மேல்"** என்பதே ஆகும்.

பெரும் எடுப்பில் ருஸ்ய இராணுவம் குரோஸ்னியை நோக்கி நகர்ந்தபோதும் அது நகருக்குள் பிரவேசிக்குமா என்பது ஐயமே. அப்படி பிரவேசித்தாலும் 4 இலட்சம் மக்களைக் கொண்ட மலைப்பாங்கான இந்நகரின் வளைந்த குறுகிய வீதிகளிலே மிக மோசமான அபாயங்களை ருஸ்யப் படை எதிர்நோக்க நேரிடும் என்றே, இப்போது குரோஸ்னிய நகருக்குள் தங்கியிருக்கும் பி.பி.சி முகவரும் கூறினார். இப்போது குரோஸ்னிய நகரிலே மக்கள் நடமாட்டம் இல்லையென்றும் ஆயுதம் தாங்கியோரும், ஒரு சில முதியோருமே தென்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிடு

> "விடுதலையின் விலையென்ன என்பது அவர்கட்கு (செச்சென்யருக்கு) வரலாற்றுப் பாடம்;பாரிய இராட்சத இயந்திரக் கருவிகட்கு தீனியாகத் தமது குருதியை, தமது சொந்த மண்ணில் இப்போது அவர்கள் சிந்துகின்றார்கள்.ஏனென்றால் அவர்களின் மரபு,சரணடைந்து அவமானப்படுவதைவிட சாவதே மேல் என்பதே ஆகும்."

கின்றார். குரோஸ்னிய நகரை முற்றாக வளைத்து பாதைகளைத் துண்டித்து தலைமையைச் சரணடையச் செய்ய ருஸ்ய இராணுவம் முயலலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால் தமது மானம் காக்க போராடத் தயங்காத செச்சென்யர் மலைப் பகுதிகட்குப் பின் வாங்கி தொடர் கெரில்லாப் போராட்டமொன்றை தொடங்குவர் என்பதே இன்றைய நிலை. **"எங்களை இப்போதைக்கு வேண்டுமானால் வெல்லலாம்; ஆனால் வென்றவர்கள் சவப் பெட்டிகளில்தான் திரும்பிச் செல்ல வேண்டும்"** என அம்மக்கள் தலைவர்கள் அறைகூவுகின்றனர். தூங்கிக் கிடக்கும் ஓநாயை (ஓநாய் செச்சென்யரின் தேசிய விலங்கு) இடறி எழுப்பினால் உலகிலே மிக அபாயமான விலங்காக அது மாறும் என துதாயேவ் கூறிவிட்டார். இக்கூற்றுக்களை இம்மக்கள் பற்றி அறிந்தோர் வெறும் பேச்சுக்களாகக் கருதவில்லை. எனினும், இப்போது மேற்குலகே மௌனம் காக்கின்றது. அமெரிக்காவோ இது யெல்ட்சினின் உள் வீட்டு விவகாரம் எனக்கூறி முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. ஆயினும், விரிந்து பரந்து கிடக்கும் இசுலாமிய உலகிலோ மெலிதான எதிர்ப்புக்குரலை துருக்கியும், பாக்கித்தானும் எழுப்புகின்றன. ஆனால் நீண்டகாலமாக வாய்திறவாதிருந்த லிபியத் தலைவர் கேணல் கடாபியோ "செச்சென்ய முசுலிம் மக்களைக் கொல்வது என்பது இசுலாமிய உலகோடு யெல்ட்சினின் உறவுகளைப் பாதிக்கும்" என கடுப்பாக அறிக்கை வெளியிட்டுள்ளார். வட கோக்கசஸ் பகுதி வாழ் ஏனைய மக்கள் ருஸ்ய ஆக்கிரமிப்பைக் கண்டிக்கின்றனர். எதிர்க்க முற்படுகின்றனர். இசுலாமியவாத அடிப்படைக் குழுக்கள் விழிப்படைகின்றன. இப்போது அரசியல் ஆய்வாளர்களோ பொசுனியாவிற்கு அடுத்தது, செச்சென்யா என தமது ஆய்வுகளை முடுக்கிவிட்டுள்ளனர். **எந்த வரலாற்றுக் காரணங்கள் யூகோசிலேவியாவை சீர் குலைத்து அதை இன்று முன்னாள் யூகோசிலேவியா என அழைக்க வைத்தனவோ, அக்காரணங்கள் இன்று ருஸ்யாவுக்குள்ளும் இயங்கத் தொடங்கிவிட்டன** என்றும், பொசுனிய முசுலிம்கட்கு எதிராக சேர்பியரின் பேரினவாதத்திற்குத் துணைபோகும் யெல்ட்சின், இப்போது செச்சென்யாவில் படையெடுத்திருப்பது **வரலாறு மீண்டும் திரும்புகின்றது** என்பதையே குறிப்பதாக வரலாற்றாளர் கூறி நிற்கின்றனர்.

யெல்ட்சினைப் பொறுத்தவரையில் செச்சென்ய சிக்கல் என்பது, ஏற்கனவே அவருக்குள்ள தொல்லைகளோடு பெரும் தொல்லையாகப் போகின்றது. படையெடுப்பிற்குத் தயக்கம் காட்டி இணக்கம் ஒன்றை அடையவே யெல்ட்சின் விரும்பியபோதும் செச்சென்யாவின் இயற்கைவளம், அதன் அமைவிடம் என்பதுவும் ருஸ்யாவின் உறுதிப்பாட்டிற்கு மிக்க அவசியமானவை என்பதால் அவர் படையெடுக்க முடிவு எடுத்தார் எனக்கருதப்படுகின்றது. மிக்க இயற்கை வளங்கள் நிரம்பிய கோக்கசஸ் பகுதியை இழப்பதையே செச்சென்யாவின் பிரிவினை குறிக்கும். **மேலும் மத்திய ஆசியப் பகுதிகளையும், கஸ்பியன் கடல் பகுதிகளிலுமுள்ள நிரம்பிய எண்ணெய் வளமுட்பட பாரிய இயற்கை வளப் பகுதிகளை இணைக்கும் வீதிகள், பெரும் குழாய்கள் என்பனவும் இப்பகுதிக்கு ஊடாகவே செல்கின்றன.** இவற்றில் பல இப்போது கிளர்ச்சியாளரால் நாசமாக்கப்பட்டு விட்டன. அத்தோடு முன்னர் செச்சென்யா ஆண்டு தோறும் மிகஅதிகமான எண்ணெயை தமது சுத்திகரிப்பு ஆலைகள் மூலம் உற்பத்தியாக்கின. இன்று இவற்றில் 1/5 பங்குகூட ருஸ்யாவிற்கு இப்போது கிடைப்பதில்லை. அத்தோடு இன்று ருஸ்யாவை ஆட்டிப்படைக்கும் 'மாபியா' இரகசிய வன்முறைக்குழுக்களோடு, சில செச்சென்யருக்குத் தொடர்பு




இருப்பதாக வேறு யெல்ட்சின் ஐயமுறுகின்றார். இத்தகைய காரணங்கட்காகவே அவர் படையெடுப்பிற்கு உத்தரவிட்டபோதும் இப்போது ருஸ்யாவிலே குறிப்பாக மொஸ்கோ நகரிலேயே பெருத்த இராணுவ பாதுகாப்புக்கள் செய்ய வேண்டிய அவல நிலை தோன்றிவிட்டது. கொழும்பு நகரிலே சிங்கள இராணுவமும், பொலிஸ் துறையும் கூறுவதுபோல் **"குண்டுகள் வெடிக்கும் கவனம்"** என்றும் **"பொதிகளைக் கண்டால் தூர விலகுங்கள்"** என்றும் பலத்த எச்சரிக்கைகளும் தேடுதல்களும் இப்போது ருஸ்யரை வாட்டுகின்றன. ஏனென்றால் இடம்பெயர்ந்து வாழும் 2 இலட்சம் செச்சென்ய முசுலிம் மக்கள் ருஸ்யாவில் பரந்து வாழ்கின்றனர். ஏறத்தாழ 40 ஆயிரம் பேர்வரை மொஸ்கோ நகரில் இருப்பதாகத் தெரிகின்றது. எனவேதான் துதாயேவ் "மொஸ்கோ, குரோஸ்னியைத் தாக்கினால் குரோஸ்னி மொஸ்கோவை தாக்கும்" என எச்சரித்ததன் பொருள் இதுவாகிவிட்டது. இதைத்தான் யெல்ட்சினின் உதவியாளர் **"எதைத்தான் நாம் செய்தாலும் இறுதியில் அது மோசமான விளைவுகளையே தருகின்றது"** என்றார்.

இவை எல்லாவற்றிக்கும் அடிப்படைக்காரணம். ருஸ்யா ஒரு தேசிய இன நாடல்ல என்பதே. ருஸ்யாவின் பெரும் தேசிய இனமான ருஸ்யர்க்கும் ஏனைய பல தேசிய இனங்கட்கும் உள்ள முரண்பாடு மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. **ருஸ்ய சம்மேளனத்தின் இன, மொழி, மத, பண்பாட்டுத்தோற்றம் உலகிலே எங்கும் காணப்படாத சிக்கலான தன்மை கொண்டது.** 100 க்கு மேற்பட்ட பல்வேறு இனக்குழுக்கள் அங்கு உண்டு.

152 மில்லியனுக்கு மேற்பட்ட ருஸ்ய குடித்தொகையில் 40 மில்லியனுக்கு மேல் ருஸ்ய இனத்தை சேராதோர். தாத்தாரியர், முசுலிம்கள், மொங்கோலியர், கோகசஸ் பகுதியினர், யூதர், ஸ்பெக், துருக்கியர் என பல்வேறு தரப்பினர் அங்குண்டு. ருஸ்ய முடியரசுக் காலத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்ட இவர்கள் ருஸ்யப் புரட்சியின்பின் ஸ்டாலின் காலத்தில் கடும் அடக்கு முறைகட்கு உட்பட்ட போதும் தமது தேசிய அடையாளங்களை இன்று வரை காற்பாற்றியே வந்துள்ளனர். பொதுவுடமைக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இவர்கட்கும் ருஸ்யப் பெரும் தேசிய இனத்திற்குமுள்ள

தமிழீழத்திலிருந்து
பாலகுமாரன்

முரண்பாடுகள் மறையாத போதும் அவை தணிவிக்கப்பட்டன. ஏனென்றால் அக்காலத்தில் ஏழை விவசாய தொழிலாளி பின்னணி கொண்ட அவ்வத் தேசியங்களைச் சேர்ந்தோரில் பொதுவுடமைவாதிகளாக அடையாளம் கண்டோர் அவ்வவ் உள்ளூர் பகுதி தலைமைக்கு உயர்த்தப்பட்டமையும் உள்ளூர் மட்டத்தில் குறிப்பிட்டளவு சொந்தப் பண்புகளைப் பேண வழிவகுக்கப்பட்டதுமே காரணம். ஆனால் சோவியத் வீழ்ச்சியோடு எல்லா உறவுகளுமே முறிந்துவிட்டன. விட்ட இடத்திலிருந்து தொடர இம்மக்கள்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைக்கு விழுதாய் நின்றவன்!

இலட்சியம் சுமந்த இமயமொன்றை
அசோகச் சக்கரம் அள்ளிச்சென்றதோ?
வங்கக் கடல்மீது வந்தவர்கள்
தங்கத் தமிழீழம் காணமுன்பு
ஆக்கிரமிப்பு அலைகள் அள்ளிச்சென்றன.
கிட்டண்ணா!
தாயகக்கனவு சுமந்த நெஞ்சு
தானைத் தலைவனைக்காண வந்தபோது
பாரத நாடு உன்னைப் பறித்ததோ!
விடியலுக்காய்ச் சென்றவனே
விடுதலைக்கு விழுதாய் நின்றவனே
ஓராண்டின் நினைவலைகள்...
எங்கள் நெஞ்சோடு
உங்கள் கனவலைகள்.
கிட்டண்ணா!
உன் உருவம் சீறிவருகையில்
சிங்களப்படை சிதறி ஓடும்.
சுற்றி நின்ற கால்கள் வலுப்பெறும்.
எந்த முற்றுகையின்
முதுகெலும்பையும் முறித்தவன் நீ.
வெற்றிதந்த உன் கால்களிலொன்று
வெறுமையாகிப் போன போதும்
தமிழீழத்தின்மீது தளராது தாகமுற்றவன்.
கடல்கடந்த திசையாவும்
களங்கண்ட வேங்கைகளின்
வீரமதை விளங்கச் செய்தவன்.
தலைவனது கனவுகளின்
பெரும் பரப்பாய் நின்றவனே
நீர்ப்பரப்போடு கரைந்தாய் நீ.
நீறுபூத்த விழிகொண்டு தேடுகிறோம்
நீ தோழர்களோடு
துயின்ற கடலை.
வானம் தொட்டு அலை ஆர்ப்பரிக்கும்.
நெருப்பெறிந்து முகில் நீண்டு செல்லும்.
விழிப் பொறிகக்க புலிவீரர்
புதிதாய்ப் பிறப்பர்.
எதுவந்த போதும்
தமிழ் ஈழத்துக்காய் எழுவர்!

கொற்றவை

# விடியலுக்குத் தூதுவந்த வெள்ளைப்புறா

இப்போது நினைத்தாலும்
எங்கள் இதயம் வெடிக்கிறது!
தங்கத் தமிழ்த் தலைவன்
தம்பியின் வலக்கரமான நீ
தாயகத்து மண்மீது
தடம் பதிக்க வந்தவேளை...
தருணம் பார்த்திருந்து
தருக்கர் உன்னை அழித்ததனை
இப்போது நினைத்தாலும்
எங்கள் இதயம் வெடிக்கிறது!
விம்மி விம்மி அழுது எங்கள்
விழிகள் இறக்கிறது!
நாம்வடித்த நீருறி இந்த
நிலம் நனைந்து போகிறது!
வெடித்துச் சிதறியபின் – நீயற்ற
வெறுமையை எண்ணி எண்ணி
வேதனை பிறக்கிறது!
விடியலுக்குத் தூதுவந்த
"வெள்ளைப்புறா" உன்னை
ஏகாதிபத்தியத் தீவிழுங்கி
ஏட்டமிட்டு இன்றோடு
ஈராண்டு முடிகிறது! எங்கள்
உள்ளம் அழுகிறது!

சிங்களத்துச் சேனைகளைச்
சீறியே விரட்டி நின்ற
உதயத்துக்கதிரே... எங்களது
உறுதியின் உறைவிடமே,
வாடுகின்ற எங்களுக்கு
வழியொன்று சுமந்துவந்தாய்.
வாசல்வரை வந்த உன்னை
வழிமறித்து நின்றார்கள்.
முன்னாலே வந்திருந்தால் உன்
மூச்சாலே எரித்திருப்பாய்!
எங்களின் விடிவெள்ளி நீ
எதிரி கையில் அணையவில்லை!
சங்கத் தமிழ் மரபு
சாற்றிநின்ற வீரத்தை
எங்கள் தமிழ்மண்ணில் – மீண்டும்
எழுதிய மறவன் நீ!
கிட்டண்ணா! நீ இங்கு
விட்டுச் சென்ற பணிகளை நாம்
தொட்டுத் தொடர்வதற்குத்
தோள்களை உயர்த்தியுள்ளோம்.
மீட்டு நாம் எடுப்போம்
மிகவிரைவில் தாயகத்தை!

ஆதிலட்சுமி சிவகுமார்



கிட்டண்ணா நினைவாக

சுதந்திரப்பறவைகள்

## கவிதைக் களம்

# மீண்டும் ஒருமுறை

எறிகணைகள் எங்கும் பாய
எரித்திடும் குண்டு வீழ
வந்த பகைக் கூட்டமதை
சிறை வைத்த வீரன் எங்கே?

களம் பல கண்ட மகன்
கனலென புகுந்த தீரன்
மின்னலென அடி கொடுத்து
வெற்றி முரசம் கொட்டிடுவான்.

வஞ்சனையர் வைத்த குறி
காலினைக் கவர்ந்த போதும்
அஞ்சாது துணிவு கொண்டு
ஆற்றலுடன் உலாவந்தான்.

அமைதியென்று வந்தபடை
அர்த்தமற்று போர் தொடுக்க
குறிதவறாக் கத்தியெல்லாம்
குழியினுள் புதைந்ததுவே.

களத்தினில் போர்க் கானம்பாடிய குயில்
கண்டங்கள் பல கடந்து
தமிழ் கேட்கும் திசையெங்கும்
கடமை செய்ய விரைந்ததுவே.

செய்த மன நிறைவுடனே
இனிய தாயகம்காண வருகையிலே
வங்கக் கடலதனில் வல்லரசு வந்ததுவே
தோழருடன் தளபதியை தன்னகத்தே
கவர்ந்திட.

ஒன்பது வேங்கையுடன் ஒன்றானாய்.
கடமையே கண் எனும் தாரக மந்திரத்தின்
தார்மீகம் உணர்ந்த நீ
கடலினில் கரைந்து காவியமானாயோ.

ஆண்டுகள் ஆயிரம் ஆயினும்
ஆறாதையா எம் நெஞ்சம்.
மீண்டும் ஒருமுறை
பிறப்பெடுத்து வந்துவிடு.

விடியலின் பூபாள இசை
காற்றிடை கலந்து வரும்
கானமதைக் கேட்பதற்கு
மீண்டும் ஒரு முறை
பிறப்பெடுத்து வந்து விடு

- காவேரி

# ஆயிரமாய் நடக்கின்றோம்

ஒரு விடிவெள்ளி துயில் கொள்கிறது.
தாய் நிலம் அழுவதால்
மனம் பொங்கி எழுந்த
விடிவெள்ளி துயில்கிறது.

தலைவனின் தூதனாகத்
தரணி முழுதும் சுற்றிவந்தவனே!
நீலக் கடலலைக்குள்
உன்னைத் தேடுகிறோம்.
நீயும் உன் தோழர்களும்தான்
எம் விழிகளுக்குள் தெரிகிறார்கள்.

அன்று
அந்நியனோடு களமாடுகையில்
அக்கினிக் குழம்பானாய்.

எதிரிகூடப் புலிகளை வியந்தான்.
அதற்கு அடித்தளமிட்டவன்
நீயே.

இப்போ நீ
இங்கு இல்லையென்று நாம் ஓய்ந்தோமா?
உன் உருவாய்
உணர்வுகளைச் சுமக்கின்றோம்.
நீ சென்ற பாதையில்
ஆயிரமாய் நடக்கின்றோம்.

அமுதநிலா

# வீரத்தமிழ் தளபதி

வல்வைக்கரையோடெழுந்த புயல் ஓய்ந்ததோ!
வண்ணத்தமிழ் ஈழமதின் மலை சரிந்ததோ!
வங்கக்கடல் அலைமடியில் புலி தவித்ததோ!
வஞ்சகரால் எங்களது குயில் மடிந்ததோ!

சிங்களத்துப் படைகலங்கும் நாமம் கொண்டவன்.
சிந்தனையில் ஈழமக்கள் வாழ்வைக் கொண்டவன்.
சிறுமலர்கள் இதயமதில் சிரித்து நின்றவன் – சினம்
கொண்டெழுந்து தன்னுயிரைத் தான்தகர்த்தவன்.

நெஞ்சமதில் விடுதலைத் தீ ஏந்தி வென்றவன்.
தம்பி கனவுகளின் உருவமாகிக் களங்கள் கண்டவன்.
இரக்கமற்ற கொடியவரின் நினைவறிந்தவன் – வந்த
கப்பலோடு தான் எரிந்து மானம் காத்தவன்.

வெங்களத்திலாடிய எம் வேங்கை வீழ்ந்ததால்
வேதனையில் இதயமெல்லாம் வெந்துபோகுதே!
வீரத்தமிழ்த் தளபதியை இழந்துபோவதோ – என்று
நெஞ்சமெல்லாம் தவித்தவனைத் தேடி நிற்குதே.

தமிழவள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரண்டாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

இந்தியத் துரோகத்தால் வங்கக்கடலில் காவியமான **கேணல் கிட்டுவினதும் 9 சக போராளிகளினதும் 2 ஆம் ஆண்டு நினைவாக** இரங்கல் கூட்டமொன்று 07.01.95 சனிக்கிழமை **அவுஸ்திரேலியாவில்** நடைபெற்றது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் **மெல்பேர்ண் கிளையினால்** ஒழங்கு செய்யப்பட்டிருந்த இந்நினைவு நாள் நிகழ்ச்சி மாலை 6.30 மணிக்கு மெல்பேர்ண் YWCA மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அவுஸ்திரேலியப் பிரதிநிதி திரு. தி. ஜெயக்குமார் அவர்கள் தளபதி கிட்டுவினதும் சக போராளிகளினதும் திருவுருவப் படங்களுக்கு தீபமேற்றி நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் போரில் உயிர் நீத்தவர்களுக்கு அமைதிவணக்கம் செய்யப்பட்டது.

தளபதி கிட்டுவினதும் சகபோராளிகளினதும் வீரம், விவேகம், தியாகம் எல்லாவற்றுக்கும் மேலாக இவர்களது தற்கொடை பற்றி உரைகள், கவிதைகள் என்பன இடம்பெற்றன. தளபதி கிட்டுவுடன் பழகியவர்களால் அவரது இலட்சியம், வாழ்க்கை முறை பற்றி நினைவு கூறப்பட்டது. இறுதியாக, தமிழீழத்தில் நடைபெற்ற இவர்களது நினைவுக்கல் நாட்டலும் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒளிநாடா வெண்திரையில் காண்பிக்கப்பட்டது.

**"கிட்டு, நீ சாகவில்லை; ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்"** என்று தலைவர் கூறியது போல், தளபதி கிட்டுவும் சக போராளிகளும் அவுஸ்திரேலிய வாழ் தமிழ் மக்கள் மனதில் இன்றும் விடுதலை வேட்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## யேர்மனியில்
# உலகத்தமிழர் இயக்கம் நடாத்திய பொங்கல்விழா
### ஐந்து மாநிலங்களில் 2000 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்

புலம்பெயர்ந்த மண்ணிலும் தமிழ் மாணவர்களின் எதிர்கால நலன்கருதி அவர்களின் தாய் மொழி, சமூகப்பொது அறிவு வளர்ச்சிக்காக யேர்மனியில் 78 தமிழாலயங்களை அமைத்து நடாத்திவரும் உலகத்தமிழர் இயக்கத்தினர் 14.01.1995 சனிக்கிழமையன்று யேர்மனியில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் கலந்துகொள்வதற்கு வசதியாக ஐந்து மாநிலங்களில் பொங்கல் விழாவினை சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தனர். டோட்மூண்ட், கனோவர், பேர்லின், கைவ்புறோன், ஆகிய இடங்களில் தமிழாலயங்கள் இணைந்தும் பிராங்போட் நகரில் உலகத்தமிழர் இயக்கத்தினரும் இப்பொங்கல் விழாவினை நடாத்தினர். இவ்விழாக்களில் கவிதைகள், கட்டுரைகள், பேச்சுக்கள், நடனங்கள், நாடகங்கள் என பல நிகழ்ச்சிகளை நடாத்திய தமிழாலய மாணவ, மாணவிகள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டி விழாவை சிறப்பித்ததுடன், கூடியிருந்த மக்களின் பாராட்டையும் பெற்றுக்கொண்டனர்.

டோட்மூண்ட் நகரில் நடைபெற்ற பொங்கல் விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உலகத்தமிழர் இயக்கக் கல்விப்பணிப் பொறுப்பாளர் இ. நாகலிங்கம் அவர்கள் உரையாற்றும் போது, "தமிழரின் பாரம்பரிய, இயற்கையோடு ஒன்றிய அர்த்தமுள்ள விழாக்களிலே சூரிய பகவானைத் தெய்வமாகக் கொண்ட உழவர்திருநாளான இப்பொங்கல் விழாவினை வெளிநாடுகளிலே நம் சிறார்கள் மறந்துவிடக்கூடாது; எமது பாரம்பரியம் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக உலகத்தமிழர் இயக்கத்தின் தமிழாலயங்களை இணைத்து, இவ்விழாவினை இங்கு நடத்திக்கொண்டிருக்கின்றோம்" என்று கூறினார். தொடர்ந்து பேசிய அவர், தமிழ் இனத்தின் பாரம்பரியம் இயற்கையோடுகூடிய அர்த்தமுள்ள இவ்விழாக்களின் சிறப்புக்கள் என்பனவற்றை விரிவாகக்கூறியதுடன், தமிழ் இனம் தன்மானத்துடன் வாழ மலரப்போகும் தமிழீழத்திற்கும் எமது அமைப்பின் வளர்ச்சிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என, இப்பொன்நாளிலே அனைவரையும் கேட்டுக்கொள்வதுடன், அனைவருக்கும் உலகத்தமிழர் இயக்கத்தின் சார்பில் பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

மேலும் அனைத்து மாநிலங்களிலும் அனைவரும் பாராட்டத்தக்கவகையில் பொங்கல்விழா நிகழ்ச்சிகள் அமைந்ததுடன், தாய் மண்மீதுகொண்ட விடுதலை உணர்வை வெளிக்காட்டுமுகமாக நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள், பேச்சுக்கள் என்பனவும் நடைபெற்று மிகவும் சிறப்பான முறையில் பொங்கல் விழா இனிது நிறைவுற்றது.

## இத்தாலி - பலேர்மோ நகரில்
## 2ம் லெப். மாலதி கலைப்பள்ளி மாணவிகளின் கலை நிகழ்வு



கடந்த 6-01-95 ஞாயிறு காலை 10.00 மணிக்கு இத்தாலி பலேர்மோ மாநகரில் அன்னை திரேசா அமைப்பின் கன்னியாஸ்திரிகள் தொண்டர் சேவையாற்றிக்கொண்டிருக்கும் CASA DI REPOSA எனும் அமைப்பின் அழைப்பின் பேரில், அவர்களது மண்டபத்தில், 2ம் லெப். மாலதி கலைப்பள்ளி மாணவிகள் எமது கலை,பண்பாட்டை தெரியப்படுத்தவும், எமது இனப்பிரச்சினையை தெரியப்படுத்தும் நோக்குடனும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இவர்களின் நடனங்கள் இத்தாலிய மக்களினதும், கத்தோலிக்க மத குருமார்களினதும் பாராட்டுக்களைப் பெற்றன. விழா முடிவில் இத்தாலியச் சிறார்களுடனும், அவர்களது பெற்றோர்களுடனும், எமது மாணவிகள், ஆசிரியர், பெற்றோர்கள் சிறு விருந்துபசாரத்தில் பங்கு கொண்டனர். பலத்த கரகோசத்துடன் விழா முடிவுற்றது.



## இத்தாலியில்
# தளபதி கேணல் கிட்டுவுக்கும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய ஒன்பது வீரவேங்கைகளுக்கும் 2ம் ஆண்டு வீரவணக்க நிகழ்ச்சி



சென்ற 15-01-95ஆம் திகதி ஞாயிறு காலை 10.00 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும், சர்வதேசச் செயலகப் பொறுப்பாளருமான கேணல் கிட்டு அவர்களும், அவருடன் அக்கினியில் குளித்த ஒன்பது வேங்கைகளும் இந்திய, சிறீலங்காவின் கபடச் சதியால் மானம் காக்க கடலுடன் கலந்த இரண்டாம் ஆண்டு கனத்த நாளில், அந்நினைவு நாளில் பலெர்மோ தமிழர் ஒருங்கிணைப்புக் காரியாலயத்தில் 100க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். அவர்களை நெஞ்சிலேற்றி வணக்கம் செலுத்தும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட அடையாள உண்ணா நோன்பிலும் பங்கெடுத்தனர். அந்தக் காவிய நாயகர்களுக்கு தூய கண்ணீராலும், பூக்களாலும் மாலதி கலைப்பள்ளி மாணவிகள் மலரஞ்சலி செய்து உண்ணா நோன்பைத் தொடக்கி வைத்தனர். இரவு 8.00 மணிக்கு இத்தாலிக் கிளை பிரதிநிதியின் வீரவணக்க உரையுடன் உண்ணா விரதம் முடிவுற்றது. அவர் தனது உரையில் இந்திய அரசின் கபடத்தனத்தையும், அது தொடர்ந்து கொண்டிருப்பதையும், எம் உயிர் உள்ளவரை இத்துரோகத்தனத்தை மறக்கக்கூடாது என்றும், எம் உணர்வோடும், உடலோடும் கலந்து விட்ட அந்தக் காவிய நாயகர்களை நாம் வாழும் காலம் பூராகவும் நினைவுகொள்ளல் வேண்டும் என்றும் கூறியிருந்தார். அவ்வீரர்களின் நினைவுடன் நிகழ்வு நிறைவு கண்டது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதலாவது, இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இடம்பெற்ற சில காட்சிகள்





**விடுதலைப் புலிகள் சார்பில்**

1. திரு. தமிழ்ச்செல்வன் (தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர்)
2. திரு. கரிகாலன் (தமிழீழ அரசியற்றுறை துணைப்பொறுப்பாளர்)
3. திரு. ரவி (த.பொ.மே. நிறுவனப் பொறுப்பாளர்)
4. திரு. டொமினிக் (தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர்)
5. திரு. இளம்பருதி (யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர்)



**சிறீலங்கா அரசு சார்பில்**

1. திரு. பாலபட்டபெந்தி (ஜனாதிபதியின் செயலாளர்)
2. திரு. ராஜன் ஆசீர்வாதம் (இலங்கை வங்கித் தலைவர்)
3. திரு. நவீன் குணரத்ன (கட்டடக் கலைஞர்)
4. பிரிகேடியர் சிறி பீரிஸ்
5. கடற்படைக் கப்டன் பிரசன்ன ராஜரத்ன

03-01-95 ஆம் நாள் இடம்பெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது இடது பக்கம் த.வி.பு பிரதிநிதிகள், வலது பக்கம் அரசப் பிரதிநிதிகள். ஏனைய படங்கள் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்குரியன.





U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்